
புரட்டாதி - 2023



செம்பியன் செல்வன் நினைவுச் சிறப்பிதழ்

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

புரட்டாதி - 2023

படைப்புக்கள் அனுப்ப :

neythal34@gmail.com

mahendran1954@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- அட்டை ஓவியம் : நெகிழன்
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :

R.Mahendran,
34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk

- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,

A/C No: 90759821
Sort.Code: 20-67-88,
SWIFTBIC BUKBGB22
IBAN GB80 BUKB 2067 8890 7598 21
BARCLAYS BANK (PLAISTOW BRANCH)

நன்றி : இணையம், றஜிதா அரிச்சந்திரன் (புகைப்படங்கள்)


## வணக்கம்,

காற்றுவெளியின் புரட்டாதி மாத இதழ் (2023)-நமது ஈழத்து எழுத்தாளர் செம்பியன் செல்வன் அவர்களின் ஞாபகார்த்தமாக சிறப்பிதழாக உங்கள் பார்வைக்கு வருகிறது.காற்றுவெளி முன்னரே பல சிறப்பிதழ்களைக் கொண்டுவந்துள்ளது.சிற்றிதழ்களின் தொடர்ச்சியான வருகை என்பது வாசகர்கள்,படைப்பாளர்களின் கைகளிலேயே தங்கியுள்ளதை நாமறிவோம்.

அமரர்.செம்பியன் செல்வன் பலரும் அறிந்த எழுத்தாளர்.சிறுகதை,நாவல்,கட்டுரை என பலதுறைகளிலும் தடம் பதித்தவர்.தான் சேகரித்த நூல்களைப்போலவே எழுதிய படைப்புக்கள் அனைத்தும் யுத்தம், இடப்பெயர்வு,போன்ற பலகாரணிகளால் அழிந்து போனதின் வலி சொல்லிமாளாது. யுத்தம்,இடப்பெயர்வு ஆகிய இடர்களுக்கு முகம் கொடுத்த அநேக நமது படைப்பாளர்களுக்கும் ஏற்பட்டிருக்கும்.அழிவுற்ற பிரதிகளே அநேகம் என பலரின் கருத்து.

பலதடவைகள் சந்தித்து உரையாடிய பொழுதுகளில் பல கனவுகளைச் சுமந்தவராய் தெரிந்தார்.,சொல்லி சொல்லி நம்மையும் தன்னுடன் பயணிக்க வைத்தவர். இடப்பெயர்வின் போது நமது உறவுகளுடன் சில காலம் தங்கியிருந்தமையும், அனைவருடனும் அன்புடனும், நட்புடனும் பழகியதும் அவர்கள் சொல்லி நம்மை வியக்கவைத்தவர்.நேர்மையாகவும்,நற்பண்புகளுடனும் வாழ்ந்தவர்.அவரின் நினைவுகளுடன் பயணிக்க காற்றுவெளியும் விரும்பியது. சக படைப்பாளர்களைப் பற்றி ஆர்வமாய் உரையாடுவதும்,சமமாக சக படைப்பாளர்களை அறிமுகம் செய்வதிலும் அக்கறை கொண்டிருந்தார்.குறும்படங்கள்,திரைப்படங்கள் மீதான கரிசனையும் அதிகம் இருந்தது.

நண்பர் கண.மகேஸ்வரனின் தாரகை இதழில் அன்புமணி அவர்கள்(மலர் இதழின் ஆசிரியர்) செம்பியன் செல்வனின் நெருப்புமல்லிகை நாவலின் விமர்சனத்தை அண்மையில் வாசிக்கக்கிடைத்தது. மீள் வாசிப்பிற்குட்படுத்தவேண்டும் என்று தோன்றியது. இளைய தலைமுறையினருக்கு அவரின் -நூல்கள் பற்றிய தேடலில் இணையங்களில் கிடைக்கலாம். ஆனால் அழிந்த அவரின் தொடர்கதைகள் கிடைப்பின் பதிப்பித்தல் அவசியமாகிறது.

காற்றுவெளி தொடர்ச்சியாக கவிதைச் சிறப்பிதழைக் கொண்டுவரவுள்ளது.

முகநூலிலும்,தங்களின் தளத்திலும் சிறப்பிதழ்கள் பற்றிய தகவல்களை பதிபவர்களுக்கு எமது நன்றி.

நாளாந்தம் உலகில் நடைபெறும் அசாதாரண சுழலில் பாதிப்புறும் மக்களுக்கான பிரார்த்தனையில் காற்றுவெளியும் பங்குகொள்கிறது. காற்றுவெளிக்கு படைப்புக்கள் அனுப்புவோர் லதா எழுத்துருவில், பிழையின்றியும் அனுப்புங்கள்.நூலாக்கும் போது இவை உதவும்.

காற்றுவெளிக்கான சந்தாக்களை அனுப்புவதுடன்,நூல் அறிமுகத்திற்காக ஒரு பிரதியையும் அனுப்புதல் வேண்டும்.

தொடர்ந்து பயணிப்போம்.

அன்புடன்,
சோபா

# செம்பியன் செல்வன்
# நினைவுச் சிறப்பிதழ்

## செம்பியன் செல்வனின் படைப்புக்கள்:

- *முள்ளும் மலரும் (ஆன்மீகம்/ தத்துவம்)*
- *வர்க்கங்கள்(சிறுகதை)*
- *(குறுங்கதைகள் 2 ) 1.கையுறை, 2.பொறுக்கி –*
- *சர்ப்பவியூகம்(சிறுகதை)*
- *முட்கள் ஓடியும் ஓசைகள் (ஆன்மீகம் /தத்துவம்)*

## படைப்பாளர்களின் படைப்புக்கள் :

**கட்டுரைகள் :**

- *மட்டுநகர் கமல்தாஸ் (எழுத்துப்புரட்சியாளன் செம்பியன் செல்வன்)*
- *கானா பிரபா(அவுஸ்திரேலியா)*
- *என்.செல்வராஜா, (லண்டன்). (செம்பியன் செல்வன்: ஒரு நூல்வழிப் பதிவு)*
- *சுந்தரிமணியன், புதூர்(அமரர் செம்பியன் செல்வன் சிறுகதைகளில் சமுதாயப்பார்வை!)*
- *ஆதிலட்சுமி சிவகுமார் (சுவீஸ்).(படைப்புலகில் செம்பியன் செல்வன் - நுண் ஆளுமைகள் நிறைந்த கலைஞர்.)*
- *திக்குவல்லை கமால் ( இலங்கை)(வாழும் கதாமாந்தர்கள்)*
- *ஐங்கரன் விக்கினேஸ்வரா(அவுஸ்திரேலியா) (ஈழத்தின் தலைசிறந்த சிறுகதை சிற்பி!!*
- *தமிழின் முற்போக்கு இலக்கிய முன்னோடி!!!)*
- *என்.லாவண்யா (இலங்கை)(ஈழத்துச் சிறுகதை உலகில் செம்பியன் செல்வன்)*
- *யோகேஸ்வரி சிவப்பிரகாசம்(இலங்கை (விண் தொடும் வாமனம்)*

# எழுத்துப் புரட்சியாளன் செம்பியன் செல்வன்

மட்டுநகர் கமல்தாஸ்

ஒரு எழுத்தாளன் இறப்பதில்லை என்பது உண்மையாகிறது. அவர்கள் படைத்த படைப்புக்களை உற்றுவாசிக்கும் போதும் உச்சரிக்கும் போதும், அதுவே அவர்கள் ஒருபோதும் இறப்பதில்லை, இறந்தும் வாழும்அற்புத பிறவிகள் தான் எழுத்தாளர்களாக இருக்கிறார்கள் என்பதை உணர்த்தும்.

பிறருக்காக வாழ்பவர்கள் எப்போதும் இறப்பதில்லை என்பதே வரலாறு.

அதுபோலவே தான் எங்களுடைய ஈழத்து படைப்பாளராகிய செம்பியன் செல்வன் அவர்கள். ஈழத்திற்காக எம்இனம் ஆயுதம் ஏந்தி போராட முதலே தமது எழுதுகோல் ஏந்தி போராடிய ஒரு போராளி இவர்.

இன்றைய காலத்தில் கூட எழுத்து சுதந்திரம் என்பது அறவே இல்லாத போதிலும், அந்தக் காலத்தில்எழுதுகோல் ஏந்தி போராடிய போராளிகள் அரசின் அடாவடிகளுக்கும், விசாரனைகளுக்கும், துப்பாக்கிமுனைகளுக்கும் அடிபணியாது, எவ்வளவு சங்கடங்களுக்கும் மத்தியில் இந்த எழுத்து



பயணத்தைதொடர்ந்திருக்கிறார்கள், என்பது ஒரு சிந்திக்க வேண்டிய விடயமாகவும்

அதுவே ஓர் எழுதாளர்களுக்கு இருக்க வேண்டிய துணிவும் ,இனப்பற்றையும் ,மொழிப்பற்றையும் காட்டிநிற்கின்றது.

எந்த சட்டங்களும் இன்றி மக்களை யுத்தம் என்ற பேரில் கொன்றொழித்த காலத்திலேயே,

செம்பியன் செல்வன் அவர்களைப் போன்ற பல எழுத்தாளர்கள் எத்தனையோ எதிர்ப்புக்களுக்கும் மத்தியில்

அவர்களுடைய எழுத்துப் பயணத்தில் தடம் பதித்திருக்கின்றார்கள். இவர்களின்

ஒவ்வொரு படைப்புக்களையும் படிக்கின்ற போதும் எல்லையில்லா பெருவெளியாக படர்ந்து நிற்கின்றது.

இவரைப்போன்ற ஈழத்து பன்முக ஆற்றல்

படைத்த எழுத்தாளர்களை தேடிப் படிப்பதற்கு சந்தர்ப்பம்கிடைத்ததை எண்ணி நான் பெருமிதம் கொள்கிறேன். இச் சந்தர்ப்பத்தினை காற்றின் வெளியீடு ஆசிரியரானமுல்லை அமுதன் அவர்களுக்கு நான் நன்றி நவில்கின்றேன்.

செம்பியன் செல்வன் அவர்கள் எப்படி இந்த எழுத்து பயணத்தில் நுழைந்தார் என்பதை நாங்கள் முதலில்பார்ப்போம்.

செம்பியன்செல்வன் அவர்கள் 10 வயதில் இருந்து எழுதத் தொடங்கி விட்டாராம். மேலும் அவருடைய அண்ணன்கணேச பிள்ளை என்பவர்

இவருக்குள் இருந்த எழுத்தாற்றலை தூண்டி விட்டதாக அவர் பல இடங்களில் மனம் திறந்து இருக்கின்றார். அன்னையைப் போலவே அண்ணன் என்றும் பல ஆக்கங்களில் அவர் சொல்ல மறக்கவில்லை.

கணேசபிள்ளை என்பவரின் நெருங்கிய நண்பரான பத்மநாதன் அவர்கள், அமெரிக்காவிலிருந்து கையெழுத்துசஞ்சிகையினை நடத்தி வந்திருக்கின்றார். அதில் செம்பியன் செல்வன் அவர்கள் சிறுவர் பகுதியை எழுதிவந்தாராம். அது தான் அவருடைய எழுத்து புரட்சிக்கான ஆரம்ப தூண்டுகோலாக இருந்திருக்கின்றதுஎன்பதைக் காணமுடிகின்றது.

அந்த அனுபவத்துடன் தான் பாடசாலை காலங்களிலும் அவர் எழுத்துப் பணியை விடாது சஞ்சிகைகளுக்கும், வார இதழ்களுக்கும் எழுதி வந்திருக்கின்றார்.

செம்பியன் செல்வன் அவர்கள் சிறுவயதில் பெற்றோரை இழந்ததால், அவருடைய பாட்டியான நாகமுத்துஅம்மாவின் அரவணைப்பிலும் அவருடைய அண்ணனுடைய அரவணைப்பிலும் தான் வளர்ந்து, தனது கற்றலைதொடர்ந்து இருக்கிறார். யாழ் திருநெல்வேலியில் பிறந்த அவர், சிறுவயதிலேயே நாவல், சிறுகதை, நாடகங்கள், குறுங்கதைகள், திரைப்பட கதைகள், கவிதைகள் என பல்வேறு ஆக்கங்களைபடைத்திருக்கின்றார்.

தனிப்பட்ட வாழ்வில் ஆசிரியராகவும், அதிபராகவும், கல்வி பணிப்பாளராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அவர்தனது எழுத்துப் போரை ஒருபோதும் ஓய்வுக்கு கொண்டு வர விரும்பவில்லை.

பல சஞ்சிகைகளுக்கும், இதழ்களுக்கும் ஆசிரியரான இவர் தனது வாழ்நாளை எழுத்துக்காகவே செலவுசெய்திருக்கின்றார். மிக காத்திரமான ஆக்கங்களை எமக்கு விதைத்திருக்கிறார். நாங்கள் அதை அறுவடைசெய்து கொள்ள வேண்டும். எங்களுடைய அடுத்த சந்ததிகள் இவர் போன்ற சிறப்பு மிக்க எழுத்தாளரை அறிந்துகொள்ள வேண்டும்.

செம்பியன் செல்வன் அவர்கள் தனது தனிப்பட்ட வாழ்விற்கு முக்கியத்துவம் கொடுத்து இருந்திருந்தால் அவரைநாம் தேடிப் படிக்க முடியாமல் இருந்திருக்கும். ஆனால் அவர் அப்படி இருக்கவில்லை. ஈழமண்ணில் மிகப்பிரபலமான பன்முக ஆற்றல் கொண்ட ஒரு எழுத்தாளராக வலம் வந்திருக்கின்றார்.

### செம்பியின் செல்வன் அவர்கள் தனது

17-வது வயதில் பல்கலைக்கழகம் சென்று, அங்கே ஒன்பது சிறுகதைகளை 1961 ஆம் ஆண்டு வெளியீடுசெய்துள்ளார். ஒரு நல்ல கதை சொல்பவராகவும், எழுத்து பற்றாளனாக வாழ்ந்திருக்கிறார். மக்கள் மீது ஒருஅலாதியான அன்பும் பாசமும் வைத்து ஒரு நல்ல மனிதனாக வாழ்ந்திருக்கிறார். எல்லோரிடமும் அன்பாகவும், மரியாதையாகவும், நேர்மையாகவும் பழகுவதில் இவர் சிறந்து விளங்கி இருக்கின்றார்.

1960 லிருந்து 2005 காலகட்டத்தில் இவருடைய காத்திரமான ஆக்கங்கள் அந்த காலத்தில்வாசிப்பாளர்களுக்கு ஒரு விருதாக கிடைத்திருக்கின்றது என்பதில் மிகையில்லை. ஒரு மனிதனால் இத்தனைபடைப்புக்களை தர முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்திருக்கின்றார் செம்பியன் செல்வன் அவர்கள். இவருடைய கதைகள் வாசிக்கும் அனைவருக்கும் உண்மையிலேயே ஒரு அதிர்ச்சியையும், ஒருவிறுவிறுப்பையும், திருப்தியையும் ஏற்படுத்திக் கொண்டே தான் இருக்கின்றன.

காலம் தாண்டியும் பேசும் கதைகளாகவும், இன்றைய காலத்திற்கு பொருந்தும் படியாகவும் உயிரோட்டமாகஇருக்கின்றன இவருடைய கதைகள். அரசியல் வாதிகளை அன்றைய காலத்தில் கூட இவர் வெளுத்து வாங்கிஇருக்கின்றார். மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து வாழ்ந்த அகதி வாழ்வையும் ,அவர்களுக்கு ஏற்பட்டஅட்டூழியங்களை இவர் எழுதாமல் சென்றதில்லை. ஈழத்தில் இன்று வரை பேசப்படும் அளவுக்கு ஒரு மிகப்பெரியகாத்திரமான எழுத்தாளராக செம்பியன் செல்வன் அவர்கள் வலம் வந்திருக்கின்றார். அவருடைய சிறுகதைகளைநாங்கள் பார்ப்போமானால் அதில் அரசியல்வாதிகள் இன்றைய காலத்தில் இருப்பவர்கள் போலதிருந்தாதவர்களாகவே இருந்திருக்கின்றார்கள்.

செம்பியின் செல்வன் அவர்களின் குறுங்கதைகளிலிருந்து ஓர் கதையினை நீங்களும் சுவையுங்கள்,

### காலமாற்றம் ‘

காலங்கள் தோறும் சொற்களின் கருத்துக்கள் மாறிக்கொண்டே வருகின்றன. உதாரணமாக நாற்றம் என்றசொல் பண்டைய நாட்களில் நறுமணம் என்ற பொருளில் வழங்கி வந்தது. ஆனால் இன்று அது “கெட்டவாசனை” யைக் குறிக்கிறது... இதற்கு இன்னொரு உதாரணம் சொல்” என்றார் ஆசிரியர்.

'அரசியல்!'' என்றான்மாணவன். 'எப்படி?'' 'இன்று அரசியல் என்றால் ஊழல், லஞ்சம், மோசடி, நாணயமின்மை, பக்கச் சார்பு என்றுதானே பொருள் நினை வுக்கு வருகிறது...'' ஆசிரியர் மாணவனைக் குருவாகப் பாவனை செய்து வணங்கினார்.

அன்றும் இன்றும் மாறாத பிள்ளைகள்

**பாசம் (2)**

பிள்ளைகளை நன்றாகத்தான் வளர்த்துப், படிப்பித்து என்ன பயன்? ஆளாக்கி விட்டார். வயோதிப காலத்தில்ஆதரவளிக்காமல் துரத்தி விட்டனர். அவர்கள் ஆண்டிகள் மடத்தில் ஒண்டினார். ஒருநாள் அவர் பிச்சைக்குப்போய் வரும் வழியில் அவர் மகன் அவரைத் திருவோடும் கையுமாகக் கண்டு, கண்கலங்கி நின்றான். "என்னகோலமப்பா இது? உடைந்துபோன திருவோடும் கையுமாக... - தந்தைக்குப் பெருமகிழ்ச்சி. சதை ஆடுகிறதா? "கொஞ்சம் பொறுங்களப்பா... இதோ வருகிறேன்'' என்று எங்கோ விரைந்தான். அவர் இரத்த, பாச உறவுக்கனலில் கனியாகி... 'இந்தாருங்கள் அப்பா! அவர் கனவு கலைந்து பார்த்தபோது, மகன் கையில் அளவில் பெரியபுத்தம்புதிய திருவோடு காட்சியளித்தது

——-

தாயக விடுதலைக்கு வலு சேர்ப்பதாக "விடியலை தேடும் வெண்புறாக்கள்'' எனும் தொகுப்பினை வெளியீடுசெய்திருக்கின்றார். அது அழிந்து போனதாக கூறப்படுகின்றது. இளைஞர்கள் மனதில் அத்தியாயங்களை மாற்றிஅமைத்து போராட்ட சுவை சித்தரிக்க தொடங்கிய காலத்தில் எழுதி இருக்கின்றார். அவருடைய ஆளுமைஅறிந்தே, எமது தேசியத் தலைவர் அவர்கள் செம்பியன் செல்வன் அவர்களுடைய மறைவுக்கு பிறகு அவருக்குமாமனிதர் பட்டம் வழங்கினார். அமைதியான மனிதராக வாழ்ந்த எழுத்தாளர் அவருடைய மனக் கொதிப்பைஎழுத்தினால் காட்டி இருக்கிறார்.

மதங்கள் எல்லாம் கடந்து ஒரு நல்ல மனிதனாக வாழ்ந்து இருக்கின்றார். ஒரு சிறந்த பாசமுள் ள்வரகாவும்எழுத்தாளருக்குடைய பண்புடன் இருந்திருக்கின்றார். இவருடைய வாழ்க்கை வரலாறு பலரது வாழ்வின்அத்தியாயங்களை புரட்டிப் போடக் கூடியதாகவே இருக்கின்றது.

பல விருதுகளைப் பெற்று எமக்கு பெரும் அடையாளமாக செம்பியன் செல்வன் அவர்கள் இன்றும் நம்மோடுவாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்.

**அவருடைய எழுத்துப்பணிகள்**

விவேகி, புவியியல், நுண்ணறிவு ஆகிய சஞ்சிகைகளின் இணை ஆசிரியராகவும், அமிர்தகங்கை, கலைஞானம்ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் கடமையாற்றியவர். ஈழத்துப் படைப்பாளிகளைப் பற்றிய 'ஈழத்துச்சிறுகதை மணிகள்' என்னும் நூலினை எழுதியுள்ளார். இவரது 'சர்ப்பவியூகம்' சிறுகதைத்தொகுதி இலங்கைசாஹித்யவிருது பெற்றது. கலைக்கழகம் நடத்திய நாடகப்போட்டியில் தொடர்ந்து 4 வருடங்கள் முதல் பரிசுபெற்றவர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகை தனது வெள்ளிவிழா பொருட்டு நடாத்தியசிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதை இரண்டாவது பரிசினைப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**இவரது நூல்கள்**

- சர்ப்பவியூகம் - சிறுகதைத்தொகுதி
- அமைதியின் இறகுகள் (சிறுகதைகள்)
- குறுங்கதைகள் நூறு (குறுங்கதைகள்)
- கானகத்தின் கானம் - நாவல்
- நெருப்பு மல்லிகை (நாவல்)
- விடியலைத் தேடும் வெண்புறாக்கள் (நாவல்)
- மூன்று முழு நிலவுகள் (நாடகம்)
- ஈழத்துச் சிறுகதை மணிகள் (விமர்சனம்)
- நாணலின் கீதை (தத்துவம்)

எமது ஈழத்துப்பரணி பாடிய ஈழத்துப் புலவன் புதுவை இரத்தினதுரை அவர்கள் செம்பியன் செல்வன் அவர்களைஒரு எழுத்து போராளி என கூறி இருக்கின்றார். படைப்புப் பக்கத்தை தவமாக கருதி அதனோடு கலந்துநின்றவர் என்றும் தன் இனத்தையும் நிலத்தையும் அளவுக்கு அதிகமாகவே நேசித்து வாழ்ந்தவர் என்றும் அவர்கூறுகின்றார்.

செம்பியன் செல்வன் ஐயா அவர்களின் இறப்பு என்பது ஈடு செய்ய முடியாதது. அது ஈழத்து படைப்புக்குகிடைத்த மாபெரும் இழப்பாகும். அதை வார்த்தைகளாக கொண்டு இடைவெளியை நிரப்பிட முடியாது. இப்படிப்பட்ட திறமையான எழுத்தாளர்கள் இனத்துக்கு கிடைத்த பெரும் பேறாகும். அவர்கள் அழியாமல்இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். பன்முக திறமை கொண்டு அருளிய ஆக்கங்கள் ஊடாகஅள்ள அள்ள குறையாத அட்சயபாத்திரமாக எம்மோடு கலந்து வாழ்கின்றார் எழுத்துப்புரட்சியாளர் செம்பியன்செல்வன்.

# முள்ளும் மலரும் ஞான தேவனே!

செம்பியன் செல்வன்



உன் அருட் கருணை மழையிலே என் இதயத்தோட்டம் குளுமை காண்கிறது.கனிந்து சிலிர்க்கிறது. சிலிர்ப்பின் மதமதர்ப்பில் தாய்மையின் பரவசம் உள்ளெல்லாம் ஊடுருவிச் சுரங்களாகி அதிர்கின்றன. அந்த இன்பராகச் சுரங்கள் எண்ணற்ற மலர்களைப் புஷ்பிக்கின்றன.

புஷ்பங்கள் காற்றில் அலையாகி, மகரந்தப்பொடி தூவி, தோட்டத்தைச் சிம்மாசனம் ஏற்றுகின்றன. இவை யாவும் எனது முயற்சிகளே...செயல்களே... விளைச்சல்களே... என ஆங்காரத்தில் நான் சொற்ப விநாடி இறுமாந்து நின்றபோது.....

என் இதயமலர்கள் அனைத்தும் உனக்கே உனக்குச் சொந்தமானதென்ற நினைப்பின்றி, எனதே எனது ... இதயமே நிலையானது என்ற இறுமாப்பில் உடையவன் நீ இருக்க, எனக்கே சொந்தமானதென்ற பண்ணையாரின் நகைப்பிற்குரிய அறியாமையினால் ஒரு கணம் சொந்தம் கொண்டாட என் மனம் அவாவியபோது...

பருவம் மாறி

வெப்பம் மிகுந்து

இலைகள் உதிர்ந்து

செடிகள் குச்சிகளாய்

கரிக்கோடுகளாய்

மலர்கள் சருகாய்

மகரந்தம் தூசாய்

பற்றைப் புதரின்

கோரை அரிவாள்

புல் நாக்குகளாய்

என் இதயக் கரணை வெடிப்புகளில் கரு நிழலாய் பயம் காட்டி நின்ற வேளையிலே....

வரண்டு, பாளம் பாளமாக வெடித்த உதடுகளின், அவிந்த நாக்குகளின், காவி படிந்த பற்களில் மஞ்சட் சிரிப்பும் மறைந்த அந்தியிலே..

முதலே

இதயம் உன்னதே. அதன் இயல்பு உன்னதா? என்னதை உன்னதாக்க முயன்ற போதும் என்னது என்ற பற்றை நீக்கிலேனே?.......

இதய மண்ணை உழுது, பதமாக்கி, உரமிட்டு உனக்காக மலர்த்திய தோட்டத்தில்,

புஷ்பங்கள் மலர்ந்த ஒரு கணத்தில்,

தோட்டத்தின் விளைச்சலில் ஒரு கணம்

மயங்கித் தடுமாறினேன்.

அந்தத் தடுமாற்றம்

என் தோட்டத்தையே குலைத்துவிட்டதே!

இறையே!

என்னை மன்னித்துவிடு!

இனி உனக்காக நானாகிய உன்னைக் கொண்டு பூத்துக் குலுங்கும் பூஞ்சோலைகளை அமைப்பேன். நான் உன்னிடம் மன்னிப்பைப் பெறுவேன்.

எனது புத்தம் புதிய தோட்டத்திலே நவ நவமான பது யுகப்புக்கள் மலரும். அவை புதுப் பொலிவும், புத்தழகும், புதுவண்ணமும் கொண்டு உன் வீரம் செறிமார்பில் உன் புகழ் பரப்பும். மணிகளென ஒளிர நான் தொடுப்பேன் மலர்ச் சரங்கள்.

என் கரங்கள்... மனம் எல்லாமே தோட்டத்தைச் சீர்படுத்துவதில் ஈடுபடுகின்றன.

இறையே!

என் கரங்களுக்கு ஆற்றலைக் கொடு.

மனதிற்கு ஆனந்தத் தேனைக் கொடு. நீ கொடுப்பவற்றிலிருந்தே, எதையும் நான் தரமுடியும். நீ தந்ததையே திருப்பித் தந்து நான் புதுப்பெயர் எடுக்கிறேன். அது பக்தன்! பெற்ற கடனைத் திருப்பி அளிப்பவனுக்கு வள்ளல் என்னும் புதுப்பெயரை வழங்கனி ஆடும்—விளையாட்டு!

இந்த விந்தைகள் உன் விடயங்களில் மட்டும்தான்.

என் தோட்டத்திற்றான் எத்தனை செடிகள்…. விதைகள்…. பதியங்கள்…..

எல்லாமே தளிரிட்டுச் செடியாகி, பூ மலரும் காலங்களை…. பருவங்களை…. வசந்தங்களை சாதகபக்ஷி என எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்திருந்தேன். வசந்தம் நல்வரவு கூற, பருவம் செடிகளில் குடியேற,

நான் ஆவலுடன் விழித்திருந்தேன்.

ஆ! என்ன ஏமாற்றம்… வேதனை…. நெஞ்சங்களில், மலர்களில் இதழ்களுக்குப் பதிலாக முட்களே மலர்ந்தனவா?

என் செடிகள் புஷ்ப்பிக்கவேயில்லை.

பருவம் வந்தும் மலராத பெதும்பைகளா அவை? இறையே இதுவென்ன கூத்து?

என் தோடடத்தின் எல்லைகளிலே நெருஞ்ச்சிக் கூட்டங்களும், குறுக்கத்திகளும் நிறைந்து சிரித்து மலர்ந்திருக்கின்றனவே?

உன் அலகிலா விளையாட்டு போர்வை என என்னைக் கவிந்து திக்குமுக்காடாகி செய்கின்றன.

உனது குமிழ்ச் சிரிப்பின் அர்த்தம் புரியாமல் நான் மயங்கி விழுகின்றேன்.

தத்துவத்தின் தரிசனனே!

நான் விதைத்த வித்துக்கள் எப்படி இனம் மாறின?

நாளும் பொழுதும் -கண்ணின் மணிகள் என இமை மூடாது காத்திருந்து போஷித்தவைகள், வளம் பெறாது போக -

-கவனிக்காதவைகளும், வேண்டாதவைகளும் வேரோடி நிலம் பிளந்து மனதின் இறுமாப்பு என போஷித்துப் புஷ்பித்தன.

தேவனே! இது உன் போதனையா? விளையாட்டா?

உன் பாத கமலங்களைச் சூட்ட எனக்குக் கிடைத்தவை இம் முட்செடி மலர்களா? இச் சின்னஞ் சிறிய மணமற்ற… அழகற்ற மலர்களும் உனக்கு உவப்பா?

ஐயனே! நான் புரிந்து கொள்வது எங்கனம்?

ஆ! தேவனின் தேவனே! என் தவறை புரிந்து கொண்டேன். தோட்டத்தை அமைக்கும் வேளையில்….. நான் என்ற ஆணவத்தையே நான் உரமாக இட்டிருந்தேன். ஆணவங்கள் முட்களானதில் ஆச்சரியமேயில்லைத்தான் உன் போதனைகள் மணிகளின் சுடரெனப் பல கிளைவிட்டுப் படர்வதை உணர்கின்றேன். ஆனாலும்-

நந்தவனத்தில் இவை மலர்வதென்றால்,

நந்தவனம் பழுதாமோ?

இறைவா!

தொடடமும் உனதே!

வித்தும் உன்னதே!

விளைச்சலும் உன்னதே!

இதில் நானும் என்னதும் எதுவுமேயில்லை.

உன் தோடடத்தின் விளைவும்,

விளைச்சலும்,

வித்தும்,

பயனும்

எல்லாமே -நீ தான்.

அனைத்தையும் தரவேண்டியவன் நீயேயன்றோ?

நீயே -விதை!

நீயே -அறுவடை செய்.

நான் -நானாகிய நீயேயல்லவோ?

காலதேவனே!

குருக்கத்திகளும், நெருஞ்சிகளும் மலர்ந்த முள் மனக்காட்டில்..

மா, முல்லை, அசோகு அரவிந்தம், நீலோத்பலம் முதலான பஞ்சமலர்க் கூட்டங்களும் ரோஜாத் செடிகளும் மல்லிகைப் புதர்களும் எப்படி எழுந்தன? எப்படி மலர்ந்தன?

முள்மனக்காட்டில் சுனையூறி நீர்ப்பூக்கள் கொழுச் சிறந்த வகைதான் என்னே…?

இறையே!

என் மனக்காடு என்னும் உன் விளை நிலத்தில் இவையேயல்லாது வேறென்ன மலரும்?

**நன்றி : நாணலின் கீதை**



# "சர்ப்ப வியூகம்" தொகுப்பை முன் வைத்து

கானா பிரபா (அவுஸ்திரேலியா)

# செம்பியன் செல்வனின் சிறுகதைகள்

ஈழத்தில் வாழ்ந்த காலத்தில், பள்ளிப்பருவம் பல ஈழத்து எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தும் திறவு கோலாய் அமைந்தது.

ஆரம்பத்தில் செங்கை ஆழியானின் சிறுகதைகள், நாவல்களை வெறி கொண்டு வாசித்துத் தீர்த்து விட வேண்டும் என்ற முனைப்போடு இயங்கிய சூழலில், வாசித்தது போக முன்னோக்கி அவரின் ஆரம்ப காலப்படைப்புகளையும் வாசித்து விட வேண்டும் என்ற ஓர்மமும் எழுந்தது. அப்போது தான் கொக்குவில் இந்து கல்லூரி நூலகத்தில் இரண்டு சிறுகதைத் தொகுதிகள் கிடைத்தன.

அறுபதுகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவர்கள் கொடுத்த அந்தப் படைப்புகளின் வழியாக, எதிர்காலத்தில் அவர்கள் பேனா மன்னர்களாக ஈழத்தின் நிறுவ இருக்கிறார்கள் என்ற முகாந்திரம் தெரிந்திருக்காது. ஆனால் எண்பதுகளில் அவற்றைப் படித்த போது தான் அந்த எதிர்வுகூறலின் நியாயத்தை உணர்ந்து கொண்டேன்.

“கதைப் பூங்கா” என்ற சிறுகதைத் தொகுதி பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் பன்னிருவரால் எழுதப்பட்ட படைப்புகளோடு ஜனவரி 1962 இல் வெளிவந்தது. பேராசிரியர் க.கைலாசபதி அவர்களது முன்னுரையோடு, “குண – சோதி” என்ற பெயரில் (குணராசா மற்றும் நவசோதி) அந்தச் சிறுகதைத் தொகுப்பின் பொறுப்பாசிரியர்களின் முகவரையும் தாங்கி வெளிவந்தது.

“பாதி மலர்” என்ற சிறுகதையை இந்தத் தொகுப்பில் எழுதியிருக்கிறார் “செம்பியன் செல்வன்”. திருமண சுதந்திரம் மறுக்கபப்ட்ட சரசு என்ற பெண்ணின் மனவோட்டதை மையப்படுத்தி எழுதப்பட்ட அந்தச் சிறுகதையில் ஈழத்து மனிதர்களின் சுயநலப் போக்கைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

தொடந்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் இரண்டாவது சிறுகதைத் தொகுதியான “விண்ணும் மண்ணும்”, ஜனவரி 63 இல் பிறந்த போது அதன் தொகுப்பாசிரியராக விளங்கியவர் செம்பியன் செல்வன்.

இங்கேயும் ஈழத்துச் சமுதாயப் பிரச்சனையின் இன்னொரு முகமான தொழிலாள வர்க்கத்தின் உரிமைப் போராட்டமும், அதன் வழி ஒரு குடும்பமே நடுத்தெருவில் வரும் அவலத்தையும் “வர்க்கங்கள்” என்ற சிறுகதையாகப் பிரசவித்திருக்கிறார்.

இவ்விரண்டு கதைகளையும் படிக்கும் போதே தன் பல்கலைக்கழக வாழ்விலேயே வெறும் காதல் ரசம் கொட்டும் கதைகளைப் புனையாமல், போர்க்குணம் மிக்க ஒரு எழுத்துப் போராளியின் அறிமுகமாகவே தென்படுகிறார்.

பின்னாளில் அவரை நேரில் கண்ட இலக்கியச் சந்திப்புகளில் கூட செம்பியன் செல்வன் எழுத்து வேறு, ஆள் வேறு என்று இருந்ததில்லை என்பதை உணர முடிந்தது.

ஈழத்து இலக்கியப் பரப்பில் செழுமையான படைப்புகள் வர வேண்டும் என்ற சிந்தனையும், ஈழத் தமிழரது சுய நிர்ணயப் போராட்டத்தில் சமரசமில்லாத போக்கும் கொண்டவர் என்பதை அவரை எட்ட நின்று தரிசித்து உணர்ந்திருக்கிறேன்.

செம்பியன் செல்வனின் படைப்புகளை ஒரு கட்டத்தில் படிக்க முடியாத இடைவெளியை நிரப்பிக் கொண்டது அவரின் “சர்ப்ப வியூகம்” என்ற சிறுகதைத் தொகுதி.

ஈழத்து சமுதாய வெளியில் எழுந்து நிற்கும் எல்லாவிதமான பரிமாணங்களிலும் காட்சித் தரும் பிரச்சனைகளையே பகைப்புலமாகக் கொண்ட சிறுகதைகளின் கருவூலமாக இந்த “சர்ப்ப வியூகம்” தொகுதி திகழ்கின்றது.

செம்பியன் செல்வனின் நாற்பதாண்டு சிறுகதை இயக்கத்தின் கண்ணாடி போன்று அமைத்த குவியல் இது.

சமூகத்தின் அழுக்குகளைத் தொட்டுக் காட்டும் இவரின் சிறுகதைகளின் வழியாக ஒரு தீர்வைக் கொடுக்காமல் கலாசார அதிர்ச்சியாகவும், உள்ளதை

உள்ளபடியே காட்டி அதை வாசகனிடம் கொடுக்கும் பாங்குமாக அமைந்துள்ளன.

அதே நேரம் கதைக்களனை வாசகனுக்குக் காட்டும் அழகியலில் அச்சொட்டான புகைப்படமாகவும் இவரின் எழுத்துகள் திகழ்கின்றன என்பதற்கு இந்தத் தொகுப்பே சான்று பகிர்கின்றது.

யாழ் இலக்கிய வட்டத்தின் வெளியீடாக, 2002 ஆம் ஆண்டில் வெளிவந்த "சர்ப்ப வியூகம்" தொகுப்பில் 23 சிறுகதைகள் பல்வேறு காலகட்டங்களில், வெவ்வேறு இதழ்களில் எழுதப்பட்டவையாக அமைந்துள்ளன.

அதனால் இவை ஈழத்தின் சமூக, பொருளாதாரச் சிக்கலில் இருந்து போரியல் வாழ்வு என்று எல்லாப் பக்கங்களையும் தொட்டுக் காட்டுகின்றன.

"இலக்கியம் என்பது ஒரு கலை சார்ந்த சீர்திருத்தமாகும், கலை சமூக மாற்றத்தை உருவாக்கும். சமூக மாற்றம் கலை வடிவங்களை மாற்றியமைக்கும்" என்ற கருத்து நிலை கொண்டவர் செம்பியன் செல்வன் என்கிறார் முன்னுரையாகும் வெளியூட்டுரை எழுதிய அவரின் நண்பரும் எழுத்தாளருமான செங்கை ஆழியான்.

இந்த முன்னுரையிலேயே செம்பியன் செல்வன் குறித்த விசாலமான வரலாற்றுப் பார்வை பதிவாகியிருகின்றது.

முதுமையின் தனிமையும், தன்னைச் சுற்றம் புறக்கணிக்கின்றதே என்ற மாயையில் உழலும் மயிலுக்கிழவரின் மனப்போக்கை "பூவும் கனியும்" என்ற சிறுகதை பதிவாக்குகிறது. படித்து முடித்ததும் ஒரு முறுவல் பூக்கின்றது. ஈழ நாடு பத்தாவது ஆண்டு விழா (1968) வில் முதற்பரிசு பெற்ற பெருமையையும் கொண்டது.

"கால்நடைகள்" சிறுகதை வழியே கானக வாழ்க்கைத் தடத்தைக் காட்டுவதாகட்டும், பரபரப்பான சூழலைத் தன் எழுத்தில் கொண்டு வருவதாகட்டும் ஒரு புதிய உத்தியைக் கையாண்டு திரைக்கதை அமைக்கிறார். கதை முடிவு ஒரு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும். இந்தத் தொகுப்பு வாசித்து நிறைந்த பின்னரும் அந்த அதிர்ச்சி நீங்க மறுக்கின்றது.

ஆண்டான் அடிமை வாழ்க்கை இன்னும் தொடரும் "குரூரம்" அந்தச் சிறுகதை வழியே அப்பாவியான புதுமாப்பிள்ளையைத் தன் அதிகார பலத்தால் சிதைக்கும் கோலத்தைப் பதிவு பண்ணுகிறது.

சிறுகதைத் தொகுப்பின் தலைப்பு தாங்கும் "சர்ப்ப வியூகம்" கூட பணக்கார மேலாதிக்கத்தின் இன்னொரு பரிமாணத்தைக் காட்டுகின்றது. இதுவொரு நாவலாக்கக் கூடிய கருப்பொருள்.

"சாக்கடை நீர் தெறிக்காதவர்கள்" கதை எழுதப்பட்ட காலத்தை (1973) நினைக்கையில் ஆச்சரியம் பிறக்கிறது. ஏனெனில் அந்தக் கதையின் கருப்பொருளில் ஒரு பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்து விட்டுத் தப்பிவிடும் இளைஞர்களின் முகத்தைக் காட்டுகிறது.

"கன்னிக்கால்" கதையும் (1964) கூட இன்னொரு கலாசார அதிர்ச்சி அளிக்கும் படைப்பு.

1994 இல் வெளிவந்த "வடக்கே ஒரு பாடசாலை" சிறுகதையை அந்தத் தொண்ணூறுகளின் வாழ்க்கையில் நாம் கண்கூடாகத் தரிசித்தது. மானிடம் பிறக்கும் அதிபர் போல பல மகாத்மாக்களைக் கண்டிருக்கிறோம்.

"வீடு திரும்புதல்" சிறுகதையும் 1995 காலகட்டத்தில் எழுதப்பட்டாலும் இந்திய அமைதிப் படை ஈழத்தில் நிலைகொண்டிருந்த சூழலின் பதிவாகுகின்றது.

"நிலம், வீடு, வாசல்", "போர்க்கால இலக்கியங்கள்", "மனிதர்கள்", போர்க்காலத்தின் பரிமாணங்களாக அமைந்த சிறுகதைகள்.

"மழைக்காலங்களும் மண் பொம்மைகளும்" ஏழ்மை வாழ்வில் உழலும் மனிதர்களை இயற்கையும் வஞ்சிக்கும் அவலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

தன்னுடைய கதைகளின் வழியே பிறந்த மண்ணை விட்டு அகலக் கூடாது என்ற கொள்கையை ஆங்காங்கே கொடுத்து விட்டுப் போகும் செம்பியன் செல்வன், புலம்பெயர் வாழ்வில் எழும் நெருக்கடிச் சூழலை "ஓவர்லாண்ட்" வழியே காட்டி அங்கேயும் வாழும் நம்மவரின் குரலைப் பிரதிபண்ணியிருக்கிறார்.

தாயக விடுதலைப் போராட்டத்தின் மீது பற்றுக் கொண்டு விளங்கிய செம்பியன் செல்வன் "பேரனும் தாத்தாவும்", "காண்டீபம்", "காலமை" "தகர்வு" ஆகிய சிறுகதைகளின் வழியாக அவற்றைப் பிரகடனப்படுத்துகின்றார்.

செம்பியன் செல்வனின் "சர்ப்ப வியூகம்" சிறுகதைத் தொகுதி புத்தாயிரத்துக்கு முந்திய நாற்பது ஆண்டுகள் ஈழத்தமிழரின் வாழ்வியல் பிரதிபலிப்புகளின் ஓட்டமாய் அமைந்திருக்கிறது.

செம்பியன் செல்வன் இன்னும் 20 ஆண்டுகளாவது இவ்வுலகில் வாழ்ந்திருக்க வேண்டியவர். அந்த வாழ்வில் நீட்சி இருந்திருந்தால் இன்று திசையறியாது குழம்பி நிற்கும் தமிழ்த் தேசியம் குறித்தும் தன் படைப்புகளில் கரிசனைப்பட்டிருப்பார்.



# வர்க்கங்கள்

செம்பியன் செல்வன்

பூவரச மரங்களிலிருந்தும், தென்னோலைகளிலிருந்தும் மழைத்துளிகள் சொட்டிக் கொண்டிருக்க..

துளிர்கள் மெல்லிய கதிரொளியில் பச்சைச்சுடராக ஒளிர்கின்றன!.

அவன் துயில் கலைந்து வெளியே வரும்போது விடிந்து நீண்ட நேரமாகி விடுகின்றது. உடலை குளிருக்கு அடக்கமாக போர்வையால் மூடிக்கொண்டு. இரவு நுளம்புக்காகவும், குளிருக்காகவும் எரிந்த 'கணப்புச் சட்டியில்' கிடந்த ★உமிச் சாம்பலை'' எடுத்து பல்லை விளக்கியவாறு முற்றத்தில் காலடி பதிக்க...

ஈரநிலத்தில் பாதங்கள் 'பூ'வின் தன்மையில் மிருதுவாகப் பதிகின்றன. முற்றம் சற்றுத் திட்டியானபடியால் மழையில் மணல்கள் கழுவப்பட்டு வெண் மணல்களாகச் சிரிக்கின்றன. தெருத்தட்டிப் படலையைத் திறந்து வெளியே வருபவன் மனம் கலங்குகின்றது.

அவனது வீட்டிற்கும், தெருவிற்கு மிடையே ஒரு பரந்த பள்ளமான நிலப்பரப்பு. கோடையிலே அப் பள்ளத்தில் பல குடும்பங்கள் வந்து குடியேறி விடும். மாரியிலே மழைவந்து பள்ளம் நிரம்பிவிட்டாலோ..... அவர்கள் தெருவின் கரையோரமாக குடியேறி.... அவர்கள் குழந்தைகளுக்கும் வாகனங்களுக்கு மிடையே ஏற்படும் 'கண்ணும்பூச்சி'யாட்டங்களும்....மரண ஓலங்களும்.

பள்ளம் குளமாக மாறி, குடிசைகளின் 'முகடுகள்' ஒடங்களாக மிதக்கின்றன....தூரத்தே.

எண்ணெய் மில் முதலாளி சிவசங்கரம்பிள்ளையின் 'கல்வீடு' கம்பீரமாகவும், தலைமுழுகிய குமரிப்பெண்ணின் மோகன லாவண்யத்துடனும் மின்னுகின்றது.

'' தம்பி!. நீ முகத்தை களுவிட்டியெண்டா கெதியா வாவன். நான் எவ்வளவு நேரம் காத்துக் கொண்டிருக்கிறது!'' -தாய் பாக்கியத்தின் குரல் நீரில் விழுந்த கல்லாக நினைவு அலைகளைக் கலைத்துவிட....

அந்த ஒசை அவன் காதில் படைபடையாக வந்து,பலமாக மோதுகின்றது.

''சம்பளத்தை குறைக்காதே!''

'எட்டு மணி நேரம் வேலை''

''வர்கக பேதம் ஒழிக!''

''வாழு, வாழவிடு!''

'ஒகோ!. பழையபடி எண்ணை மில்லில் வேலை நிறுத்தம் வந்துட்டுது போல. இவர்களின்ர பிணக்குகள் எப்ப தான் தொலையுமோ? சமரசமே ஏற்படாதோ? எல்லாரும் மனிதர்கள் தாமே?. ஏன் இவர்களிடையே இந்த வர்க்கபேதங்கள் எல்லாம்..!'

''மனிதர்களின் வாழ்க்கையை நிர்ணயிப்பது மனிதர்களின் உணர்வுகளல்ல, சமூக வாழ்க்கையே மனிதர்களின் உணர்வுகளை நிர்ணயிக்கின்றது என்பது, நிதர்சனமாகின்றதா?...

*O*

அவசரம் அவசரமாக அடுக்களைக்குள் நுழைகின்றன் அவன். பாக்கியம் பெரிய பனைஓலைப்பெட்டி ஒன்றிற்குள் இடியப்பத்தை நிறைய அடுக்கிவிட்டு, பெட்டியின் மூலையில் ஒரு கிண்ணத்தில் ''தேங்காய்ப்பூச்' சம்பலை நிறைத்துப் பதித்து கிண்ணத்தில் சின்னஞ் சிறு கரண்டி ஒன்றையும் செருகிக் கொண்டிருக்கிறாள்....

அடுப்படியின் மூலையிலே அடுத்த நாளுக்காக 'அரிசி' நனைகிறது. இன்னெரு பாத்திரத்தில் உளுந்து தண்ணிரில் ஊறி உப்பிக்கிடக்கிறது!. சிறிது நேரத்துக்கு முன் பயன்படுத்திய அடுப்படிச் சாமான்கள் நாலாபுறமும் சிதறிச் சித்திரம் தீட்டுகின்றன!.

அவன் தாயின் முகத்தையே உற்றுப் பார்க்கிறான்!. அடுப்புத் தின்றதால் முகம் காய்ந்து கருகி. முகத்திலே அங்குமிங்குமாக கரிக்கோடுகள். வியர்வைகள் அக் கோடுகளை அழிக்க முயன்று கிடைத்த தோல்வியில் முகத்தில் வாய்க்கால் கிழிக்க....

'அம்மா. அம்மா!. எனக்காக எப்படி எல்லாம் கஷ்டப்படுகிறாய்.

நீ இப்படி உழைத்து, உருக்குலைந்து போக நான் எப்படி அம்மா

அமைதியாக இருந்து படிக்க முடியும். இப்படியும் ஒரு படிப்பா?.

நான் வேலை தேடிப் போகிறேன் என்றாலும் விடுகிறயில்லேயே.

எனக்கென ஒரு கூலி வேலையாவது கிடைக்காமலா போய்விடும்!'...

'என்ன ராசா அப்படி பாக்கிறாய்?.'

'ஒண்டுமில்லையம்மா...நீ எத்தனை நாளைக்குத்தான் இப்படி உழைக்கப் போகிறாய்?.

'உனக்கெல்ல இந்த வீட்டுக் கவலை வேண்டாமெண்டு சொன்னனான்.. நீ பேசாம படி, அது எனக்குப் போதும்!' கண்டிப்பில் கனிவு உருகுகிறது.

“சரி...சரி. நீ இப்ப சாப்பிடப் போறியோ. பேந்து சாப்பிடப் போறியோ?.’

‘உனக்கென்னத்துக்கு வீண் கரச்சலை. நான் இப்ப சாப்பிட்டுட்டா. உனக்கும் அடுப்படிக் கவலை தொலையும். நான் இப்ப சாப்பிடாட்டி..?நான் சாப்பிடலியே எண்டு, வியாபாரத்தைக் கூட முடிக்காம வந்திடுவாய். நான் இப்பவே சாப்பிட்டு விடுறன்!’

‘‘நீ நல்லாத்தான் பேசப் பழகிட்டாய்.!’-

பீங்கான் தட்டில் இடியப்பத்தை எடுத்து வைக்கிறாள்.

‘‘நீ சாப்பிட்டுக் கொன்டிரு!. நான் ஒருக்கா முகத்தை களுவிக் கொண்டு வந்திடுறன்!...’’

‘சரிம்மா..’

--மனம் சிலந்தியாகி இழைகின்றது!.

*OO*

‘இஞ்சேரும் உங்க என்ன செய்யிறீர்?.’’

“ஏன் இப்ப. உங்களுக்கு என்ன ஏதும் வேணுமே?.’

‘நான் ஒருக்கா பஸ்காலைக்கு போட்டு வாறன். உவன் தம்பி எங்கபோட்டான்!. காணவில்லையே’

‘வெளியில விளையாடுகிறான் போல கிடக்கு. நா ன் கூப்பிடவே!...’’

‘வேணாம்...வேணாம்...விளையாடுற பிள்ளையை ஏன் குழப்புகிறீர்?. நான் இண்டைக்கு இரவைக்கு வரக் கொஞ்சம் சுணங்கும். நீர் எனக்காக முழிச்சுக் கொண்டிராதேயும் என்ன. அப்ப நான் வரட்டே!...’’

‘ஏன் இப்பதானே வந்தனிங்க. கொஞ்சம் இருந்து ஆறி அலம்பிப் போறதை விட்டுட்டு. அப்படி என்ன பாச்சல்...!’

‘இல்லைப் பாரும். இண்டைக்கு ஏதோ தொழிலாளர் சம்பளம் காணாதெண்டு “ஸ்டிரைக் செய்யப் போயினம் போல இருக்கு. உமக்குத்தான் தெரியுமே நான் உந்த தொழிலாளர் யூனியனில் காரியதரிசியாக இருக்கிறதால் எவ்வளவு காரியங்களை நான் பாக்கவேண்டியிருக்கு எண்டு..’

★நீங்க எப்ப உந்த நாசமாப்போற யூனியனில சேர்ந்தீங்களோ. அப்பவே அரை உடம்பாய் போனிங்க!. உங்களுக்கு ஏன் இந்த வீண் கரச்சல் எல்லாம். நீங்க பேசாம இருந்திட்டா வேற யாராவது உந்த காரியங்களைப் பாக்கமாட்டினமே!.’

‘இப்படி ஒவ்வொருத்தரும் சொல்லிட்டா, தொழிலாளரின் நலத்தை ஆர் கவனிக்கிறது... எண்டு நீர் சொல்லுமன்’

‘நீங்களும் உதில சேர்ந்துதான் நல்லாக் கதைக்கப் பழகிட்டீங்க!...’

--நழுவி விழும் தனது காற்சட்டையை ஒரு கையால் இறுகப் பற்றி தூக்கிப்பிடித்துக் கொண்டு, திறந்தமேனியுடன் அவன் நுழைகிறான்.

‘இதென்னடா கோலம். மேலெல்லாம் புழுதியாக் கிடக்குது. தெருவில விளையாடினியோ!. ஒரு சட்டையை போட்டுக் கொண்டு போய்

விளையாடக் கூடாது?. சரி. சரி.அம்மாட்ட சொல்லி மேலைக் கழுவு.. என்ன நான் போட்டுவரட்டே’?

★அப்பா!. வரேக்க எனக்கு ‘சொக்கா’ வாங்கி வாறியா?.’

‘ஓ!.’-

-சிரித்துக் கொண்டே வெளியேறுகிறார்,

*OO*

விடிவிளக்கு இருளை மென்று ஜீரணிக்க முயல.. ஒளிச்சுடருக்கு அஜீரணவாதியின் அவஸ்தை.

‘அம்மா!. அப்பாவை ஏன் இன்னும் காணேல்ல..’

★★அவர் வருவார்!. நீ பேசாம நித்திரையைக் கொள். அப்பா வந்ததும் நான் எழுப்புறன்!.’,

‘அப்பா எனக்கு ‘சொக்கா’வாங்கி வருவார் இல்லீம்மா. உனக்கு ஒண்டு. அப்பாக்கு ஒண்டு. மிச்சமெல்லாம் எனக்குத்தான்!.’

‘ஓமடா கண்ணு! பேசாம நித்திரையைக் கொள்!’’

-அப்பா வாங்கிவரும் ‘சாக்லெட்டின் சுவையின் லயிப்பில் விடிய எழும்பும் போது வாயினிக்க எழும்பும் நினைவில் உறங்கிவிடுகிறான்.

இருவருமே தம்மையறியாமல் அயர்ந்து கொள்ள .... பாக்கியத்துக்கு திடீரென விழிப்பு கண்டுவிடுகிறது. மனம் ஏனோ வேதனையால் பிழியப்படுகிறது. “.அம்மா. பயம்மா.இருக்கும்மா...’’என்னைப்பிடிச்சு. இறுக்கிப் பிடிச்சுக் கொள். அப்பா. சொக்கா. எங்கபோறே. பயம்மா..!’’

--அவன் நித்திரையில் புலம்புகிறான்...--பயத்தால் மேனி விதிர்த்து, வியர்வையில் மூழ்கிக் கிடக்கிறது.

அவள் மெதுவாக தட்டி எழுப்ப.

'அம்மா!. '--ஆவேசத்துடன் பாய்ந்து, பயத்தால் அவளைக் கட்டி அணைக்கிறான்.

'பயப்படாதேடா. குஞ்செல்ல. கெட்டகனவெதும் கண்டியே..!'-

என்று அவனைத் தேற்றுபவள் அவன் நெற்றியில் திருநீற்றை அள்ளி வந்து பூசுகின்றாள்.

அவனை மெதுவாக படுக்கையில் கிடத்தி, அவன் முதுகை பரிவுடன் தட்டித்தூங்க வைத்துக் கொண்டிருக்கையில்.... தெருப்படலைப்பக்கம் நாலைந்துபேர் கதைக்கும் ஒசை!.

'மெதுவா. மெதுவா. வாங்க! ...சேருக்கிடக்குது. யாராவது கூப்பிட்டுச் சொல்லுங்கோவன். முளிச்சுக் கொண்டு நிக்கிறீங்களே!. அவசரப்படாம.விஷயத்தை ஆறுதலா சொல்லுங்க.

அதுகள் பயந்திடப் போதுகள்..."

--பாக்கியத்தின் நெஞ்சம் புழுவின் இறக்கைகளாக அடித்துக் கொள்கிறது!

"வீட்டுக்காரர். வீட்டுக்காரர்.!" --இரவின் அமைதியை பிளந்துகொண்டு யாரோ கூவுகின்றார்கள்.

★யாரது?. " பாக்கியம் பயத்தைமென்று கொண்டே கேட்கின்றாள்.

★ வீட்டுக்காரர் ஒருக்காவந்து படலையைத் திறவுங்கோவன்.ஒரு முக்கியமான விசயம்!..."★

--பாக்கியம் பயத்துடன் துரங்கிக் கொண்டிருக்கும் கந்தசாமியை எழுப்பி, அவன் கையைப் பற்றிக் கொண்டு வெளியே வந்து படலையைத் திறக்க...

நாலைந்து பேர் நிற்கிறார்கள்!

- தொண்டை எனோ கரகரத்து....

'வந்து உங்கட அவரை கொண்டு போய் ஆஸ்பத்திரியில் வைத்திருக்கிறம்...!'

'ஏன். அவருக்கு என்ன நடந்தது..?'. –

'அவருக்கு இண்டைக்கு நடந்த 'ஸ்டிரைக்'கில் ஏற்பட்ட தகராறில தலையில் 'காயம்'பட்டு. யாரோ பாவிகள் எறிஞ்ச சோடாப் போத்தில் ஒண்டு...!'

'என்ன?..

"ஐயையோ. என்ர ராசாவுக்கு என்ன. எப்படி இருக்கெண்டு சொல்லுங்கோவன்'. --பாக்கியம் பதறித்துடிக்கிறாள்.. அவன் மிரள மிரள விழித்தபடி...

'ஒண்டுமில்லைப்பிள்ளை. நீயேன் வீணாக கவலைப்படுகிறாய். கொஞ்சம் ரெத்தம் போட்டுது. வேறொன்றுமில்லை!...'

'அவருக்கொரு வேளை உயிருக்கேதாவது..?'

"என்ன விசர்க்கதை கதைக்கிறாய் பிள்ளை. அப்படி ஏதாவது நடக்க நாங்க விட்டிடுவமே!. எங்களில ஒரு வரை அதுவும் பொறுப்பு வாய்ந்த எங்கட நலனைக் கவனிக்கிறவரை. நாங்க சும்மா விடுவமே!. அவருக்கொண்டு நேர்ந்து விட்டால். அது பெரிய கலவரத்தைத்தான் கொண்டுவரும். நீ பயப்படாதையணை பிள்ளை. இப்ப ஆஸ்பத்திரிக்கு போகேலாது. எண்டாலும் ஒருக்கா விசயத்தைச் சொல்லிட்டுப் போவமெண்டுதான் வந்தனாங்க ...'

'நான் இப் அவரைப் பாக்கோணும். அவர் எப்படி இருக்கிறாரோ. ஆண்டவனே..! முருகா...!.. எ ன்ர தாலிக் கொடியைக் காப்பாத்து- உனக்கு தங்கத்திலே தகடடித்துப் போடுறன்!...' –

என்று சொல்லியவாறு இருளில் ஒடமுயற்சிக்கும் அவளை தடுக்கின்றர்கள்.

அடுத்த நாள் ஆஸ்பத்திரிக் கட்டிலில் தலை தெரியாதவாறு பாண்டேஜ் போடப்பட்டு அப்பா கிடக்கிறார். அவரைச் சூழ்ந்துதான் எவ்வளவு பேர்கள். அவ்வளவு பேரும் தொழிலாளர்கள். அவர்கள் கண்களிலேதான் எவ்வளவு கருணை!

அப்பாவுக்கு நினைவு மீளவில்லை.

ஆப்பிரேசன் செய்யப்பட்ட அயர்வில் கிடக்கிறார், அம்மா பக்கத்திலிருந்து புலம்பிக்கொண்டு...

அம்மாவை தொழிலாளர்கள் தேற்றுகிறார்கள்.

ஒருவர் அவனைத் தூக்கி வைத்துக் கொண்டு, கையிலே "சொக் லேட்டை திணிக்கிறார்.

சொக்கலேட் அவனுக்கு கசக்கிறது. தொழிலாளர்கள் பெருமையடித்துக் கொள்கிறார்கள்..

"ஸ்டிரைக் வெற்றியாம்! எல்லாம் அவன் அப்பாவின் முயற்சிதானாம், அவரில்லாவிட்டால் ஸ்டிரைக் தோல்வி அடைந்திருக்குமாம்!.'

அப்பாவின் பெருமையில்

-தொழிலாளர்களின் அன்பு மழையில் இருவரும் நனைகிறார்கள்.

ஆனால்..

"சடக்!..."

- இழை மீண்டும் அறுந்து. அவன் நிமிர்கிறான்.

இறப்பு வழியே எலி ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது.

எதிர் சுவரிலே--

தந்தை அவனைப்பார்த்து சிரிக்கிறார்

சம்பள உயர்வு!

எட்டு மணிநேர வேலை.

தன் வெற்றிப் பெருமிதத்தில் சிரிக்கிறாரோ?

'ஷ்!. அப்பாடா!. இவ்வளவு நாளும் மழையாக்

கொட்டிச்சு! இண்டைக்கு ஏதோ வெயிலா. அகோரமாக் கிடக்குது. காலெல்லாம் பொரிஞ்சு போச்சு!.'

--என்று கூறிக் கொண்டே தனது முந்தானையால் முகத்தை அழுத்தி தேய்த்து துடைத்துக்கொண்டு திண்ணையிலமர்கின்றள் பாக்கியம்.

அடுத்து -

அவள் கண்கள் வெற்றிலை தட்டத்தை தேடுகின்றன!.

சுவரிலே முதுகைச் சாய்த்து காலை மெதுவாக, சுகமாக நீட்டிக் கொண்டு, வெற்றிலைத் தட்டத்தை அருகே இழுத்து வைத்துக்கொண்டு, பாக்கைத் தறிக்கிறாள்!.

அவன் கண்களிலே தாயின் பாதங்கள்.

தார் ரோட்டிலே நடந்து. நடந்து. தேய்ந்தாலும் அங்குமிங்குமாக தார் ஒட்டியிருந்தாலும் அவை பரிதாபகரமாக விகாரத்தன்மையுடன் அவன் கண்களை ஈட்டி கொண்டு கிழிக்கின்றன.

"தொழிலாளர் நலனுக்காக பாடுபடச் சங்கங்கள்.

யூனியன்கள்.எவ்வளவோ தோன்றுகின்றன.

'ஆனால்..என் அம்மா அக்கா. எட்டு மணியென்ன.. நாள் முழுக்க

உழைதது ஓடாகப் போகும் என் அம்மாவுக்காக உழைக்க பாடுபட

நலன் கோர... ஏதாவது சங்கங்கள்.?'

'அம்மாவுக்காக... எனக்காக...எங்கள் குடும்பத்திற்காக

யார் சங்கமாகவோ, யூனியனுக்காகவோ

இருந்திருக்க வேண்டியவரோ?. அவர்!.'

"அப்பா!. தொழிலாளர் நலனுக்காக

உழைத்த நீங்கள். எங்களை. என் அம்மாவை

மறந்துவிட்டு போய்விட்டீர்களே!..."

*O*

அடுப்பு கொழுந்துவிட்டு எரிகிறது.

தீக்கொழுந்துகள் பாத்திரத்தை ராக்ஷச வெறியுடன் தழுவி முத்தம் கொடுக்கின்றன!. அந்த வெப்பத்தில் பாக்கியம் மா வறுத்துக் கொண்டிருக்கிறாள்.

' அம்மா!" ' என்னடா ராசா!. என்ன வேணும்?.' தலையைத்

திருப்பாமலேயே பாக்கியம் கேட்கின்றாள்..

'நான் நேத்தைக்கு சொன்னதை நீ மறந்திட்டியே! நாளைக்கு சம்பளக்காசு கட்டவேணும். இல்லாட்டி பள்ளிக் கூடத்தால் கலைச்சுப் போடுவினம் எணை!...'

"சே!. நான் இவ்வளவு நேரமும் அதை மனசார அயத்துப் போயிருந்திட்டன். சின்னக்கடையால வரேக்க முதலாளி வீட்ட கடன் வாங்கி வரோணும் எண்டு நினைத் தனன். அதுக்குள்ளா? அயத்துப் போனன்!'

'பொறு! இதை வறுத்துப்போட்டுப் போய் வாங்கி வாறன். ஏன். இப்ப நீயும் எங்கேயும் வெளியால போகப் போறியே?.'

'இல்லையம்மா!. ஏன்?." அப்படிண்டா நீயும் என்னோட ஒருக்கா வெளியாலவா. காசை வாங்கிக் கொண்டு. ஒருக்கா சங்கக் கடைக்கும் போக வேண்டி இருக்கு!. போன கிழமைக் கூப்பனும் இன்னும் எடுக்கேல்ல. அப்படியே கொஞ்சம் 'சரக்கு முளகாய்யும் வாங்கி வரவேண்டியிருக்கு!'

'சரியம்மா!...'

இருவரும் முதலாளி--சிவசங்கரம்பிள்ளை வீட்டுவாசலில் நிற்கின்றர்கள்.

'எணை பிள்ளை. உங்க அம்மா இருக்கிறாவே?. '

'ஓமணை இதில இரு. அம்மாவைக் கூட்டியாறன்!...' --என்று சொல்லிக் கொண்டே கந்தசாமியை ஓரக்கண்ணால்

விழுங்கிக்கொண்டே உள்ளே நுழைகிறாள். சுந்தரி -சிவ சங்கரம்பிள்ளையின் ஒரே செல்வமகள்.

'என்ன பாக்கியம். என்ன இந்த நேரத்தில் இங்கால பக்கம்.' - என்று கேட்டுக்கொண்டு வருகிறாள் மீனாட்சி

'இல்லப்பிள்ளை.. ஒருக்கா சங்கக்கடைக்குப் போகணும் எண்டு வந்தனுங்கள். அதில ஒருக்கா உங்களையும் சந்திச்சுட்டுப் போகணும் எண்டு.'

'சும்மா கதைவிடாத. என்ன விசயம்?.'' என்று கேட்டுச் சிரிக்கிறாள் மீனட்சி

'உங்களுக்கேன் பொய்யைச் சொல்லுவான்.கொஞ்சம் கடனுக காசு கேட்கலாம் எண்டு...''

' என்ன காசோ...நல்ல கதை... இப்ப என்னட்டை ஒரு செப்பாலடிச்ச காசில்லை. எனக்கே கொஞ்சம் காசு தேவையா இருக்கு. என்ன செய்யலாம் எண்டு முளிச்சுக் கொண்டிருக்கிறன்.நல்ல நேரம்பாத்து காசுக்கு வந்தாய் போ!'.

'இல்லப்பிள்ளை அப்படிச் சொல்லாத ஒரு இருவது ரூவா தந்தியெண்டா போதும். மாத முடிவிலை தந்திடுறன்.'

★ஏன் இப்ப உனக்கு என்ன அவசரம் அப்படி. இருவது ரூபாவுக்கு?...'

'பிள்ளைக்கு பள்ளிக்கூடக் காசு கட்டவேணும்.!'--அவள் முகம் அந்தக் கஷ்டத்திலும் பெருமிதத்தில் சிலிர்க்கிறது- மழையின்போது எறிக்கும் வெயிலைப்போல.

' ஒ இவனே உன்ர மகன். நல்லா வளர்ந்திட்டான் இப்ப. என்ன படிக்கிறான்?.''

'இந்தமுறை எஸ். எஸ். சி சோதனை எடுக்கிறான்!...'' --மீனுட்சி முகம் பொருமையால் சுருங்கி, அவள் கண்கள் வெறுப்பால் அவள் மகனை உறுத்துப் பார்க்கின்றன.

'நீயும் இருக்கிறியே மாடுமாதிரி! - உன்னல எட்டாம் வகுப்பு பாஸ் பண்ண முடியவில்லை. உன்னைவிட குறைந்த வயதுக்காரன் போல இருக்கும் இவனைப்பார் எஸ். எஸ். சி. எடுக்கப் போறாண்!...'

''மன்னிச்சுக்சோ பாக்கியம். இப்ப என்னட்டை யெண்டா செப்பாலடிச்ச வெள்ளச் சல்லி கூட இல்லை ... '

'இல்ல நாச்சியார். அப்படிச் சொல்லக் கூடாது!...''

'இதென்ன பாக்கியம் காசு இல்லையெண்டிறன். நான் என்ன மரமே முளைக்கப் போட்டிருக்கிறன்!...''

'பிள்ளையின்ரை படிப்புக் கெட்டுப்போகும் நாச்சியார் கொஞ்சம் இரக்கம் வைத்து.'

உங்களுக்கெல்லாம் என்னத்துக்கு படிப்பை. பலகாரப் பெட்டி தூக்கினதுகளெல்லாம் அரசாங்க உத்தி யோகத்துக்குப் போக எண்டா முடியுமே!...''

'நாச்சியார்!.'--பாக்கியம் கூவுகிறாள்.

'வாய் மூடுங்க... அனாவசியமான வார்த்தைகள் இங்க வேண்டாம். இங்க உங்களிட்ட கடன் தான் கேட்டோமே தவிர சும்மா கேக்கவில்லை. தாறதெண்டா தாங்கோ. இல்லாட்டி விடுங்கோ. அதை விட்டு உங்களுக்குத் தேவையில்லாத பேச்செல்லாம் தேவையில்லை.''

--அவன் ஆத்திரத்தை பற்களால் கடித்துக் கொண்டு, வெளியே அமைதியாக பேசுகிறான்,

'பாரன் பிச்சைக்கார நாய்க்கு எவ்வளவு திமிரெண்டு. என்னைப் பார்த்து ஒருவன் கேக்கிற கேள்வியா?...'

'யார் பிச்சைக்கார நாய்கள். நீங்கதான். முந்தி சோத்துக்கு கூட வழியில்லாம திரிந்ததை நீங்க மறந்திட்டாலும் நாங்க மறக்கவில்லை. நாங்க பலகாரப்பெட்டி தூக்கினது எண்டு ஏளனமாக சொல்லுறிங்க...ஆணா நீங்க... ஏழைத் தொழிலாளர்களின் பணங்களைச் சுரண்டிச் சுரண்டிக் கொள்ளையடிக்கும் திருடர்கள். ஏழைகளிடையே திருடும் பிச்சைக்காரர்கள்....!'

அவன் ஆவேசமாகப் பேசுகிறான்.

'போடா வெளியே..!'

'வாம்மா இதில நிக்கிறது கூடப் பாவம்..!'

-- அவர்கள் தெருவிலே இறங்குகிறார்கள்.

''ஐயோ!. அப்பா. நீங்க தொழிலாளர் நலனுக்காக பாடுபடப் போய். அவர்கள் வாழ்வை உயர்த்தப் போய். எங்களை.. உங்கள்

குடும்பத்தை இன்னும் தாழ்த்தி விட்டீர்களே..!'

'தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உங்களால் ஒரளவு உயர்ந்திருந்தாலும் உங்கட குடும்பத்தின் வாழ்க்கைத்தரம் எவ்வளவு கேவல நிலைக்கு மாறிவிட்டது என்பதை உணர்வீர்களாக?.'

அவர்கள் நடக்கிறார்கள்.!

**நன்றி : விண்ணும் மண்ணும் (கதைப்பூங்கா கதைத்தொகுதி இரண்டு)**

❍

# செம்பியன் செல்வன்: ஒரு நூல்வழிப் பதிவு

என்.செல்வராஜா, லண்டன்.

**யா**ழ்ப்பாணம் திருநெல்வேலியில் பிறந்த ஆறுமுகம் இராஜகோபால் என்ற இயற்பெயருடைய செம்பியன் செல்வன் (01.01.1943-20.05.2005), ஈழத்தின் குறிப்பிடத்தக்க முன்னோடி எழுத்தாளர்களுள் ஒருவர். பின்னாளில் நாவல், சிறுகதை, நாடகம், உருவகம், குறுங்கதை, திரைப்படம், சஞ்சிகை என இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தனது ஆளுமையினைப் பதித்துச்சென்றவர் இவர்.

சிறுவயதிலேயே தனது பெற்றோரை இழந்த இவரும் இவரது தமையனாரான கணேசபிள்ளையும் தமது தாய்வழிப் பாட்டி நாகமுத்துவின் அரவணைப்பில் வளர்ந்து வந்தவர்கள். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துத் தமிழ் ஆரம்பப் பாடசாலையிலும், உயர் கல்வியை இந்துக் கல்லூரியிலும் பயின்றார்.




செம்பியன் செல்வனின் இலக்கிய ஈடுபாடு அவரது சிறுபராயத்திலேயே தனது ஐந்தாம் ஆண்டு மாணவப்பருவத்திலேயே (யாழ். இந்துக்கல்லூரி) தொடங்கிவிட்டது. இவரது தமையனார் கணேசபிள்ளை 1952இல் பத்மநாதன் என்ற தன் பாடசாலை நண்பருடன் இணைந்து கையெழுத்துச் சஞ்சிகைகளை தயாரித்து பரிமாறிக்கொள்ளும் வழமையைக் கொண்டிருந்தார். பத்மநாதன் ‘தாரா’’ என்ற கையெழுத்துச் சஞ்சிகையை தயாரித்து கணேசபிள்ளைக்கு அனுப்ப, கணேசபிள்ளை ‘செங்கதிர்’’ என்ற தனது கையெழுத்துச் சஞ்சிகையை அவருக்கு அனுப்பி இளம் வயதிலேயே இலக்கியப் பரிவர்த்தனை செய்துவந்தார். செங்கதிர் சஞ்சிகையிலேயே செம்பியன் செல்வன் ஆரம்பத்தில் தனது சிறுவர் இலக்கியக் கைவண்ணத்தைக் காட்டத் தொடங்கிவிட்டார். செங்கதிரில் ‘சி.ஐ.டி. சிங்காரம்’’ என்ற தலைப்பில் அப்போதே தான் எழுதிய சின்னஞ் சிறு துப்பறியும் நாவலும் உள்ளடங்கியிருந்ததாக தனது சிறு வயது அனுபவத்தை மீட்டுப்பார்க்கும்போது கூறுவார். (‘செம்பியன் செல்வனுடன் ஒரு சந்திப்பு- ந.குகபரன்’’ புலரி, இதழ் 1, ஐப்பசி-மார்கழி 2004).

தனது 17ஆவது வயதில் (1960) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து புவியியல் சிறப்புப் பட்டதாரியான இவர் ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமகாலத்தில் பட்டதாரி மாணவர்களாக பயின்று கொண்டிருந்த செங்கை ஆழியான், நவசோதி, செம்பியன் செல்வன் ஆகியோர் உள்ளிட்ட ஒரு குழுவினர் இணைந்து 'பல்கலை வெளியீடு'' என்னும் அமைப்பை உருவாக்கி, ஆண்டுக்கொரு சிறுகதைத் தொகுதியை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். கதைப்பூங்கா (1962), விண்ணும் மண்ணும் (1963), காலத்தின் குரல்கள் (1964), யுகம் (1968) என்னும் நான்கு தொகுதிகளையும் வெளியிட்டனர். செம்பியன் செல்வன் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பின்னர் வெளிவந்த 'யுகம்'' என்ற நான்காவது கதைத்தொகுதி இமையவன் (இயற்பெயர்: இ.ஜீவகாருண்யன்) அவர்களை தொகுப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்தது. இதில் மட்டுமே செம்பியன் செல்வனின் கதைகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை.

பல்கலை வெளியீடாக 1962இல் வெளிவந்த 'கதைப்பூங்கா'' என்ற முதலாவது சிறுகதைத் தொகுதி க.குணராசா, க.நவசோதி ஆகியோரால் தொகுக்கப்பெற்று, 12 கதைகளுடன் வெளிவந்திருந்தது. பேராசிரியர் க.கைலாசபதியின் முன்னுரையுடன் வெளிவந்த இச்சிறுகதைத் தொகுதியில் அன்று மாணவர்களாயிருந்து, பின்னாளில் பிரபல்யமாகியுள்ள பல ஈழத்துப் படைப்பாளிகளின் ஆரம்பகாலக் கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. செம்பியன் செல்வன் இத்தொகுப்பில் 'பாதி மலர்'' என்ற சிறுகதையை எழுதியிருந்தார். இவருடன் செ.யோகநாதன் (மலர்கள்), க.குணராசா (அவன் சமாதியில்), கோகிலா மகேந்திரன் (சமரசம்), வெ.கோபாலகிருஷ்ணன் (இடி விழ), அங்கையன் (சுவடு), வாணி (இறைவன் எங்கே), செ.கதிர்காமநாதன் (எட்டு மாதங்கள்), எம்.ஏ.எம். சுக்ரி (வாரிசு), அ.சண்முகதாஸ் (ஏமாற்றம்), முத்து சிவஞானம் (இறுதி மூச்சு), க.நவசோதி (வாழ்க்கைத் துணை) ஆகியோரும் தத்தமது சிறுகதைகளை எழுதியிருந்தனர்.

பல்கலை வெளியீடாக 1963இல் வெளிவந்த 'விண்ணும் மண்ணும்'' என்ற இரண்டாவது சிறுகதைத் தொகுப்பை செம்பியன் செல்வனே தொகுத்து வழங்கியிருந்தார். இதில் அவர் எழுதிய 'வர்க்கங்கள்'' என்ற கதையும், அந்த ஒரு நாள் (செங்கை ஆழியான்), வாழ்க்கை ஒரு காணிவல் (முருகு), குருடு (துருவன்), பேதம் (யோகேஸ் ஐயாத்துரை), துணை (எம். சிவபாலபிள்ளை), ஒடிவு (முத்து சிவஞானம்), ஓட்டம் (சி.மௌனகுரு), பகற்பொழுது (இ.சிவானந்தன்) ஆகிய கதைகளுமாக மொத்தம் ஒன்பது கதைகள் இடம்பெற்றிருந்தன.

பல்கலை வெளியீட்டின் மூன்றாவது சிறுகதைத்தொகுதி 'காலத்தின் குரல்கள்'' என்ற தலைப்பில் கலா பரமேஸ்வரனை தொகுப்பாசிரியராகக் கொண்டு 1964இல் வெளிவந்திருந்தது. செம்பியன் செல்வன் எழுதிய 'பாரம்பரியம்'' என்ற கதையுடன் க.பரராஜசிங்கம் (விளாம்பழம்), சபா ஜெயராசா (அணைப்பு), கலா பரமேஸ்வரன் (உதிரி), க.நவசோதி (அன்பின் அணைப்பில்), குந்தவை (மனிதத்துவம்), எம்.ஏ.எம். சுக்ரி (கழுவாய்), செல்வ. பத்மநாதன் (அசைவு) ஆகியோரின் கதைகளுமாக மொத்தம் 9 சிறுகதைகள் இத்தொகுப்பை அலங்கரித்துள்ளன.

செம்பியன் செல்வன் எழுதி வெளிவந்த முதலாவது நூலாக 'அமைதியின் இறகுகள்'' என்ற சிறுகதைத் தொகுதியைக் குறிப்பிடலாம். யாழ்ப்பாண மாநகர சபையின் அலுவலக முகவரியிலிருந்து இயங்கிய யாழ். இலக்கிய வட்டம் இந்நூலை டிசம்பர் 1966இல் வெளியிட்டிருந்தது. இத்தொகுப்பில் செம்பியன் செல்வன் எழுதிய இதயக் குமுறல், உணர்ச்சிக்கு அப்பால், பெண், குங்குமப்பூ, பழைய வானத்தின் கீழ், அமைதியின் இறகுகள், நெல், ஜகனி, நீரும் நிலமும், நிலம் யாருக்காகக் காலடியில் கிடக்கிறது, உப்பங்கழி ஆகிய 11 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

செம்பியன் செல்வன் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு காத்திரமானது. இதற்கு இவரது நாடகப் பிரதியாக்கங்களுக்குக் கிடைத்த பரிசுகளே சாட்சியமாகின்றன. 1966, 1967 ஆம் ஆண்டுகளில் இலங்கை கலைக்கழக நாடக எழுத்துப் பிரதிப் போட்டிகளில் 'இந்திரஜித்'', 'இருளில் எழும் பெருமூச்சுகள்'' ஆகியன முறையே இரண்டாம், முதலாம் பரிசுகளைப் பெற்றன. 1975, 1976ஆம் ஆண்டுகளில் இலங்கைக் கலாசாரப் பேரவையின் நாடக எழுத்துப் பிரதிப் போட்டிகளில் இவரது 'சின்ன மீன்கள்'', 'எரியும் பிரச்சினைகள்'' ஆகிய இரு நாடகப் பிரதிகளும் முதற் பரிசுகளைப் பெற்றிருந்தன.

செம்பியன் செல்வன் நாடகத்துறையின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக 1977-1983 காலகட்டத்தில் இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் நாடக ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும், 1981ஆம் ஆண்டு முதல் இலங்கை பிரதேச அபிவிருத்தி அமைச்சின் தமிழ் நாடக மதியுரைக் குழுவின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். பேராசிரியர் சு.வித்தியானந்தனுடன் இணைந்து, அன்றுவரை இலைமறை காய்களாக இருந்த ஈழத்தின் நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் பலரை இனம்கண்டு அவர்களை கௌரவித்து வந்தமையில் செம்பியன் செல்வனுக்கும் முக்கிய பங்குண்டு.

நவம்பர் 1967இல் செம்பியன் செல்வன் தனது முதலாவது நாடக நூலை 'மூன்று முழு நிலவுகள்'' என்ற பெயரில் யாழ்ப்பாணம் ஆசீர் வெளியீடாக ஆசீர்வாதம்

பதிப்பகத்தினூடாக வெளியிட்டுள்ளார். இது புத்தரின் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டெழுந்த வரலாற்று நாடகம். சாக்கியருக்கும் கோலியருக்குமிடையே ஏற்பட்ட போர்களே சித்தார்த்தனைத் துறவுபூணச் செய்தது என்ற கோஸம்பியின் ஆராய்ச்சி முடிவு இந்நாடகத்திற்கு பக்கபலமாயுள்ளது. சாக்கிய மன்னன் சுத்தோதனன், அவனது மகன் சித்தார்த்தன், சித்தார்த்தனின் தாய் மாயாதேவி, சித்தார்த்தனின் மனைவி யசோதை, அவர்களின் மகன் இராகுலன், யசோதையின் தமையன் தேவதத்தன், மகத நாட்டு மன்னன் அஜாதசத்துரு, அங்குலிமாலன் என்ற கொள்ளையன் ஆகியோர் உள்ளிட்ட 20 பேர்வரை இவரது நாடக பாத்திரங்களாக இடம்பெறுகின்றனர். தேவதத்தனை சில ஆய்வாளர்கள் சுத்தோதனனின் புதல்வன் என்று கருதினாலும், இந்நாடகத்தில் அவன் யசோதையின் சகோதரனாகக் காட்டப்படுகின்றான் என்பது குறிப்பிடத்தக்கது. செம்பியன் செல்வன் இலங்கை கலைக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் தொடர்ந்து 4 வருடங்கள் முதல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'விடிய இன்னும் நேரமிருக்கு" என்ற தலைப்பில் யாழினி, உடுவை தில்லைநடராசா, மு.கனகராசன் ஆகியோருடன் இணைந்து செம்பியன் செல்வன் வெளியிட்ட ஓரங்க நாடகங்களின் தொகுதியொன்று ஜனவரி 1971இல் யாழ்ப்பாணம் ஈழநாடு வெளியீடாக வெளிவந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த இலங்கையின் முதலாவது பிராந்தியப் பத்திரிகையான ஈழநாடு தனது 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்திய ஓரங்க நாடகப் போட்டியில் பரிசுபெற்ற நாடகங்கள் இவை. இதில் யாழ்ப்பாணத்துச் சமூகம் ஒன்றினை சித்திரிக்கும் செம்பியன் செல்வனின் 'விடிய இன்னும் நேரமிருக்கு", மொகலாய சாம்ராஜியத்தின் பகைப்புலத்தில் எழுதப்பட்ட யாழினியின் 'தாஜ்மஹால்", கொழும்பு வாழ்க்கையில் இடம்பெறும் போலித்தனங்களைச் சித்திரிக்கும் உடுவை தில்லை நடராசாவின் 'பூமலர்", ஜெருசலத்தின் பகைப்புலத்தில் உருவாகிய மு.கனகராசனின் 'சிலுவையும் குத்துவாளும்" ஆகிய நான்கு ஓரங்க நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. பத்தாவது ஆண்டு நிறைவினையொட்டி ஈழநாடு நடாத்திய நாடகப் போட்டியில் முதற் பரிசினைப் பெற்ற செம்பியன் செல்வனின் "விடிய இன்னும் நேரமிருக்கு" என்ற ஓரங்க நாடகம் இலக்கிய விமர்சகர்களால் விதந்து குறிப்பிடப்பட்டது. அதுவே இந்நூலின் தலைப்புமாயிற்று. கலியாணத்திற்காகக் காத்திருக்கும் ஒரு பெண் தன் கலியாணச் செலவுகளுக்காக உழைக்கிறாள். அப்பணம் இறுதியில் தம்பியின் வேலையொன்றிற்குச் செலவாகிறது. அதே வேளை அப்பெண்ணின் தாய் இன்னொரு குழந்தைக்கும் தாயாகிறாள். அதைப் பராமரிக்கின்ற புதிய பொறுப்பும் அவளிடம் சேர்கிறது என்பதாக இந்நாடகத்தின் கதை நகர்த்தப்பட்டிருந்தது.

செம்பியன் செல்வன் 'விவேகி", 'புவியியல்", 'நுண்ணறிவு" ஆகிய சஞ்சிகைகளின் இணை ஆசிரியராகவும், 'அமிர்த கங்கை", 'கலைஞானம்" ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் 'இலக்கியம்" என்னும் ஆண்டு மலரின் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

செம்பியன் செல்வனின் முதலாவது கட்டுரைத் தொகுதி 'ஈழத் தமிழ்ச் சிறுகதை மணிகள்" என்ற பெயரில் ஜுலை 1973இல் திருக்கோணமலை, முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழுவெளியீடாக வெளிவந்திருந்தது. 1960ம் ஆண்டின் ஆரம்பக் காலகட்டத்திலிருந்து எழுபதுகள் வரை செம்பியன் செல்வன் 'விவேகி" சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த வேளையில் எழுதிய கட்டுரைகளின் நூல்வடிவமே இதுவாகும். ஈழச் சிறுகதை இலக்கிய முன்னோடிகளின் கால-அரசியல், பொருளாதார, சமூக வாழ்க்கைப் பின்னணிகளினூடாக, அவை தொடர்பான ஈழச் சிறுகதை வளர்ச்சியின் செல்நெறி இக்கட்டுரைகளில் காட்டப்பட்டுள்ளது. சி.வைத்தியலிங்கம் (பாற்கஞ்சி), இலங்கையர்கோன் (வஞ்சம்), சம்பந்தன் (துறவு), வரதர் (கற்பு), அ.செ. முருகானந்தம் (காளிமுத்துவின் பிரஜாவுரிமை), தாளையடி சபாரத்தினம் (ஆலமரம்), அ.ந.கந்தசாமி (இரத்த உறவு) ஆகிய படைப்பாளிகளையும் அவர்களது முக்கியமான படைப்பொன்றையும் இத்தொகுப்பில் தரிசிக்கமுடிகின்றது.

செம்பியன் செல்வனின் முதலாவது நாவலான 'நெருப்பு மல்லிகை" வீரகேசரி பிரசுரமாக வெளிவந்திருக்கிறது. வீரகேசரி பிரசுரத்தினரின் 73ஆவது வெளியீடாக இந்நாவல் நவம்பர் 1981இல் வெளிவந்திருந்தது. யாழ்ப்பாண நகர்ப்புறச் சூழலில் சுரண்டப்படுபவர்கள் - சுரண்டிக் கொழுப்பவர்கள் ஆகிய இருநிலை மாந்தரின் கதையாக நெருப்பு மல்லிகை அமைகின்றது. உண்பதற்கு உணவில்லாது பசியால் களைத்து மயங்குபவனைத் தாங்க நான்குபேர். அதே வேளை, தின்ற உணவு ஜீரணிக்காது திக்குமுக்காடுபவனைத் தாங்கவும் நான்கு பேர். இவர்கள் எல்லோரும் சேர்ந்தமைந்த சமூக வட்டத்தில் சிறகொடிந்த தாய்ப்பறவை ஒன்று. தலைவனை இழந்த குடும்பத்தைத் தாங்கிவளர்க்கத் துடிக்கும் ஒரு பெண் தலைமைத்துவக் குடும்பத்தின் கதை இது. குஞ்சுகளைக் காக்கச் சிறிது சிறிதாகப் பருக்கை தேடும் அத் தாய்ப்பறவையைக் கொத்திக் குதறத் தயாராக இருக்கும் ஒரு வல்லூறு. இம்மரணப் பாய்ச்சலில் வல்லூறின் கூரிய நகங்கள் மழுங்கினவா அல்லது தாய்ப் பறவையின் சத்திய வேட்டைக்கு வல்லூறே பலியாகியதா என்பதை சுவாரஸ்யமாகச் சொல்லும் நாவல் இது.

இந்நாவல் வீரகேசரி பிரதேச நாவல் போட்டியில், 81 நாவல்களிடையே கலாநிதி பொன்.பூலோகசிங்கம், திரு.இ.இரத்தினம், திரு.மு.பொன்னம்பலம் ஆகிய நடுவர்களால் ஏகமனதாக முதலாவது நாவலாகத்

தேர்வுசெய்யப்பட்டும், அதிசிறந்த பிரதேசப் பரிசு நாவலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டும் என இரட்டை முதற் பரிசுகளைப் பெற்றது.

செம்பியன் செல்வனின் முதலாவது ஆன்மீக உணர்வூற்று உருவகச் சித்திரமாக வெளிவந்த நூல் ‘நாணலின் கீதை’’ என்பதாகும். யாழ்ப்பாணம், அபிராமி பதிப்பகத்தின் உரிமையாளர் எஸ்.முருகானந்தன் தமது முதல் வெளியீடாக இந்நூலை வெளியிட்டிருந்தார். இது பின்னாளில் செம்பியன் செல்வனின் மறைவின் பின்னர் 2005இல் வெளிவந்த அவரது நினைவுமலரிலும் முழுமையாக மீள்பதிப்புக்குள்ளாகியிருந்தது. ஆத்மாவின் இதயக் கதவுகளைத் தட்டியெழுப்பும் உள்ளொளி உணர்வூற்று உருவகச் சித்திரங்களாக நாணலின் கீதையின் படைப்புக்கள் அமைந்துள்ளன. தத்துவார்த்த சிந்தனைகளாக மாத்திரம் அமையாது, அழகிய அர்த்தபூர்வமான கவிதை நடையில் இவை எழுதப்பட்டுமுள்ளன. ஒரு கிளிஞ்சலின் கீதம், முள்ளும் மலரும், துடுப்பில்லாத படகு, வலைக்கண்ணிகள், முட்கள் ஒடியும் ஓசைகள், வேட்டைக்காரன், சந்நிதி குண்டம், சிரிப்புப் பிரசாதம், இருளின் ஒளி, புல்லின் பூக்கள், நாணலின் கீதை ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

இவர் தொகுத்திருந்த ‘குறுங்கதை நூறு’’ என்ற நூல் யாழ்ப்பாணம் நான் வெளியீடாக, கொழும்புத்துறை அமலமரித் தியாகிகள் குருமடத்தினரால் டிசம்பர் 1986இல் வெளியிடப்பட்டிருந்தது. செம்பியன் செல்வன் ‘அமிர்த கங்கை’’ இதழின் ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் அச்சஞ்சிகையில் தொடராக எழுதிவந்த நூறு குறுங்கதைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. இக்கடுகுக் கதைகள் வெளிவந்த காலத்தில் வாசகர்களின் தீர்க்கமான சிந்தனைக்கு ஊக்க மாத்திரைகளாக அமைந்திருந்ததாக அக்கால கட்டத்தில் சிலாகித்துக் கூறப்பட்டிருந்தது. நான் வெளியீட்டு வரிசையில் ஏழாவது நூலாக இந்நூல் வெளிவந்திருந்தது.

‘நெருப்பு மல்லிகை’’யை தொடர்ந்து 1989இல் செம்பியன் செல்வன் எழுதியிருந்த ‘கானகத்தின் கானம்’’ என்ற இரண்டாவது நாவலை யாழ்ப்பாணத்திலிருந்து டேவிட் லிகோரி அவர்கள் தமது மீரா பதிப்பக வெளியீடாக ஓகஸ்ட் 1989இல் வெளியிட்டிருந்தார். சாதி அமைப்பில் புரையோடிப்போயிருந்த அடக்கு முறையினை மையமாக வைத்துப் பின்னப்பட்ட சமூகநாவல் இது. இந்நாவல் அச்சாகிய காலப்பகுதியில் நிலவிய விடுதலைப் போராட்டச் சூழலில் காணப்பட்ட வெளிப்படுத்தப்படாத தணிக்கை காரணமாகவும், வெளியீட்டாளர், எழுத்தாளர்களுடைய உயிரச்சம் சார்ந்த சுய பாதுகாப்புக் கருதியும் கானகத்தின் கானம் நாவலின் 64 பக்கங்களை நீக்கி 124 பக்கங்களிலேயே அதனை அச்சேற்ற வேண்டியிருந்தது. எதிர்காலத்தில் இலக்கிய அன்பர்கள் இந்நாவலை மீள்பதிப்புச் செய்ய முன்வருமிடத்து ‘கானகத்தின் கானம்’’ நாவல் ஆசிரியரின் சுயதணிக்கை செய்யப்படாத முழுமையான பிரதியை அச்சிடுவதையிட்டு கவனம் கொள்ள வேண்டும்.

செம்பியன் செல்வனின் மூன்றாவது நாவல் ‘விடியலைத் தேடும் வெண்புறாக்கள்’’ என்பதாகும். இது முன்னர் ‘ஈழமுரசு’’ பத்திரிகையில் தொடர்கதையாகப் பிரசுரமாகியிருந்தது. பின்னர் 300 பக்கங்கள் வரையில் கொண்ட நாவலாக ஈழமுரசு பதிப்பகத்தில் 1995இல் அச்சிடப்பட்டு வந்தது. இக்காலகட்டத்தில் தான் ஈழத்தமிழரின் போராட்ட வரலாற்றின் மிக முக்கியமான வரலாற்று நிகழ்வொன்று நடந்தேறியது.

ஈழத்தின் வடபகுதியில் தளம்கொண்டுள்ள பலாலி இராணுவ முகாமிலிருந்து பெருமெடுப்பில் வலிகாமம் பிரதேசத்தை நோக்கிய படைநகர்வொன்றை நடத்தத் திட்டமிடப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு முகம்கொடுக்க இயலாமல் 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ம் திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் பகுதியிலிருந்து மக்கள் அனைவரும் தாம் வாழ்ந்த வீடுவாசல்களையும் தேடிய தேட்டங்களையும் கைவிட்டு பயத்தோடும் பரிதவிப்போடும் குடாநாட்டை விட்டு, பாரிய இடப்பெயர்வொன்றை (Exodus) மேற்கொண்டார்கள். உலகின் எந்தவொரு இனத்திற்கும் வரலாற்றில் ஏற்பட்டிராததும் பாரிய எடுப்பில் இடம்பெற்றதுமான இந்த அவல நிகழ்வில் ஏறத்தாள ஐந்து இலட்சத்தி இருபத்தி ஐயாயிரம் மக்கள் கையில் எடுக்கக்கூடிய பொருட்களுடன் குடும்பம் குடும்பமாக ஒரே நாளில் புறப்பட்டு சேரிடம் அறியாது மூன்று நாட்களாக உண்ண உணவின்றி மரநிழல்களில் தங்கிக் கூட ஒய்வெடுக்கும் வாய்ப்பின்றி ஒருவழிப் பயணத்தை மேற்கொண்ட அந்தக் கையறுநிலை ஈழப்போராட்ட வரலாற்றில் ஒரு பாரிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் தனிப்பட்ட சொத்துக்கள் மாத்திரமன்றி ஏராளமான கல்வியியல் நிறுவனங்களும் கூட இந்தப் புலப்பெயர்வால் கைவிடப்பட்டு பாரிய பாதிப்புக்குள்ளாயின. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல ஆயிரம் நூல்களும் ஆவணங்களும் இவ்விடப்பெயர்வின் பயனாகக் கவனிப்பாரற்று கறையான்களின் பசிக்கு உணவாகி அழிந்தொழிந்து விட்ட செய்தி மனதை வருத்துவதாகவுள்ளது. கிராமம் தோறும் கட்டிக்காத்த சனசமூக நிலையங்களில், பொது நூலகங்களில் பாதுகாத்து வைக்கப்பட்ட நூல்களின் இழப்பு கொஞ்ச நஞ்சமல்ல. படைப்பாளிகள் பலர் தமது படைப்புக்களையும் சேகரித்துக் காத்து வைத்த நூல்களையும் இக்காலகட்டத்தில் பெருமளவில் இழந்தார்கள். அச்சகங்களில் அரைகுறையாக அச்சிடப்பட்டுக் கொண்டிருந்த நூல்கள் பல அச்சகங்களிலேயே கைவிடப்பட்டன.

செம்பியன் செல்வனின் ‘விடியலைத் தேடும்

வெண்புறாக்கள்'' நாவலுக்கும் இக்கதியே ஏற்பட்டது. இந்நாவலின் அச்சான பிரதிகள் அழிந்து போயின. இந்நாவலின் பிரதிகளை எவராவது வைத்திருந்தால் அவர்கள் பாக்கியசாலிகள். முடிந்தால் நூலகம் இணையத்தில் செம்பியன் செல்வனின் குடும்பத்தினரின் அனுமதியோடு இந்நாவலை மின்வருடல்செய்து மீளுயிர்ப்புக்கு வழிகோலலாம்.

'விடியலைத் தேடும் வெண்புறாக்கள்'' போன்றே மேலும் சில தொடர்கதைகள் செம்பியன்செல்வனால் பத்திரிகைகளில் முதலில் எழுதப்பட்டுள்ளன. 1963ம் ஆண்டுக் காலப்பகுதிகளில் சுதந்திரனில் 17.3.1963 முதல் 27.10.1963 வரை செம்பியன் செல்வனும் செங்கை ஆழியானும் ஒருவர் மாறி ஒருவராக எழுதிய பரீட்சார்த்த தொடர்கதை தான் 'நிழல்கள்''. யாழ்ப்பாண சமூகத்தின் முதிரா இளைஞர்களின் மனப்போராட்டங்களைச் சுவையாகச் சித்திரிக்கும் தொடர்கதை. செங்கை ஆழியான் முதல் அத்தியாயத்தை தொடங்கி வைக்கிறார். செம்பியன் செல்வன் இறுதி அத்தியாயத்தை நிறைவு செய்கிறார். இடையில் செம்பியன் செல்வனும் செங்கை ஆழியானும் ஒருவர் மாறி ஒருவராக கதையை நகர்த்திச் சென்றுள்ளார்கள்.

செம்பியன் செல்வனின் பிற தொடர்கதைகளாக 'நேரங்கள்'', 'கர்ப்பக்கிரகம்'' ஆகியவையும் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன என அறியமுடிகின்றது.

ஈழத்துச் சிறுகதைத் துறையின் வளர்ச்சிக்கு உரமூட்டிய திருமூலர்களுள் சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன் ஆகியோருடன் க.ஞானசம்பந்தனும் இணைந்து போற்றப்படுகின்றார். 1913இல் பிறந்த இவர் 'சம்பந்தன்'' என்ற பெயரில் படைப்புலகில் தன் 25ஆவது வயதில் அறிமுகமாகியவர். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் மாணவர். பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றியவர்.

1966இல் செம்பியன் செல்வன், செங்கை ஆழியான் ஆகியோரின் முயற்சியின் பயனாக அவர்களது 'விவேகி'' சஞ்சிகையின் ஓகஸ்ட் மாத இதழில் சம்பந்தனின் ஐந்து கதைகளைத் தொகுத்து, சம்பந்தன் பற்றி எழுதப்பட்ட ஒரு ஆய்வுக் கட்டுரையுடன் அவ்விதழை சம்பந்தன் சிறப்பிதழாக வெளியிட்டிருந்தார்கள்.

ஜனவரி 1998இல் மீண்டும் இவர்கள் இருவரும் 'சம்பந்தன் சிறுகதைகள்'' என்ற தலைப்பில் நூலுருவில் சம்பந்தனின் பத்து சிறுகதைகளைத் தொகுத்து யாழ்ப்பாணம், இலங்கை இலக்கியப் பேரவை வெளியீடாக வெளியிட்டிருந்தார்கள். மகாலட்சுமி (கலைமகள்), மதம் (கலைமகள்), சலனம் (கலைமகள்), விதி (கலைமகள் / கதைக்கோவை), தூமகேது (கலைமகள்), இரண்டு ஊர்வலங்கள் (மறுமலர்ச்சி), அவள் (மறுமலர்ச்சி), துறவு (கலைமகள்), சபலம் (கலைச்செல்வி), பிரயாணி (ஈழகேசரி) ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டிருந்த இக்கதைகள் 1930-1950 காலகட்டத்தில் சம்பந்தன் அவர்களால் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தகுந்தது.

ஜுலை 2002இல் செம்பியன் செல்வனின் இறுதி நூலாக வெளிவந்தது 'சர்ப்பவியூகம்'' என்ற அவரது சிறுகதைகளின் தொகுப்பாகும். இந்நூல் வெளிவந்த மூன்றாண்டுகளின் பின்னர் 2005 மே 20அன்று தனது அறுபத்திரண்டாவது வயதில் கொழும்பில் இவர் காலமானார்.

யாழ். இலக்கிய வட்டத்தின் தாபகச் செயலாளராகவும், இலங்கை இலக்கியப் பேரவையின் செயலாளராகவும், இலங்கைத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் இயங்கியதுடன் யாழ் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றிவந்த செம்பியன் செல்வனின் சிறுகதைகள் அவரது பரந்து விரிந்த படைப்பனுபவத்தினை நன்கு புலப்படுத்தி நிற்கின்றன. இத்தொகுப்பில் பூவும் கனியும், கால்நடைகள், குரூரம், சர்ப்பவியூகம், சாக்கடைநீர் தெறிக்காதவர்கள், வடக்கே ஒரு பாடசாலை, வீடு திரும்புதல், நிலம்-வீடு-வாசல், மழைக்காலங்களும் மண் பொம்மைகளும், அரும்பு, உயிரின் நிறம் என்ன?, போர்க்கால இலக்கியங்கள், பழங்கட்டில், கருங்கற் பூமியும் நெருஞ்சிக் காமமும், கன்னிக்கால், மனிதர்கள், துறவி, ஓவர்லாண்ட், ஞாயிற்றுக் கிழமை, பேரனும் தாத்தாவும், காண்டீபம், காலமை, தகர்வு ஆகிய 23 கதைகள் இடம்பெற்றுள்ளன. செம்பியன்செல்வனின் படைப்புக்களில் மிக்க அவதானிப்பும் முரண்படாத பாத்திர வார்ப்பும் சமூக எதிர்வு நோக்கலும் கலைத்துவமாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இச்சிறுகதைத்தொகுதி இலங்கை சாஹித்யவிருது பெற்றமை குறிப்பிடத்தக்கது.

செங்கை ஆழியான் எழுதிய 'வாடைக் காற்று'' திரைப்படமான பொழுது, அதற்கான திரைக்கதை, வசனங்களை எழுதியவர் செம்பியன் செல்வனாவார். பல்கலைக்கழக வாழ்விலிருந்து இணைபிரியாத நட்பைப் பாராட்டி வந்த இருவரும் இணைந்து நீண்டகாலம் இலக்கியப் பணியாற்றி வந்துள்ளனர்.

செம்பியன்செல்வனின் படைப்பாக்கங்கள் அனைத்தும் நூலுருவாக்கப்படாமை இங்கு கவனத்திற்குரியது. பத்திரிகை, சஞ்சிகைகளின் தொடர்கதைகள், சிறுகதைகள் என்பன இன்னமும் ஆங்காங்கே சிறு சஞ்சிகைகளிலும், பழைய பத்திரிகைக் கட்டுகளினுள்ளும் புதையுண்டு கிடக்கின்றன.

'குறுங்கதை நூறு'' என்ற நூலில் இடம்பெற்ற நூறு குறுங்கதைகளை விட மேலும் பல குறுங்கதைகள் ஆங்காங்கே தேடல்களின்போது தலைநீட்டிய வண்ணம் உள்ளன. இவை அனைத்தும் தேடிப்பெறப்பட்டு முழுமையான பெருந்தொகுப்பாக ஆவணப்படுத்தப்படல் வேண்டும். இதற்கான உரிய நடவடிக்கைகளை

வடக்கு மாகாண, பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு போன்ற நிறுவனங்களே மேற்கொள்ள முன்வரவேண்டும். அதுவரை செம்பியன்செல்வனின் ஈழத்து இலக்கிய ஆளுமை முழுமையாக ஆய்வுக்குட்படுத்த முடியாது போகலாம். யானையைப் பார்த்த குருடர்களின் நிலைமையிலேயே எமது கலை இலக்கிய ஆய்வாளர்கள் விடப்படுவார்கள்.

**இந்நூலில் பயன்படுத்தப்பட்ட நூல்கள்:**


*1963*

*விண்ணும் மண்ணும். செம்பியன் செல்வன் (தொகுப்பாசிரியர்). பேராதனை: பல்கலை வெளியீடு, 1வது பதிப்பு, ஜனவரி 1963. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி). 89 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18.5x12 சமீ.*

*1966*

*அமைதியின் இறகுகள். செம்பியன் செல்வன். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், மாநகர சபை, 1வது பதிப்பு, டிசம்பர் 1966. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி). 143 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12 சமீ.*

*1967*

*மூன்று முழு நிலவுகள் (நாடகம்). செம்பியன் செல்வன். யாழ்ப்பாணம்: ஆசீர் வெளியீடு, 32 கண்டி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1967. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி). (8), 92 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21.5x14 சமீ.*

*1971*

*விடிய இன்னும் நேரமிருக்கு: ஓரங்க நாடகங்கள் தொகுதி 1. செம்பியன் செல்வன், யாழினி, உடுவை தில்லை நடராசா, மு.கனகராசன். யாழ்ப்பாணம்: ஈழநாடு வெளியீடு, 1வது பதிப்பு, ஜனவரி 1971. (யாழ்ப்பாணம்: ஈழநாடு அச்சகம்). (10), 100 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x13 சமீ.*

*1973*

*ஈழத் தமிழ்ச் சிறுகதை மணிகள். செம்பியன் செல்வன். திருக்கோணமலை: முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழு, 1வது பதிப்பு, ஜூலை 1973. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி). xx, 9-96 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 21x13.5 சமீ.*

*1981*

*நெருப்பு மல்லிகை. செம்பியன் செல்வன் (இயற்பெயர்: ஏ.ராஜகோபால்). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, நவம்பர் 1981. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்). (6), 254 பக்கம், விலை: ரூபா 13.50, அளவு: 18x12 சமீ.*

*1982*

*நாணலின் கீதை. செம்பியன் செல்வன். யாழ்ப்பாணம்: எஸ்.முருகானந்தன், அபிராமி பதிப்பகம், 17, ஜும்மா பள்ளிவாசல் வீதி, 1வது பதிப்பு, ஜுன்1982. (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம், 17, ஜும்மா பள்ளிவாசல் வீதி). xii, 42 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 17.5x12.5 சமீ.*

*1986*

*குறுங்கதை நூறு. செம்பியன் செல்வன். (இயற்பெயர்: ஆ.இராஜகோபால்). யாழ்ப்பாணம்: நான் வெளியீடு, அமலமரித் தியாகிகள் குருமடம், கொழும்புத்துறை, 1வது பதிப்பு, டிசம்பர் 1986. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம், 12, பட்ரிக்ஸ் வீதி). (4), 82 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18.5x12.5 சமீ.*

*1989*

*கானகத்தின் கானம். செம்பியன் செல்வன் (இயற்பெயர்: ஆ.இராஜகோபாலன்). யாழ்ப்பாணம்: டேவிட் லிகோரி, மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1989. (யாழ்ப்பாணம்: புதிய சித்திரா பதிப்பகம்). (4), 124 பக்கம், விலை: ரூபா 27.00, அளவு: 17.5x12.5 சமீ.*

*1998*

*சம்பந்தன் சிறுகதைகள். சம்பந்தன் (மூலம்), செங்கைஆழியான், செம்பியன்செல்வன் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: இலங்கை இலக்கியப் பேரவை வெளியீடு, 82, பிறவுன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1998. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர). 146 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x12.5 சமீ.*

*2002*

*சர்ப்பவியூகம். செம்பியன் செல்வன். (இயற்பெயர்: ஆறுமுகம் இராஜகோபால்). யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஜூலை 2002. (யாழ்ப்பாணம்: பொஸ்கோ நிறக்கலைப்பதிப்பகம், நல்லூர்). x, 224 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250.00, அளவு: 20.5x15 சமீ.*

# கையுறை

**செம்பியன்செல்வன்**

குசேலர் தன் மனைவியைக் கூப்பிட்டார்.

''சுசி... நான் கிருஷ்ணனைச் சந்திக்கப் போகவேண்டுமே...எதனைத் தந்துவிடப் போகிறாய்?...''

''சுவாமி! உங்கட்குத் தெரியாமல் என்னிடம் ஏது இருப்பு?.... அடுத்த வீட்டில் கடனாகப் பெற்ற ஒரு படி அவல்தான் என்னிடம் இருக்கிறது.....''

''அவலா...அவனுக்கு நிறையைப் பிடிக்குமே...அதுவே போதும்...''

''சுவாமி...பிள்ளைகள் பசியால் கத்துகின்றனவே...கிருஷ்ணன் தங்கள் நண்பன்தானே....

அவருக்கு நீங்கள் கையுறை கொண்டுபோக வேண்டுமா?''

''அடி பேதாய்... கண்ணன் என் நண்பன் மட்டுமல்ல...ஒரு பெரிய அதிகாரி என்பதனை மறந்தா போய்விட்டாய்...''

**– குறுங்கதை நூறு (செம்பியன் செல்வன்)**

# பொறுக்கி

அவன் வீட்டு வாசற்படியில் உட்கார்ந்திருந்தான்.

தெருவோரமாகக் கிடந்த மணிக்கற்களை எடுத்து,விட்டெறிந்து கொண்டிருந்தான்.

அவன்கரங்கள். வேலை. உழைப்பு. எனத் துடித்தன.

வயிறும் பசியால் அழுதது.

''இதிலிருந்து கொண்டு வீணாக ஏன் கற்களை எறிகின்றாய்? ஆற்றங்கரைகளில் போய் சிறுமணிக்கற்களைப் பொறுக்கிவா பணம் தருகிறேன்'' -என்றது ஒரு குரல்.

''ஏன்'' ''

''கேள்விகேட்காதே.சொன்னதைச் செய். கூலியைப் பெற்றுச் செல்! -பதில் கடுமையாக வந்தது.

❍ ❍ ❍

அவன் சோற்றிற்காகக் காத்திருந்தான்.

மனைவி அரிசியைக் களைந்து கொண்டிருந்தாள்.

''ஏய்.இன்னுமா சோறு காச்சவில்லை. பசியால் பிராணன் போகுது''.

❍ ❍ ❍

அவன் ஆவலோடு சோற்றை வாயிலிட்டான்.

''நறுக்''-வாயில் கல் கடிபட்டது.

அடுத்தவாய்

''நறுக்!'' அவன் வாயில் கடிபட்ட கல்லை எடுத்துப் பார்த்தான்.

ஆச்சரியத்தால் அதிர்ந்து கூவினான்.

''கண்டுகொண்டேன். இவை நான் பொறுக்கிய கற்களல்லவா?

**– நன்றி : சுப்பிரமணியம் குணேஸ்வரன்**

❍

# அமரர் செம்பியன் செல்வன் சிறுகதைகளில் சமுதாயப்பார்வை!

சுந்தரிமணியன், புதூர்

யாழ் இலக்கிய வட்டத்தின் இயக்குநராகத் திகழ்ந்தவரும் தரமான சிறுகதைப் படைப்புகளை இலங்கைத் தமிழ் இலக்கிய உலகுக்கு வழங்கியவருமான அமரர் செம்பியன் செல்வன் அவர்கள் தனது எழுத்துக்களால் முத்திரை பதித்தவர். தனக்கென தனிப்பாதை வகுத்து இலங்கையின் சிறுகதைத் தளத்தில் தடம்பதித்தவர். மிகச்சுருக்கமாக எழுதப்பட்ட கதைகளிலும் ஆழமான பொருள்நயம் மிகுந்த கதைகளை வழங்கியவர். அமிர்த கங்கை என்ற இதழின் ஆசிரியராகவும் தனது இலக்கியப் பங்களிப்பை வழங்கியவர்.

செம்பியன் செல்வனின் சிறுகதைத் தொகுதியான அமைதியின் இறகுகள் தொகுதியில் அமைந்த உணர்ச்சிக்கு அப்பால், பெண், குங்குமப்பூ, பழைய வானத்தின் கீழ், அமைதியின் இறகுகள் ஆகிய சிறுகதைகளில் சமுதாயப்பார்வையினை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. சமுதாயப் பார்வை என்பது எப்படி அமையவேண்டும் என்பதை, “ஒரு பிரச்சினையைப் புரிந்து கொள்ள, அந்தப் பிரச்சினையை மட்டும் தனித்துவப்படுத்திச் சிந்திப்பது ஒரு வகை. அதே



பிரச்சினையைப் புரிந்துகொள்ள அதனுடன் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் தொடர்பு கொண்டுள்ள சமுதாயத்தின் மொத்த நிகழ்வில் – இயக்கத்தில் – அந்தப் பிரச்சினையை நிறுத்தி வைத்து ஆய்வு செய்வது மற்றொரு வகை. அந்த இரண்டாம் வகை ஆய்வே சமுதாயப்பார்வை" என்கிறார் மேலாண்மை பொன்னுச்சாமி.

உணர்ச்சிக்கு அப்பால் என்ற சிறுகதையில் சரியில்லாத தந்தையால் கைவிடப்பட்ட மகன் படும் வேதனைகளைப் பதிவுசெய்கிறார். தகப்பன் சாகும் தருவாயில் மகனைப் பார்க்க ஆசைப்பட அதை ஏற்றுக் கொள்ளாத மகனின் மன உணர்வுப் போராட்டங்களையும் இறுதியில் தந்தை இறந்தவுடன் தானாக வரும் கண்ணீரையும் இக்கதையில் பதிவு செய்துள்ளார்.

பெண் என்ற சிறுகதையில் திருமணமாகாத சீலா என்ற பெண் தாயால் விற்கப்பட்டவள், பருவம் வந்தும் மணமாகாத காரணத்தால், வேறு ஒரு ஆணின் ஆசைக்கு இணங்கி குழந்தை பெறுகிறாள். வேலை பார்க்கும் வீட்டில் எஜமானி குழந்தையை யாரிடமாவது ஒப்படைத்துவிட்டு வேலைக்கு வா என்கிறாள். சீலாவுக்குக் குழந்தையைக் கொடுத்த பண்டாவும் அவளது மனைவியும் கூட அவர்களுக்குக் குழந்தையில்லாததால் குழந்தையை நாங்கள் வளர்க்கிறோம் நீ எப்பொழுதும் போல் வேலைபார் என்கின்றனர். சீலா நான் குழந்தையை விற்று வாழவிரும்பவில்லை என்கிறாள். தாய்மையின் அன்பினை இச்சிறுகதையில் பதிவு செய்கிறார். கணவன் இல்லாவிட்டாலும் பெற்ற குழந்தைதான் தனக்கான வாழ்வு என்று அதற்காகத் துன்பத்தைத் தாங்க முடிவு செய்வதுதான் தாய்மை எனப் பெண்ணின் சிறப்பினை எடுத்தியம்புகிறார்.

குங்குமப்பூ என்ற சிறுகதையில் வள்ளி என்ற பெண், குழந்தை வெள்ளையாகப் பிறக்கவேண்டும் என்று விரும்பி குங்குமப்பூ சாப்பிடுகிறாள். ஆனால் தான் வேலை பார்க்கும் வீட்டு எஜமானன், அவனது பெண் என வெள்ளையாக இருக்கும் அனைவரும் உள்ளத்தில் அழுக்கோடு இருப்பதைப் பார்த்து மனம் வெதும்புகிறாள். இறுதியில் தனக்குப் பிறக்கும் ஆண்குழந்தை வெண்மையாக அழகாக இருப்பதைப் பார்த்து இவள் தனது கணவன் பொன்னனுக்குத் துரோகம் செய்துவிட்டாள் என்று சமூகம் பேச வள்ளி துன்புறுவதாகக் கதை முடிகிறது. இக்கதையில் மனிதர்களிடம் நிறவேறுபாடு பார்க்கக்கூடாது என்பதும் நிறத்தை வைத்து மனிதனின் குணங்களை, மதிப்பை அளவிடுதல் கூடாது என்பதையும் வலியுறுத்துகிறார்.

பழைய வானத்தின் கீழ் என்ற சிறுகதையில் காதல் திருமணம் செய்து கொண்ட மகன், திரும்பி வீட்டிற்கு வருகையில் பொருளாதார ஏற்றத்தாழ்வினால் தாயின் பிணத்தைப் பார்க்கக்கூட அனுமதிக்காத அவனது சகோதரியின் மூலம் ஜாதி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மனிதனைப்படுத்தும் பாட்டை எடுத்துக்கூறுகிறார். பணம் இல்லாவிட்டால் உடன்பிறந்தவர்கள் கூட மதிக்கமாட்டார்கள் என்பதை உணர்த்துகிறார். இக்கதையில் மக்களிடையே உள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

அமைதியின் இறகுகள் என்ற கதையில் சூழ்நிலையால் விபச்சாரம் செய்யும் பெண் வளர்த்த மகனால் கொள்ளி வைக்கப்படுவதைத் தவறாகப் பேசும் ஊர் என பெண்ணின் வாழ்க்கையைச் சமுதாயம் தவறாகப் பார்க்கும் அவலம் பெருகியுள்ளதை விளக்குகிறார். சமுதாயத்தின் பார்வை ஒரு பெண் சிறு தவறு செய்தாலே காலம் முழுவதும் அவளைக் கீழ்த்தரமாக நடத்துவதையும் இக்கதை செப்புகிறது.

உணர்ச்சிக்கு அப்பால் என்ற சிறுகதையில் பெற்ற தகப்பன் சரியில்லையெனில் பிள்ளையையும் சமுதாயம் இழிவாக நடத்தும் அவலத்தையும் மகனின் நிலையிலிருந்து அவனது உணர்வுகளையும் சமூகத்தோடு பொருத்திப் பார்த்தும் எடுத்துரைக்கிறார். பெண் என்ற சிறுகதையில் சீலா என்ற பெண்ணின் பெற்றோர் பணத்திற்காக ஒரு எஜமானியிடம் விற்றுவிட்டுப் போகும் நிகழ்வை மையமாக வைத்தும் பண்டாவும் அவளது மனைவியும் குழந்தையைக் கேட்கும்போது சமுதாயத்தோடு பொருத்திப் பார்த்தும் பிரச்சினையை வகுத்துள்ளார். செம்பியன் செல்வன் அவர்கள் குங்குமப்பூ என்ற கதையில் வள்ளி என்ற கதாபாத்திரம் நிறபேதம் பார்த்து மயங்குவது இறுதியில் நிறத்தினால் மனிதன் உயர்வதில்லை என்று உணர்வது, இறுதியில் வெள்ளையாக ஆண்குழந்தை பிறக்கும் போது சமுதாயம் அவளைச் சந்தேகத்தோடு பார்ப்பது எனச் சமுதாயச் சாடல்களை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பொருத்திப் பார்த்து உரைக்கிறார்.

ஒரு எழுத்தாளன் என்பவன் சமுதாயத்தை உற்றுநோக்கி அதன் குறைகளைச் சீர்படுத்த முயலவேண்டும். அந்த வகையில் அமரர் செம்பியன் செல்வன் அவர்கள் அவர் காலச்சமுதாயச்சூழலை, பிரச்சினைகளைத் தனது கதைகளில் மிக ஆழமாக எடுத்தியம்பியுள்ளார் எனில் அது மிகையாகாது. மக்களிடையே நிறபேதம், பொருளாதார வேற்றுமை இருக்கக்கூடாது என்ற சமூகநீதியையும் பெண்கள் சமுதாயத்தில் படும் அவலங்களையும் தனது சிறுகதைகளில் நவில்கிறார். பெண்ணின் தாய்மை உணர்வு இவரது கதைகளில் மிகுதியும் வெளிப்பட்டுள்ளது. செம்பியன் செல்வன் அவர்கள் கனவுகாணும் சமுதாயம் என்பது நிறவேற்றுமை பார்க்காத பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இல்லாத பெண்களுக்கு அநீதி இழைக்காத சமுதாயமாக இச்சமுதாயம் மிளிரவேண்டும் என ஆசைப்படுகிறார். அதற்கான விதைகளைத் தனது சிறுகதைகளில் பதியமிட்டுள்ளார்.

❍

# சர்ப்பவியூகம்

அனல் பறக்கும் வயல் வெளியை உற்று நோக்கியவாறு அமர்ந்திருந்தான் திரவியம். வெறுமையின் தகிப்பில் வயல்வெளி பாலை என நீண்டு கிடந்தது. வெப்பத்தால் இலை கருகியும், புழுதிப் புயலில் அடிபட்ட பசுந்தளிர்கள் கூட மண் பூத்த செந்நிற மரங்கள் வரியமைத்து அடிவானின் விளிம்பாக காட்டெல்லை தெரிந்தது. வயலின் வரம்புகள் மனிதனின் காலடியே படாத கன்னி நிலமென, உடைந்தும், சிதறியும், கரணை கட்டிகளாயும், உருக்குலைந்து கிடக்க.... நெருஞ்சி, தொட்டாற்சிணுங்கி, கிடைச்சி எனப் பரவி, பூக்களாய்ச் சிரித்து முட்களாய்ச் சிலிர்த்திருந்தன. திரவியம் மேலே பார்த்தான்.



வானில் வெண்மேகங்கள் குடும்பம் குடும்பமாக உல்லாச பவனி வந்துகொண்டிருந்தன. உச்சிச் சூரியனின் வெப்பக் கதிர் குளத்தில் நீச்சலடித்துத் திரியும் மீன் குஞ்சுகளாக……

அவனின் எக்கி, ஒட்டிய அடி வயிற்றிலிருந்து ஏழுந்ததான நீண்ட பெருமூச்சு எழுந்து, வயிற்றில் சப்த ஜாலங்களை ஏற்படுத்திற்று.

அக்னி-

உள்ளும் புறமும்.

தூரத்தில் யாரோ கும்பலாகப் பாதை விலக்கி, முட்களுக்கு வழி பிரித்து வருவது தெரிந்தது.

'யாரது?'

பசியால் பூத்த கண்களை இடுக்கிக் கொண்டு, நெற்றி மேட்டில் கை வைத்துக் கொண்டு பார்த்தான். அவர்கள் நெருங்கிக் கொண்டிருந்தனர்.

வெள்ளை வேட்டியும், 'நஷனலு'மாக, இடையிடையே அவரது ஏதாவது விரலில் இருக்கும் மோதிரத்தில் ஒளி பட்டுத் தெறிக்க, வேலாயுதம் முன்னாக வேகமாக வந்து கொண்டிருந்தார். அவரின் பின்னாகவோ, அருகாகவோ கிராம சேவகரும் அவரின் உதவியாள் குறி சுடும் கம்பியையும், முத்திரை இரும்பையும் கொண்டு வர, அவர்களின் பின்னால் சில அடி தூரத்தில் ரகுராமனும், இஸ்மாயிலும் வந்துகொண்ருந்தனர்.

'என்ன திரவியம்…. எப்படி இருக்கு உங்க பாடெல்லாம்?' என்று கேட்டவாறு வந்தார் வேலாயுதம்.

அவன் இடுப்பால் நழுவும் சாரத்தைத் தூக்கி அவசரமாகச் செருகினாற் போல கட்டியவாறு எழுந்தான்.

'என்னத்தைச் சொல்லுகிறது….. உங்களுக்குத் தெரியாததா? பாத்துக் கொண்டுதானே இருக்கிறியள்…. வானம் பாத்த பூமி, குளம், அரசாங்கம் என்னத்த செய்தென்ன…… மழையெல்ல பெய்யோணும். மூண்டாம் வருஷமா வானம் முகடு துறக்கேல்ல. குளமெல்லாம் வத்திப் போச்சு. குடிநீருக்கே அருந்தலாக இருக்கு. குளம் சேறாகி கொதிச்சுக் கிடக்கு. சீலையைப் போட்டு பிழிஞ்சு தண்ணி எடுக்கிறம். மீன் எல்லாம் செத்து மிதக்குது. இந்த நிலையில் எப்படி வேளாண்மை செய்யிறது. பயறு, உளுந்தெண்டாலும் போடலாமெண்டு பாத்தா….. அதுக்கும் கூட பன்னீர் தெளிச்ச மாதிரியெண்டாலும் மழை வேணுமே. இப்ப ஒண்டுக்கும் வழியில்லாமத் தவிக்கிறம். வெள்ளாமையை நம்பியிருக்கிறவர் பாடெல்லாம் நரகம் தான்'.

வேலாயுதம் சிரித்தார்.

'உப்புடிச் சொல்லாத திரவியம். வெள்ளாமையை விட்டுடொரு தொழிலே…….'

'உப்புடிச் சொல்லிச் சொல்லித் தான் கமக்காரன் ஏமாந்து போய் வயித்துக்குக் கூட வழியில்லாமக் காய்கிறான். எல்லாருக்கும் உணவளிக்கிறவன் எண்டு பேர். இங்க அவன்ர வயிறு கருகிறதை ஆர் கண்டினம்? எல்லாத்துக்கும் மழைத்தண்ணி வேண்டும். கொதிக்கிற வயித்தில ஈரத் துணி போடக் கூட தண்ணிக்கு வழியில்ல……'

இப்போது வேலாயுதத்துக்குச் சிரிப்பு வரவில்லை.

'சரி சரி உன்னோட நிண்டு கதைக்கிறதெண்டாக் கனக்கக் கதைக்கலாம். எனக்கு இப்ப நேரமில்ல. கொஞ்சம் வேலை கிடக்கு. விதானையாரையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறன். அப்ப வரட்டே' என்றவாறு, அவன் வளவுக்கு அடுத்திருந்த தனது மாட்டுப் பட்டிக்குள் நுழைந்தார்.

திரவியத்தின் கமத்திற்கு ஒதுக்குப் புறமாக, முட்பற்றைகளிடையே ஒற்றையடிப் பாதை அமைத்திருந்தார். யாரும் பொதுப்படையாக நோக்கினால் முட்பற்றை தான் தென்படுமேயன்றி அவற்றிடையே ஒரு மாட்டுப் பட்டி அமைந்திருக்கும் எனக் கற்பனை கூடச் செய்து பார்க்க மாட்டார்கள்.

வேலாயுதத்தார் ஒரு பெரிய மாட்டு வியாபாரி. ஊருக்குள் உள்ள மாடுகளை, எருமைகளை விலைக்கு வாங்கியும் – விலைக்கு வாங்காமல் கள்ள மாடு, எருமைகள் பிடித்தும் – கொழும்பு போன்ற நகரங்களுக்கு டீ.ஆர்.ஓ.வின் அனுமதியுடன், அனுமதிப்பில்லாமலும் அனுப்பி வருவார். அவர் வெளிப்படையாக மாடுகள் ஏற்றுமதி செய்து வருவதால் அவருக்குக் கொஞ்சக் காலம் தொடக்கமாக 'மாட்டுக் கார வேலன்' என்ற புதுப் பெயரை ஊரிலுள்ள வாலிபர்கள் சூட்டப் போக, அது சிறுவர் வயோதிபர் வரை வியாபித்து கிராமம் முழுவதும் அவருடைய பெயராகப் பரவி விட்டது.

ஆரம்ப காலங்களில் அவர் ஊரவர்களுடைய மாடுகளைக் கள்ளமாகவே பிடித்து ஏற்றுமதி செய்து வந்ததைக் கண்டு, டி.ஆர்.ஓவிற்கும் கவுண்மேந்து ஏஜெண்டிற்கும் அனுப்பப் பட்ட புகார்களும், பெட்டிசங்களும் அவர் பணம் பெருகப் பெருக வலிகுன்றி, மங்கி மடிந்து எலியரித்தும் இராமபாணம் துளைத்தும் போயின. ஆரம்பத்தில் அவரை எதிர்த்த ஊர்மக்களும் பணத்தின் சீற்றத்துக்கு அஞ்சி அஞ்சி ஒடுங்க வேலாயுதத்தாரின் கள்ள மாட்டு வேட்டைகளை அதிகரிக்கச் செய்திருந்தது. அவர் கள்ள மாடு ஏற்றுகிறார் என்று ஊர் மக்களுக்குத் தெரிந்தாலும், எப்படி, ஆர் மூலம் பிடித்து எப்படி அனுப்புகிறார் என்பதை அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

இன்று அவர் ஊரில் பெரிய மனுஷர், அவருக்கு எந்த வீட்டில், எவனிடம் எத்தனை மாடுகள் நிக்குது? எங்க கட்டியிருக்கு? அவனுக்கு எப்ப பணமுடை ஏற்படும் என்பதெல்லாம் அவருக்குப் பஞ்சாங்க பாடம். 'ஓ... ஓ.... செல்லன்ர பெஞ்சாதியப் பாத்தா இப்ப எட்டு மாசம் போலகிடக்கு...... ஆளுக்கு ஒரு பெரும் செலவு காத்திருக்கு.... இப்ப வெள்ளாமையுமில்லை..... செல்லன் பிள்ளைப் பெறுவுக்கு என்ன செய்வான்? தன்ர நெற்றிச் சுட்டியனை வித்தாத் தான் புள்ளத்தாச்சிக்குச் சரக்கரைச்சுக் கொடுக்க முடியும். எப்படியும் ரெண்டு மூண்டுக்க அமத்திப் போடோணும். கிடைச்சா அந்த மாட்டிலேயே எல்லாம் போக எனக்கும் ரெண்டு மூண்டு கிடைக்கும்.' இப்படித்தான் அவருக்கு எந்தவொரு மாட்டைப் பார்த்தாலும் சிந்தனை ஓடும்.

அவனவனிடம் அந்தக் காலங்களில் நட்சத்திர நேரகாலம் போல, குரு மாறுகிற வீட்டைப் போல, போய் நிற்பார். போகும் போது மாட்டு வியாபாரத்துக்குப் போவது போலவும் போகமாட்டார். 'வேறை அலுவலாக அந்தப் பக்கம் வந்தது போலவும், அவனையும் வந்த கையோட பாத்துட்டுப் போவம்' என்று வந்ததாகவும் சுகம் விசாரித்து நிற்பார். இதுவரை காலமும் அவரைக் கண்ணால் கண்டாலே எரிச்சலுடனும் கோபத்துடனும் நோக்கிக் கொண்டிருந்த கமக்காரனுக்கு – அவர் வந்த வேளையில் கண் கண்ட தெய்வமாகத் தோற்றமளித்தார். பிறகென்ன?

தெய்வத்திடம் பக்தன் பேரமா பேசுவான்?

தெய்வம் தீர்த்தது தான் விலை.

பணத்தேவை முடிந்ததும் தான் பக்தன், கற்பூரச் செலவைப் பற்றி எண்ணிப் பார்ப்பான். பதறிப் போவான். பதறி என்ன செய்வது. வேலாயுதத்தார் அவனால் வந்த வரவை எண்ணிக் கால்மேல் கால்போட்டு அமர்ந்திருப்பார்.

தொழிலின் நெளிவு சுழிவுகளை நன்குணர்ந்து தொழில் நடத்திச் செல்வதில், வேலாயுதத்தார் வெகு சாமர்த்தியசாலி. டி.ஆர்.ஓ கொடுக்கும் 'பெமிட்'டுக்கு பன்னிரண்டு மாடுகளை லொறிகளில் அனுப்புவார். அவருக்கு மாதம் ஒரு 'பெமிட்டுத்தான். ஆனால், கொழும்பு மாநகர் தேவைக்கு இந்தப் பன்னிரண்டு மாடுகளோ எருமைகளோ எந்த மூலைக்கு. இதை எண்ணியதும் இவருக்கு கொழும்பு மக்கள் மேல் ஏற்படும் பரிதாபவுணர்ச்சி கருணை வெள்ளத்தைக் கரைபுரண்டோடச் செய்துவிடும். உடனே எப்படியோ இன்னுமொரு ஐம்பது எருமைகளையோ, மாடுகளையோ தேடி அதிகாரிகளுக்குத் தெரியாமல் காடுகளிடையேயும் குளங்களிடையேயும் அவற்றை நடத்தியே கொழும்புக்குக் கொண்டு போய்ச் சேர்க்கச் செய்துவிடுவார். இரண்டு நாட்களில் அத்தனை மாடுகளும் கொழும்பில் நிற்கும் அல்லது இறைச்சிக் கடையில் தொங்கும். சில சமயங்களில் கொழும்புக்கு அனுப்பி வைக்கும் உருப்படிகளில் நாலைந்தோ, இரண்டு மூன்றோ கூடுவதுமுண்டு. இறைச்சிக்காக 'அடிபட' (ஓ!அறுபட) அனுப்பப் படும் மாடுகளிலோ, எருமைகளிலோ சிலதுகள் சினைப் பட்டவையாக இருக்கும், வழியில் புல்லும் தண்ணீரும் கண்ட இடத்தில் அவை ஈன்று விட்டால் அவற்றை விட்டுவிட்டா செல்வது? அனுப்பும் போது அவற்றையும் மனக் கணக்கிட்டுத் தான் அனுப்பி வைப்பார். அவற்றை மாடோட்டிகள் தூக்கி அணைத்துக் கொண்டு செல்வர். இதற்கெல்லாம் வேலாயுதத்தாரின் கருணையுள்ளம் தான் காரணம் என்பார்கள். உண்மைதான். இல்லாவிட்டால் கொழும்புக்காரருக்கு இதமான, மென்மையான 'ஆட்டிறைச்சி' எப்படிக் கிடைக்கும்.

கால் நடைகளை நடத்திச் செல்லும் 'மாடோட்டி'கள் மீதும் இவரின் கருணை வெள்ளம் வற்றாத நதியாக கரை புரண்டு ஓடுவதும் நித்திய உண்மை.

கடத்திச் செல்லும் எருமை, மாடுகளை வழியில் கிராமசேவகரோ, டி.ஆர்.ஓவோ மடக்கி விட்டால் பணத்தால் சமாளிக்கப் பாப்பார். இல்லாவிட்டால் தான் என்ன?

மாடோட்டிகள் பதினான்கு நாள் ரிமாண்ட் சிறையிருப்பர். மாடுகளும் டி.ஆர்.ஓவின் மேற் பார்வையில் நாளொன்றுக்கு நான்கு ரூபா செலவில் பராமரிக்கப் படும். பதினான்காம் நாள் மாடுகளும், மாடோட்டிகளும் பிணையிலோ குற்றம் கட்டிவிட்டோ வெளியே சுதந்திரப் பறவைகளாக வருவர். இவ்வளவுக்கும் வேலாயுதத்தாரின் பெயர் வெளியே தெரிய வராது. ரிமாண்டால் வெளியே வருபவர்கள் ஓய்வுகூட எடுக்க மாட்டார்கள். எதற்காக ஓய்வு? பதினான்கு நாட்கள் போதாதா, அன்றிரவே மாடுகள் விட்ட பயணத்தைத் தொடங்கிவிடும். அவர்களும் உற்சாகமாக ஓட்டிச் செல்வர். அவர்களுக்கு ஒரு உருப்படிகளைப் பத்திரமாகக் கொழும்புக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டால் ஒன்றிற்குப் பத்து ரூபா என்ற வீதம் கிடைக்கும். வழிச் செலவு வேறு. கொழும்புச் செலவினை இறைச்சிக் கடைக்காரர் பார்த்துக் கொள்வார். மூன்றாம் நாள் லொறி மூலமோ, ரயில் மூலமோ கொழும்பால் திரும்பி வருவார்கள்.

தற்போது கமம், சேனை எல்லாம் வறண்டு கிடப்பதால் இந்த வேலைக்கு ஏக மதிப்பு. ஆனாலும் அவர் எல்லாரையும் இந்த வேலைக்குச் சேர்த்துவிட மாட்டார். நம்பிக்கை, நாணயம், தொழில் வல்லமை பார்ப்பார்.

திரவியத்தை அடிக்கடி நோட்டம் விட்டுப் பார்க்கிறார். அவன் அசைந்து கொடுப்பதாக இல்லை. மனைவி பிள்ளைகளை விட்டிட்டுப் போய்ச் சிறையில்

இருக்க நேர்ந்தால்......

நினைக்கவே அவன் மேனி நடுங்கும்.

மாடுகளின் கதறல் கேட்டது.

'குறி சுடுகிறார்கள்... அது தான் மாடுகள் கத்துது' திரவியம் காதைப் பொத்திக் கொண்டான்.

'போயும் போயும் என்ர அருமை மாடுகளான 'வெள்ளைப் பூச்சியனையும் நெற்றிச் சுட்டியனையும், கறுத்த வாலனையும் இவனுக்கு வித்தனே? நான் என்ன செய்யிறது. அறாவிலைக்கு வித்து என்ன சுகத்தைக் கண்டன். அதுகள் இரண்டும் இப்போது இல்ல. அதால வந்த பணமும் இல்ல. வானம் பொய்ச்சு, வீடு, வளவு எல்லாத்தையுமே, துடைச்சுக் கொண்டிருக்குது நினைவும் வெறுமை பூத்து நெருஞ்சியெனச் சிரித்துக் குத்தியது.

'என்ர குழந்தையள் போலையல்லவா வளத்தன். அதுகளும் என்ர குரலைக் கேட்டாப் போதும். சொன்னபடி கேக்கும். அதுகளை நம்பித்தானே இந்த மூண்டேக்கர் நிலத்தை வைச்சிருந்தன். இனி மழை பெய்தாலும் எப்படி உழவு செய்யப் போறனோ?.......' அவன் இரு கரங்களாலும் தலையைப் பிடித்துக் கொண்டான்.

உச்சி வெய்யிலில் உலகு இருண்டு வந்ததென அவன் கண்களுக்குப் பட்டது.

உச்சி வெய்யில் மண்டையைப் பிளக்க, வரம்பு வழியே விநாசித்தம்பி ஓடிவந்தான். அவன் முகம் வெய்யிலில் கறுத்து வியர்வையில் மெருகிட்டிருந்தது.

'இந்த வெய்யிலுக்கை இவன் எங்கையெல்லாம் போய் அலைஞ்சிட்டு வாறான். நாளைக்குக் காய்ச்சல் எண்டு கிடந்தா அவனை ஆர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு காவுறது. ஆசுப்பத்திரியிலும் மருந்தே கிடக்கு. காசு கொடுக்கிறவைக்குத் தான் அப்போதிக்கரி டொக்குத்தரும் ஊசி போடுகிறார்' அவனுக்கு எரிச்சல் மண்டியது.

'டேய்...... எங்கையெல்லாம் போய்ச் சுத்திட்டு வாறாய். இங்க வாடா!' திரவியம் சத்தம் போட்டான்.

விநாசி குடிசைக் கப்புப் பக்கமாக ஒதுங்கினான். திரவியத்துக்கு அவன் நின்ற கோலம் ஆத்திரத்தை மூட்டியது.

'என்னடா பதுங்கிற....... வாய்க்கயென்ன கொழுக்கட்டையா? நான் கேக்கிறன் எண்ட மரியாதை கூட இல்லாமல்...... படவா.......ராஸ்கல்......!

'அப்பா.... வந்தப்பா..... அவன் தயங்கினான்.

'என்னடா? சொல்லிறதைச் சொல்லித் தொலையன்'

'நானும் தம்பிராசாவின்ர மகன் காங்கேசனும் கீரைக் கொட்டை தேடிக் காட்டுக்க போனம்.'

'சனியனே..... தனிய உந்தக் காடுவழியே போகாத எண்டு எத்தனை தரம் உனக்குச் சொன்னனான். எடி... இஞ்சாய்..... உள்ள இருக்கிற துவரம் கம்பைக் கொண்டு வா..... தங்கம் வெளியே எட்டிப் பார்த்தாள்.

'என்ன செய்யப் போறியள் அவனை? வீட்டில அதுகளுக்குத் திறுத்தியாப் போட்டா ஏன் அதுகள் காடு மேடெல்லாம் போய் அலையுதுகள்'.

தண்டிக்கப் போன திரவியம், தானே தண்டிக்கப் பட்டவனாகத் தயங்கினான். என்றாலும் மகனின் முன் தன் தோல்வியைக் காட்டினால் நாளைக்கு அவன் மதிக்க மாட்டானே என்ற எண்ணம் மனதில் எழவும் 'காட்டுக்க போய் என்ன செய்தனியள்' என்றான்.

விநாசித்தம்பிக்கு முகம் மலர்ந்தது. 'அப்பா.... அங்க காட்டுக்க ஒரு குளம். கனக்கத் தண்ணியோட இருக்கப்பா.... அங்க கனக்க அல்லிக்காய் எல்லாம் காய்ச்சு வெடிச்சு.... நாங்க ரெண்டு பேரும் நிறைய புடுங்கிக் கொண்டு வந்தமப்பா'

– அப்போது தான் மகனின் சறத்தைக் கவனித்தான் திரவியம். 'சண்டிக்கட்டு' கட்டியிருந்தான். அந்தச் சண்டிக் கட்டு நிறைய அல்லிக்காய் இருப்பது தெரிந்தது.

'இந்தக் காலத்தில் குளமாம், தண்ணியாம் என்ன ஏதும் கனவு கண்டியா?' என்று விசாரணை நடத்திக் கொண்டிருக்கையில் அடுத்த கமம் தம்பிராசா தன் மகன் காங்கேசனை இழுத்துக் கொண்டு வந்தான்.

'திரவியம் கேட்டியே சங்கதியை! பெடியள் எதையோ கண்டுபோட்டு உளர்றாங்களோ'.

'வா தம்பிராசாண்ணை, அதத் தான் நானும் விசாரிச்சுக் கொண்டிருக்கிறன், நீயும் வாறாய். அப்ப என்ன செய்வம்'.

'வாவன்... இதுகளோட போய் நாங்களும் அதப் பாத்திட்டுவருவம். இங்கேயும் என்ன வேல வெட்டியே வீணாப் போகுது'.

'சரி நடவுங்கடா நாங்களும் போய்ப் பாப்பம்'.

சிறுவர் இருவரும் உற்சாகமாக வழி காட்டிச் சென்றனர்.

வழக்கமாகச் செல்லும் பாதையிலிருந்து, ஒற்றையடிப் பாதை கூட இல்லாமல் ஏதோ விலங்குகள் பற்றைகள் புதர்களை விலக்கிச் சென்றதால் ஏற்பட்ட குகை போன்ற பாதை வழியே இருவரையும் அழைத்துச் சென்றார்கள். வழியில் யானை 'இலத்தி'கள் காணப்

பட்டன. திரவியம் தயங்கினான். தம்பிராசா சென்று அதன்மேல் தன் உள்ளங் காலை மெதுவாக வைத்தான். சிரித்துக் கொண்டே அந்த இலத்தியை உழக்கிக் கொண்டு வந்தான். இலத்தி பொடிப் பொடியாக உதிர்ந்தது.

'மச்சான் அது எப்பவோ போட்ட இலத்தி, சூடாளறிப் போய்.......' – விளக்கம் சொல்லிக் கொண்டு நடந்தான்.

விர்ரென்று தேனீ இலையான் ஒன்று திரவியத்தின் முகத்தின் முன்னால் வட்டமிட்டு ரீங்கரித்தது.

'அட, சை.....!' திரவியம் முகத்திற்கு முன்னால் கைகளை ஆட்டினான். தேனீ எழும்பிப் பறந்து சென்றது. தம்பிராசா திடீரெனப் பரபரப்புக் கொண்டான்.

'மச்சான், நீ விசர்வேலை பாத்துக் கொண்டாய். அது தேனீயடா. இப்ப பார் காட்டு மரமெல்லாம் பூத்துக் கிடக்கு. இப்பதான் தேனீ எடுக்கிற காலம். உந்தத் தேனீ போற இடத்தில் நிச்சயம் தேன் இருக்கும். வா..... வா.... பொடியங்கள் போற பாதையில் தான் அதுவும் பறக்குது. வா..... அது எந்த மரத்தைப் போய் அடையுது எண்டு பாப்பம்.'

சிறுவர்களுடன், பெரியவர்களுக்கும் இந்த வன வேட்டை உற்சாகமான பொழுது போக்காக அமைந்தது.

தேனீ மெல்லிய நெட்டையான பாலை மரத்தின் சுவரில் இறங்கியது. தம்பிராசா அதனைக் கூர்ந்து கவனித்தான்.

'மச்சான்..... இந்த மரத்தில் நிச்சயம் தேனிருக்கும்' என்றான். 'எப்படி?' என்பது போல் திரவியம் அவனைப் பார்த்தான்.

தம்பிராசா மரத்தினடியில் போய் சுற்று முற்றும் பார்த்தான். குனிந்து ஒரு 'ஆமான' கல்லை எடுத்தான். பாலை மரத்தின் அடியில் 'டொக் டொக்' எனச் சப்தமிடப் பெரிதாகத் தட்டினான். தட்டிய இடத்தில் காதைக் கொஞ்ச நேரம் வைத்து அமைதியாகக் கேட்டான். அவன் உதட்டில் புன்னகை மிளிர்ந்தது. சிறுவர்கள் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். அவன் கண்ணசைவால் திரவியத்தைக் கூப்பிட்டு, தன்னைப் போல் காதை வைத்துக் கேட்கும் படி கூறினான். திரவியம் காதை வைத்தான். முதலில் ஒன்றும் புரியவில்லை. சில விநாடிகளின் பின் மெல்லிதாக ஈக்கள் இரையும் சப்தம் கேட்டது. அவன் மரத்தை விட்டு நீங்கியதும் சிறுவர்கள் ஓடிச் சென்று காதை வைத்து உற்றுக் கேட்கலாயினர்.

தம்பிராசா அந்த மரத்திற்கு அடியில் சில கற்களைக் குவித்து அடையாளமிட்டான். 'மச்சான் திரும்பி வரேக்க எந்த மரம் எண்டு அடையாளம் காணத் தான்' என்றான்.

'சரி சரி கேட்டது போதும். நீங்க போய்ப் பாத்த இடத்தைக் காட்டுங்க' என்று திரவியம் அதட்டினான். சிறுவர்கள் உற்சாகம் கொண்டவர்களாக பற்றைப் புதர்களை விலக்கிக் கொண்டு நடந்தவர்கள், திடீரென ஓரிடத்தில் நின்றார்கள். அந்த இடத்தைக் கண்ணுற்ற இருவரின் விழிகளும் ஆச்சரியத்தால் விரிந்து மலர்ந்த ன.

இளம் காடுகளால் சூழப் பட்டு, கன்னி கழியாத குமரிப் பெண் போல மரநிழலின் குளுமையில், அந்தக் குளம் அமைதி கண்டிருந்தது. ஒரு காலத்தில் யாரோ தனிப்பட்டவர்களால் பராமரிக்கப் பட்டு வந்து கைவிடப்பட்ட குளம் எனத் தெரிந்தது. மண் கலிங்கு, மடை அனைத்தும் ஆங்காங்கு, சிதைந்து உடைவுற்ற மண்பாண்டம் போல விளங்கியது. அவர்கள் நின்ற இடத்தில் அகலமாகப் பரந்து காணப்பட்ட குளம் அவர்கள் பார்வையில் முன்னாகச் சற்றுக் குறுகிச் சென்று, மீண்டும் கிழக்காகத் திரும்பிப் பரந்திருந்தது. அவர்கள் நின்றிருந்த பக்கமே குளத்தின் ஆழமான பகுதியாக இருக்க வேண்டும். வடக்கேயும், கிழக்கேயும் குளத்து நீர் வற்றிப் புல் நிலமாக பரந்திருந்தது.

சிறுவர்கள் கோரைக் கிழங்குகளுக்காக ஓடினர்.

தண்ணீரைக் கண்டதும் திரவியத்தால் கம்மா இருக்க முடியவில்லை. 'மச்சான் வடிவா ஒரு போகம் செய்யத் தண்ணி காணும்' என்றான்.

'எங்க செய்யிறது? எப்படிச் செய்யிறது?' என்றான் தம்பிராசா.

'மச்சான் குளத்தின் வடக்குப் பகுதியை உழுது பதப் படுத்தி இந்தத் தண்ணியை வாய்க்காலால பாய்ச்சினமெண்டால்'.

'குளத்திலேயே பயிர் செய்யப் போறியா?'

'இதொண்டும் அதிசயமில்ல. உப்புடிக் கன இடத்தில் செய்யிறதுதான். ஆனா இந்த விசயம் ஒருத்தருக்கும் தெரியக் கூடாது. தெரிஞ்சாப் போச்சு'.

'அது சரி.... உழுகிறதுக்கு என்ன செய்யிறது. கலப்பையை நீயும் நானுமா இழுக்கிறது. மாட்டைத்தான் வித்துச் சாப்பிட்டுட்டம்.'

திரவியத்துக்கு அப்போது தான் மாடுகள் பற்றிய பிரச்சனை உறைத்தது. பரிதாபமாக தம்பிராசாவைப் பார்த்தான். தம்பிராசா தலையைத் தடவி விட்டுக் கொண்டான். திடீரென குளத்தின் வடபகுதியிலே ஹீங்கார முக்கார முழக்கம் கேட்டது. சிறுவர்கள் ஓடிவந்தார்கள். எல்லாரும் மரத்தின் பின்னால் போய் ஒளிந்து கொண்டார்கள்.

நான்கைந்து காட்டெருமைகள், குளுமாடுகள் குளத்தை நோக்கி ஓடி வந்தன.

தம்பிராசாவின் முகம் மலர்ந்தது.

'மச்சான் நீ ஒண்டுக்கும் பயப்படாத. பொடியங்களோட இங்க வந்ததும் ஒரு நன்மைக்குத்தான். எங்கோ அடிக்காட்டுக்க கிடக்கிற குளுமாடுகள் தண்ணித் தாகத்தில் இந்தக் குளத்துக்கு வந்து போகுதுகள். இதுகளில் ஒண்டு ரெண்டை மட்டும் பிடிச்சிட்டா.....' என்றவாறு திரவியத்தைப் பார்த்தான்.

'அது முடியிற காரியமா..... இந்தக் குளுமாடுகளைப் பிடிக்கிறதெண்டா. மாடுகளைப் பிடிக்கிறமோ அதுகள் எங்கட உயிரைக் குடிக்கிறதோ தெரியாது' என்று கவலையோடு பார்த்தான் திரவியம்.

'மச்சான் எனக்கும் உதில கொஞ்சம் பழக்கமுண்டு. ஊருக்குள்ள இருக்கிற எருமைகளில் முக்கால் வாசி இப்படிக் காட்டுக்க புடிச்சு வந்ததுதான். அதுக்கு ஒரு பழகின எருமையிருந்தாப் போதும். அதின்ர குரலையும் அதனையும் காட்டியே மற்றக் குளுமாடுகளை வளைச்சப் பிடிச்சிடலாம். ஆனா, எங்களுக்கு அதுக்கும் வழியில்ல. நாங்களே எப்படியும் பிடிச்சுப் பாப்பம். வா வீட்ட போவம். எல்லா ஆயத்தத்தோடும், கயிறு, கோடாலி எல்லாத்தோடும் வருவம்..'

திரும்பும் போது அவர்கள் நடையில் வேகம் கண்டிருந்தது.

❍ ❍ ❍

அடுத்த நாள் புலரிப்பொழுதிலேயே தம்பிராசாவும், திரவியமும் காட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தனர். தம்பிராசாவின் தோளிலே தேடாக் கயிற்று வளையங்கள் – சுமையாக அழுத்த கைக் கோடாரியுடன் முன்னே நடக்க, திரவியம் இரண்டு கரைக் குடுவையுடனும், ஒரு சாக்கு மூட்டையுடனும் பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

முதனாள் அடையாளமிட்ட பாலை மரத்தை அண்மியதும் தம்பிராசாவின் நடை தடைப் பட்டது. தேடாக் கயிறுகளை கீழிறக்கினான்.

'நெருப்புப் பெட்டியும், கொஞ்சம் கந்தல் துணியும் தா!' திரவியம் தனது மூட்டையை அவிழ்த்து எடுத்துக் கொடுத்தான். தம்பிராசா இரண்டையும் எடுத்து மடியில் கட்டிக் கொண்டு, கோடாரியை வலப் பக்க இடுப்பில் செருகிக் கொண்டு பாலையில் விறுவிறு வென்று ஏறிக் கவரை அடைந்தான்.

தேன் பொந்திற்கு ஒரு சாண் கீழாக, கைக் கோடாரியால் பதமாக வெட்டி ஓட்டை தயாரித்தான். கோறை பாய்ந்த மரமாதலால் அது சுலபமாக இருந்தது. அந்தக் கோறைக்குள் துணியைத் திணித்து நெருப்பு மூட்டினான். புகை எழும்பத் தொடங்க வேகமாகக் கீழிறங்கினான்.

பாலைக் கவரிலிருந்து தேனீக் கூட்டம் கரும்புகையென வெளிக் கிளம்பிப் பறந்தன. சிறிது விநாடியின் பின் தேனீக்கள் முற்றாகக் கலைந்து விட்டன, என்றதன் பின் மீண்டும் தம்பிராசா ஏறிப் பொந்திற்குள் கைவிட்டான்.

தேன்வதை கையோடு வந்தது. எவ்வித சேதாரமுமில்லாமல். அவன் தேன் எடுத்து வந்த லாவகம் திரவியத்தை மெய்சிலிர்க்க வைத்தது. இரு வருமாக சுரைக் குடுவையில் தேனைச் சேகரித்துக் கொண்டு குளத்தை அண்மிய போது பொழுது உச்சிக்கு வந்திருந்தது.

'மச்சான் நல்ல நேரத்தில் தான் வந்து சேந்திருக்கிறம். இனித்தான் குளுவான்கள் வெப்பம் தாங்காமல் தண்ணி குடிக்க இங்க வரும்.'

அவர்கள் தங்களின் சுமைகளைக் குளக்கரையோரமாக, கூந்தல் வேர்ப் பரப்பியும், சயனித்தும், பரந்து கிடந்த மருதமரத்தடியில் இறக்கினார்கள். சுற்று வெளி எங்கும் வெறுமை பூத்துக் கிடந்தது. நேரம் சென்று கொண்டிருந்தது. திடீரெனத் தூரத்தில் புயல் கிளம்புவதைப் போல் புழுதி எழ, குளுமாடுகள் கூட்டம் விரைந்து வந்து கொண்டிருந்தது.

தம்பிராசா பரபரத்தான்.

'மச்சான், அதுகள் கூட்டமாக வரேக்க பிடிக்கிறது கஷ்டம். இப்ப எங்களைக் கண்டாலும் எங்களுக்குத்தான் ஆபத்து. கவனமாக மரத்துக்குப் பின்னால மறைஞ்சு கொள்.'

குளுமாடுகள் வந்தன. புல்லை அசைபோட்டன. தண்ணீரிலே அழுந்தி எழுந்து சேற்றில் புரண்டு......

அவர்கள் பொறுமையுடன் காத்திருந்தார்கள்.

சூரியன் காட்டு மரங்களைத் தடவித் தடவிச் சென்று சரிந்து கொண்டிருந்தான். குளுமாடுகள் ஒவ்வொன்றாகக் குளத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தன. ஆனால் அந்த ஒற்றை எருமை மட்டும் எதனையும் கவனியாமல் குளத்தைச் சேறாக்கித் தனிமையில் இனிமை கண்டு கொண்டிருந்தது. அது குளத்தை விட்டு வெளியேறுகையில் எல்லா எருமைகளும் காட்டிடையே மறைந்து விட்டன. ஒன்றையொன்று நோக்கி, பிறையாக வளர்ந்த கொம்புகளுடன் அது சிலிர்த்து எழுந்து வெளியேறிய போது, அதன் தாடை, கால்களில் வலிவு தெரிந்தது. தம்பிராசாவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

'மச்சான் உருப்படி ஆமானதுதான். கிடைச்சால்' என்று கிசு கிசுத்தபடி மரத்தை விட்டு வெளியே

வந்தான். மாடு என்ன எதுவென்று அறிய முன் தேடாக்கயிறு வானத்தில் வட்டமிட்டு எழுந்தது. அதன் கழுத்தில் போய் விழுந்தது. அதே வேளையில் அவன் புல் தரையில் உருண்டு கொண்டிருந்தான். அவன் கயிற்றை விடவில்லை. திரவியம் பின்னால் ஓடிச் என்று கயிற்றைப் பற்றினான். இருவர் பிடியிலும் மாடு திணறியது. கயிற்றை அப்படியே கொண்டு சென்று ஒரு மரத்தில் சுற்றி விட்டு, அதன் முனையைத் திரவியம் பிடித்திருக்க, தம்பிராசா இன்னொரு தேடாவளையத்தை எடுத்து வந்து அதனை நோக்கி ஓடினான். மாடு ஹீங்காரத் தொனியுடன் மண்ணைக் காலாலும், கொம்பாலும் கிளறிக் கொண்டிருந்தது. அந்த அமானுஷ்யப் பிரதேசமே அந்த ருத்ர போராட்டத்தால் அதிர்ந்தது. தம்பிராசா மாட்டிற்குப் பாய்ச்சல் காட்டிக் கொண்டே, நான்கு கால்களையும் எப்படியோ கயிற்றால் பிணைத்து விட்டான்.

எப்படியோ ஒரு மரத்தினடியில் அதனைக் கட்டிப் போட்ட போது அவர்கள் உடலே இற்று விட்டது போலிருந்தது. ஆனால் உள்ளத்திலிருந்த மகிழ்ச்சி முகத்தில் மலர்ச்சி காட்டியது.

பசி வயிற்றைக் காந்தியது.

'சாப்பிடுவமா?' — இருவரும் குளக்கரையில் அமர்ந்து உணவுப் பொட்டலத் துணியைப் பிரித்தார்கள்.

வட்டமான, தோசைக் கல் அளவில், குண்டாளமான இரண்டு குரக்கன் ரொட்டிகள். அதுதான் கிராமத்தவர்கள் காட்டிற்கோ, வேட்டைக்கோ செல்லும் போது கொண்டு போகும் உணவு. குரக்கன் அடை என்பார்கள். அதனைத் தின்று தண்ணீரும் குடித்தால் போதும். காட்டுப் பகுதியின் வெம்மை இதனால் அடங்கும்.

'மச்சான்..... இண்டைக்கு நாங்கள் இதைப் பிடிச்சது பெரிய வேலையில்ல. ஏன் தெரியுமே, மாடுகள் வழக்கம் போல சுதந்திரமாக வரும் ஆபத்தை உணரால் நடமாடியதால் பிடிச்சிட்டம். ஆனா.... போன குறுவான்கள் தங்கட ஆள் ஒண்டு குறையுது எண்டு நிச்சயம் திரும்பும். அப்ப இன்னொண்டைப் பிடிப்பதில் தான் இருக்கு விசயம்.'

'எப்ப வரும்?'

'இரவு வரலாம், விடிஞ்சாப் புறகும் வரலாம். அதோட கட்டிப் போட்டிருக்கிற குளுவான்ர சத்தமும் அதுகளைக் கூட்டிவிடும்.'

'அப்ப என்ன செய்யிறது?'

'இரவு இங்க ஒரு சிறாம்பி கட்டி அதில தங்க வேண்டியது தான். கெதியனச் சாப்பிடு, வசதியா ஒரு சிறாம்பி கட்ட வேணும்.'

-அவசரமாக உணவை முடித்துக் கொண்டு எழுந்தனர்.

வாகான இரண்டு மரங்களிடையே தங்களின் 'சிறாம்பி' எனும் பரணை அமைத்து முடித்த போது இருட்டி விட்டது.

கட்டிப் போட்ட குளுமாட்டிற்குப் புற்களை அரிந்துகொண்டு வந்து போட்டார்கள். தங்கள் சிறாம்பியின் நேர் கீழாக காட்டு மரங்களை அடுக்கி நெருப்பு மூட்டினார்கள்.

இருவரும் சிறாம்பியில் ஏறிப் படுத்துக் கொண்டார்கள்.

இரவு முழுவதும் எருமையின் சிறுநீரின் 'கார்' சப்தமும் அது நடமாடுவதால் எழும் ஓசையும் இடைவிடாது கேட்டுக் கொண்டிருக்க இருவரும் அறிதுயிலிலாழ்ந்து கொண்டிருந்தனர்.

நடு நிசியின் போது பலத்த சப்தம் – பற்றைகள் முறிவடைவதைப் போல் ஒலி எழவும் விழித்தெழுந்தார்கள். திரவியம் பயத்தால் உறைந்து போனான்.

'ச் எங்க?'

குளுமாட்டின் பக்கமாக பலத்த சச்சரவு கேட்டது.

டோச்சின் ஒளி வெள்ளத்தில் பன்றிக் கூட்டம் ஒன்று புற்தரையைக் கிளறிக் கொண்டிருக்க அருகே கட்டியிருந்த குளுமாடு மிரண்டு ஹீங்காரம் செய்து திணறிக் கொண்டிருந்தது.

தம்பிராசா துணிப் பந்தொன்றை நெருப்பு மூட்டி பன்றிகளிடையே எறிந்தான். பன்றிக் கூட்டம் சிதறி ஓட, நெருப்பால் மிரண்ட குளுவானின் ஹீங்காரம் அந்த அந்காரத்தைத் துளைத்தது.

தூங்காத இரவாக விடிந்தது. திரவியத்திற்கு அனுபவம் புதிதாக இருந்ததால் புத்துணர்ச்சியாக இருந்தது. குளு மாடு அமைதியாக அசைபோட்டுக் கொண்டிருந்தது.

அவர்கள் எழுந்து காலைக் கடனை முடித்து, உணவையும் உண்டுவிட்டு கீழிறங்கி நடந்து திரிந்தார்கள். அவர்களே அறிந்திருந்த, பெயர் தெரியாத காட்டுப் பழங்களைப் பறித்துண்டார்கள்.

நேற்றைய தினம் போலவே குளுமாட்டுக் கூட்டம் ஓடி வந்தது. வழியில் கட்டிப் போட்டிருந்த குளுவான் அருகே நின்று சுற்றிச் சுற்றி வந்தது. தமது எச்சரிக்கையான விழிகளை நாற்புறமும் கழற்றி ஹீங்கார முழக்கமிட்டது.

இவர்கள் இருவரும் சிறாம்பியில் ஏறி மரக்குழைகளிடையே பதுங்கிக் கொண்டனர். அவைகளின் பார்வையில் பன்றிகள் பறித்த குழிகளே பட்டன. சில அவற்றை முகர்ந்து கிளறி எறிந்தன. சில குளத்தை நோக்கி நகரவும், எல்லாம் ஓடிச் சென்று குளத்தைச் சேறாக்க முனைந்தன.

திரவியத்துக்குப் பரபரப்பாக இருந்தது. தம்பிராசா அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்தான். நேரம் சென்று கொண்டிருந்தது.

குளுவான்கள் ஒவ்வொன்றாகக் குளத்தை விட்டு வெளியேறிக் கட்டப் பட்ட காளையைப் பார்த்து விட்டு தயக்க நடையுடன் போய்க் கொண்டிருந்தன. ஆனால் ஒன்று மட்டும் போகாமல் தனித்து அதனையே முகர்ந்தும், உராய்ந்தும், முகத்தோடு முகம் வைத்தும் என்ன பேசினவோ? ஆறுதல் சொன்னதோ?

திரவியத்துக்குத் தாங்க முடியவில்லை. உருக்கமாக இருந்தது.

'ஏன் மச்சான் போகாம இருக்கு?'

'அதின்ர சோடி போல...... அதுதான் நிக்குது. உது லேசில போகாது. உதைப் பிடிக்கிறது தான் வேலை. ஆனால் கோபமாக இருக்கும். நேற்று நல்ல வேளை காளையைப் பிடிச்சிட்டம். இது அதின்ர பிணைதான். அதுதான் காளையோடு முகந்தது.'

தம்பிராசா கீழிறங்கினான். அவனது தேடாக்கயிறு அதன் மேல் விழுந்தது. கயிறு சோர்ந்தது. குளுமாடு அவனைப் பார்த்தது. அவனைத் துரத்தத் தொடங்கியது. தம்பிராசா நேராக ஓடாமல், வளைந்து வளைந்து ஓடி, அதன் பின்புறமாக ஓடத் தொடங்கினான். குளுமாடால் உடனடியாகத் திரும்ப முடியாது. அது வட்டமடித்துத் திரும்ப முயலுகையில் தம்பிராசா நிலைமாற்றி அதன் பின்புறத்துக்குப் போய்விடுவான். அது திரும்ப முயற்சிப்பதும், தம்பிராசா அதற்குப் பாய்ச்சல் காட்டுவதுமாக இருந்தான். அவன் நன்றாகக் களைத்துப் போனான். ஒரு திருப்பத்தின் போது தம்பிராசா கத்தினான்.

'மச்சான் கயிற்றைக் கழுத்தில எறி.' திரவியம் பயத்தால் உதறிக் கொண்டே கயிற்று வளையத்தை அதன் கழுத்தை நோக்கி எறிந்தான். நல்ல சுருக்கு, இறுகியது. மாட்டின் மூர்க்கத் தனம் அதிகரித்தது. பலமாக இழுத்தது. சிறாம்பியிலிருந்து திரவியம் கயிற்றுப் பிடியோடு விழுந்து, தரையில் அரையலானான்.

குளுமாட்டின் கவனம் திரும்பியதும் தம்பிராசா தனது கயிற்றை அதன் கால்களிடையே வீசினான். பின்னங்காலில் அந்தச் சுருக்குப் போய் இறுகியது. இதற்குள் எழுந்து விட்ட திரவியம் மாட்டின் கயிற்றை முன்னாலிழுக்க, தம்பிராசா கால் கயிற்றைப் பின்னால் இழுக்க மாடு நிலைத்து ரீங்காரமிட, கட்டியிருந்த மாடும் ரீங்காரமிடத் தொடங்கியது. இரு குளுவான்களையும் ஒன்றுடன் ஒன்று பிணைத்துக் கட்டினர்.

திரவியம் சிறாம்பியிலிருந்து விழுந்தாலும், சருகுப் புதர்களில் விழுந்ததால் விலாவில் சிறிதளவே நோ கண்டிருந்தது. புறங்கைகள் உராய்வு ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. தம்பிராசாவின் தோள் மூட்டுகளெல்லாம் கழன்று விட்டதென வலி கண்டிருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இருவருக்கும் மகிழ்ச்சியால் சிரிப்பு வெடித்துக் கொண்டு வந்தது.

இரண்டு குளுமாடுகளையும் ஓட்டிவந்து, திரவியத்தின் மாட்டுக் கொட்டகையில் கட்டிவிட்டுப் படுக்கும் போது இரவாகி நீண்ட நேரமாகிவிட்டது. அப்போதும் வேலாயுதத்தாரின் மாட்டுப் பட்டியில் விளக்கு வெளிச்சம், ஆட்கள் நடமாட்டம் காணப் பட்டது.

❍ ❍ ❍

முதனாள் தூக்கமின்மையும், மாடுகள் போராட்டத்தால் ஏற்பட்ட உடல் அசதிச் சோர்வு என்பனவற்றால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவனை மனைவியின் கூச்சல் தூக்கி எறியப் பட்டதென எழுப்பியது.

'இங்க வாங்கோவன்... இராத்திரிக் கொண்டுவந்த மாடொன்றையும் காணேல்ல...'

எந்தப் படுபாவியோ இராவோடு இரவாகக் கொண்டு போட்டான்.

திரவியம் ஓடிப்போய்ப் பார்த்தான்.

புழுதியில் மாடுகளின் தடயமும், மனிதரின் காலடிச் சுவடுகளும் தெரிந்தன. வேலாயுதத்தாரின் பட்டியை எட்டிப் பார்த்தான். ஒன்றுமேயில்லை.

இரவு கள்ளமாக மாடுகள் கடத்தப்பட்டிருந்தன.

வெளியே ஓடிவந்து பாதையைப் பார்த்தான் மாடுகளின் குழம்படிகள், குழம்பிப் போய் பாதை நீண்டதென தொலைவு வரும்வரை வெறிச்சிட்டிருந்தது.

அவனுக்கு ஏதோ புரிந்தது. அவனது ஆக்ரோஷ வெள்ளம் இரத்த நாளங்களைத் துடிக்கச் செய்தன.

உள்ளே ஓடிச் சென்று கைக்கோடாரியை எடுத்துக் கொண்டு ஓடினான். மாடுகளின் குளம்படிகள் வழிகாட்டிச் சென்றன.

'மச்சான் நில்லு.... நேற்று நடத்தியது போராட்டமில்ல... இண்டைக்கு நடத்தப் போறது தான் போராட்டம்' என்று குரல் கேட்டுத் திரும்பினான், தம்பிராசா தன் கைக்கோடாரியுடன் ஓடிவந்து கொண்டிருந்தான்.

அவன் பின்னே புழுதி, மேகங்களாகத் திரண்டதென மக்கள் கூட்டம் வந்து கொண்டிருந்தது.

**நன்றி:சர்ப்பவியூகம் தொகுதி (2002)**

❍



# படைப்புலகில் செம்பியன் செல்வன் – நுண் ஆளுமைகள் நிறைந்த கலைஞர்

ஆதிலட்சுமி சிவகுமார்

1982 இல் எழுத்துலகில் நுழைந்த புதிதில் நான் வார இதழ்களுக்கும் இலங்கை வானொலிக்கும் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டிருந்தேன். அந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் அடிக்கடி யாழ் இலக்கிய வட்டத்தின் இலக்கியக் கூட்டங்கள் நடக்கும். பெரும்பாலும் மூத்த பல எழுத்தாளர்களை அங்கே பார்க்கலாம். நானும் எல்லாக்கூட்டங்களுக்கும் போவேன். ஆனால் வெறும் பங்குபற்றுபவளாக இருந்துவிட்டு வந்துவிடுவேன்.

பின்னர் 1990 இன் பிற்பகுதியில், புலிகளின் குரல் வானொலி தொடங்கப்பட்டது. நானும் சேவை அடிப்படையில் வானொலிப் பணியாளராக அப்போது இணைந்திருந்தேன். அப்போது

புலிகளின் குரல் வானாலியின் பொறுப்பாளராக அமரர் பரதன் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். மிகுந்த கலையுணர்வும் நிர்வாகத்திறனும் கலைநுணுக்கங்களும் கொண்டிருந்த பரதன் அவர்கள், எல்லோராலும் அறியப்பட்ட மூத்த எழுத்தாளர் சு. இராஜநாயகம் அவர்களது மகன் என்பதால் இலகுவில் அவரால் கலைஞர்களையும் படைப்பாளிகளையும் அணுகவும் அவர்களை வானொலிச் சேவையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தவும் முடிந்தது. பரதன் அவர்களின் அணுகுமுறை நூற்றுக்கணக்கான மூத்த, ஆளுமைமிக்க கலைஞர்களையும் படைப்பாளர்களையும் ஒருங்குசேர்த்தது.

இந்நிலையில் பேரார்வத்தோடு வானெலிக்கு எழுதவரும் தொடக்கநிலைப் படைப்பாளர்களை நெறிப்படுத்தி, அவர்களிடமிருந்தும் சிறப்பான படைப்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக கலை இலக்கியப் பயிற்சிப்பட்டறை ஒன்றை பரதன் அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுத்தினார். அந்தப்பயிற்சிப்பட்டறையின் வளவாளர்களாக மூத்தபடைப்பாளர்கள் பலர் கலந்துகொண்டார்கள்.

அவர்களிலே திரு. செம்பியன் செல்வனும் கலந்துகொண்டிருந்தார். அவரை ஆசிரியராகக்கொண்டு வெளியிடப்பட்ட 'அமிர்த கங்கை' இதழில் நானும் எழுதிவந்ததால் என்னை அவர் அறிந்திருந்தார். என்னுடைய எழுத்துகளைப் பற்றி என்னுடன் கதைத்ததுடன், அருகிருந்தவர்களுக்கும் அறிமுகம் செய்தார்.

அவரிடம் கருத்துகளைக் கேட்பதற்கும் உரையாடுவதற்குமாக அவ்வப்போது அவரின் வீட்டிற்கும் செல்லவேண்டியிருந்தது. அவரைப்போலவே மிகவும் அமைதியான குடும்பம் அவருக்கிருந்தது. மாலைவேளையில் தான் அவருக்கு நேரம் கிடைக்கும். பல்வேறு பணிச்சுமைகளுக்கு நடுவேயும் இன்முகத்தோடு வரறேறு உதவுவார். யாரையும் குறைசொல்லியோ குற்றம்சுமத்தியோ அவர் கதைப்பதில்லை. அவருடனான அந்தப்பொழுதுகள் மிகுந்த பயனுள்ளவையாக இருந்தன.

காண்கின்ற போதெல்லாம் ' நிறைய வாசியுங்கள் ' என்று அறிவுரைப்பபார். தானும் எவ்வளவுக்குப் படைக்கின்றாரோ அதைவிடவும் பன்மடங்கு வாசிப்பவராகவும் இருந்திருக்கின்றார். இலக்கியப் படைப்புலகில் அவர் தொடாத துறையே இல்லை என்னுமளவிற்குப் படைத்தவர் செம்பியன் செல்வன் அவர்கள்.

எண்ணற்ற சிறுகதைகளையும் நூல்களையும் படைத்தளித்த செம்பியன் செல்வன் அவர்கள் பல நாடகங்களையும் எழுதி மேடையேற்றியவர். இவரது நாடகங்கள் அடித்தட்டு மக்களின் உணர்வுகளையும் அவர்களின் பிரச்சனைகளைப் பேசுபொருளாகவும் கொண்டமைந்திருந்தன. அவற்றில் கிராமிய வாசைன மிகுந்திருந்தது. தன்னுடைய கருத்துகளைத் திணிக்காமல் சரியானமுறையில் எடுத்துச்செல்லும் நுட்பமான படைப்பு அவருடையது. அவரது ஆழமான உயிர்த்துடிப்புமிக்க வசனங்கள் நாடக உலகில் அவரை உயரக்கொண்டு சென்றன. அவர் எழுத்தில் ஏராளமான பரிசுகளைத் தனதாக்கிய ஆளுமை மிக்கவர். ஆனாலும் பணியுமாம் என்றும் பெருமை என்கின்ற எடுகோளாகத் திகழ்ந்தவர்.

இளைய படைப்பாளர்கள் பலர்மீது அவருக்கு அதீத நம்பிக்கை இருந்தது. அவர்களையெல்லாம் வளர்த்தெடுக்கவேண்டும் என்று அடிக்கடி சொல்லுவார். அதே போல் ஆசிரியராகவும் அதிபராகவும் யாழ் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர். தன் பணியின் பயனாகப் சிறந்த மாணவர்களையும் உருவாக்கியவர். பெரியவர் சிறியவர் என்கிற வேறுபாடின்றி அனைவரோடும் பழகக்கூடிய எளிமையான மனிதராக வாழ்ந்தார்.

தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளுக்கான போராட்டத்தைப் புரிந்துகொண்டு, மக்களின் பிரச்சினைகளையும் தன் படைப்புகளினூடாக வெளிக்கொண்டுவந்தார். அவரிடம் இனப்பற்றும் மொழிப்பற்றும் மண்பற்றும் ஊறிக்கிடந்தன. சக மனிதனாக எல்லா மனிதர்களையும் அவரால் நேசிக்கமுடிந்தது. அச்சம்நிறைந்த சூழ்நிலைகளிற் கூட ஆர்ப்பாட்டமற்ற முறையில் தன் பங்களிப்பை அவர் வழங்கிக்கொண்டிருந்தார்.

பல்துறை ஆளுமைமிக்கவராக திகழ்ந்துகொண்டிருந்த அவர் 2005 மே 20 இல் காலமாகினார். இவரது இழப்பு அனைத்து கலைஞர்களையும் அவரது வாசகர்களையும் துயரடையச் செய்தது. தேசியத்தலைவர் அவர்கள் அவரை நாட்டுப்பற்றாளராக மதிப்பளித்தார்.

செம்பியன் செல்வன் அவர்களின் படைப்புகள் அனைவராலும் படிக்கப்படவேண்டியவையாக உள்ளன.


அவருடைய செதுக்கலில் உருவாகிய ' காண்டீபம்' என்கிற சிறுகதை தமிழ்மக்களின் இருண்டகாலமொன்றில் நிகழும் துயரத்தையும் துணிச்சலையும் சித்தரிக்கும் அற்புதமான சிறுகதை. தமிழ்மக்களை நசுக்கிய அயலகப் படைகளும் பாடசாலைகளையும் மாணவர்களையும் இலக்குவைத்ததை மிகத்துல்லியமாகப் பதிவுசெய்த கதையாக உள்ளது. இக்கதையில் வரும் மாஸ்டர் இப்போதும் வாழ்ந்துகொண்டிருக்கிறார் சாட்சியாக.

# வாழும் கதாமாந்தர்கள்

திக்குவல்லை கமால் (இலங்கை)

‘செம்பியன் செல்வன் ‘ எனும் ஆ.இராஜகோபால் ஈழத்து இலக்கிய உலகில் மிகவும் பரிச்சயமானவர்.பிரபல படைப்பாளி ‘செங்கை ஆழியானி’ன்

சமகாலத்தவர்.’விவேகி’ மற்றும் சஞ்சிகைகளில் இயங்கியவர்.சம்பந்தன் சிறுகதைகளை இணைந்து தொகுத்தவர். பல்கலைக் கழக வாழ்க்கையில் பல வெளியீடுகள் செய்தவர்.நாடகப் பிரதி மாத்திரமன்றி திரைப் பிரதிகளும் எழுதியவர்.இலக்கிய அமைப்புகளில் குறிப்பிடத் தக்க பதவி வகித்தவர். இலக்கிய ஆலோசனைச் சேவையிலும் ஈடுபட்டவர்.




எழுபதுகளில் நிலவிய அரசியல் சூழல் காரணமாக ஈழத்து புத்தக - சஞ்சிகை வெளியீட்டுத் துறையில் ஒரு சாதகத்தன்மை ஏற்பட்டது.அப்போது வீரகேசரி நிறுவனம் மாதம் ஒரு நூல் என்ற திட்டத்தை முன்வைத்தது.இந்தத் தொடர்ச்சியின் ஒரு கட்டத்தில் பிரதேச நாவல் போட்டியொன்றை நடாத்தியது.அதில் பிரதேசத் தனித்துவம் தாங்கிய நாவல்கள் வெளிப்பட்டன.அவற்றிலிருந்து ஒட்டு மொத்தமான அவதானிப்பில் ‘ நெருப்பு மல்லிகை’ மிகச் சிறந்த பிரதேச நாவலாகத் தெரிவு செய்யப்பட்டது.தான் வாழ்ந்த யாழ்ப்பானப் பிரதேச தனித்துவ அம்சங்களைத் தாங்கியதாக இந்நாவல் திகழ்கிறது.

ஒரு நாவல் உருவாக்கத்திற்கு பல கூறுகள் காரணமாக இருந்த போதிலும் அதில் கதாபாத்திரங்களின் பங்கே மேலோங்கி நிற்கிறது. எழுதியவர்கூட

மற்றெல்லா விடயங்களையும் மறந்தாலும் தான் உருவாக்கிய பிரதான கதாபாத்திரங்களை மறக்கவே மாட்டார்.வாசகர் மனதிலும் கதாபாத்திரங்களே மிகைத்து நிற்கும்.கதைக் கருவிக்கேற்ப கதாபாத்திரங்கள் வார்க்கப்படாவிட்டால் கதை வலுவற்றுப் போகுமென்பது அறிந்ததே.சில தீவிர வாசகர்கள் தமக்குப் பிடித்த கதாபாத்திரங்களின் பெயர்களைத் தமது

பிள்ளைகளுக்குச் சூட்டுவதையும் கேள்விப்பட்டுள்ளோம்.

‘ நெருப்பு மல்லிகை’ யில் இவ்வாறான மறக்க முடியாத பாத்திரங்களைச் செம்பியன் செல்வன் படைத்தளித்துள்ளார்.

இரு பிள்ளைகளின் தாயான கமலம் என்ற அழகிய இளம் விதவையோடு கதை ஆரம்பிக்கின்றது.காதல் திருமணம் காரணமாக பிறந்தகத்திலிருந்து இடம் பெயர்கின்றனர்.நகர்ப்பக்கமாக கிட்டினர் வளவுப் பெரும் வீட்டில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொள்கின்றனர். கணவன் இறந்த பின்னரும் இருப்பிடத்தை மாற்றக்கூடிய சூழ்நிலை உருவாகவில்லை.

பெட்டிக் கடை வைத்து வியாபாரம் செய்துவந்த, நாற்பது தாண்டிய பிரமச்சாரி தம்பிஐயாதான் கிட்டினர் வளவுக்குப் பொறுப்பாக இருந்தார்.நாவல் முழுவதையும் இவர் ஆக்கிரமித்து நிற்பதோடு ஒவ்வொரு திருப்பத்திற்கும் காரணமாக அமைகிறார்.


பெட்டிக் கடை காலப்போக்கில் ஆள்வைத்து நடத்தக்கூடிய அளவுக்கு பெரிய கடையாக மாறிவிடுகிறது.கிட்டினர் வளவில் தங்கியிருப்போரிடம் வாடகை அறவிட்டு


அவ்வப்போது கொழும்பு சென்று உரிமையாளரிடம் ஒப்படைத்து விடுவார் தம்பிஐயா.

வளவில் தங்கும் திருமணமான செல்லத்தை கிணற்றடிப் பற்றைப் பக்கம் இருண்ட பொழுதுகளில் சந்திக்கும் அவன் கமலத்தின் மீதும் கண்வைத்திருந்தான். தூதுவிட்டுப் பார்ப்பவனும்கூட.

யாழ்ப்பாண மாநகர சபத் தேர்தல் வந்தபோது அதில் சுப்பிரமணியம் போட்டியிட்டார்.அவரது இணைப்பாளராகச் செயற்பட்ட தம்பிஐயா சகல திருகுதாளங்களையும் செய்து அவரை வெல்லச்செய்தான்.

விறகு களவெடுத்த செல்லம்மா அதனைக் கமலத்தின்




பக்கமாக வைத்துவிடுகிறாள். பதறிக்கொண்டுவந்த வேலாயுதத்தைச் சமாளித்து கமலத்திடம் நற்பெயர் வாங்க முனைதல்..., தனது கடைச் சேவகன் தேர்தலில் தன்பக்கம் நிற்கவில்லை என்பதற்காக அவனை வேறு விதமாகப் பழிவாங்கல்..., தேர்தல் குழுமோதலில் பாதிக்கப்பட்ட மாற்றுப் பக்கம் பையனை தன்கவனிப்பில் வைத்துக் கொள்ளல்., இப்படி ஒரு நீண்ட பட்டியலின் சொந்தக்காரன் தம்பிஐயா.

இதையெல்லாம் பார்க்கும்போது இப்படிப் பட்டவர்கள் ஏன் இந்த சமுகத்தில் வாழவேண்டுமென்ற வெறுப்பணர்வு எவர் மனதிலும் ஏற்படுவது நிச்சயம்.

இந்நாவலில் வெளிப்படும் இன்னொரு குறிப்பிடத்தக்க பாத்திரம்தான் கமலம்.அவள் தனது மகனையும் மகளையும் வளர்க்க மிகுந்த சிரமப்பட்டாள். காலை உணவுகள் செய்து விநியோகிப்பதே அவளது வருமான வழியாயிற்று.மகள் வாணியின் மீதான காதலும் கல்யாணமும் காவுகொள்ளப்படுகின்றது.பாலியல் சார்ந்த தொந்தரவுகள் வேறு. அவளுக்குத் தெரியாமல் அவளது அறையில் மதுபானப் பெட்டிகள் வைக்கப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்படுகிறாள்.’இவளுக்கொரு விடிவில்லையா? ‘என்று கேட்குமளவுக்கு கமலம் ஒரு நிஜமான பாத்திரமாகவே வடிக்கப்பட்டுள்ளாள்.

குளறி சின்னம்மா ஒரு உபபாத்திரமாக வந்தபோதும் எல்லோர் மனதிலும் இடம் பிடித்துக் கொள்கிறாள். கமலம் கணவனை இழந்த சந்தர்ப்பத்தில் சின்னம்மா மாத்திரம் இல்லாவிட்டாள் அவள் செத்தேபோயிருப்பாள். பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தாலும் உறவு முறையினர் எட்டிக்கூடப் பார்க்காததாலும் கமலம் வாழ்வதற்காக வெளியே சென்று உழைக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை.வீட்டிலிருந்து உழைப்பதே நல்லதென வழிகாட்டினாள் சின்னம்மா.

கமலத்தின் மகள் இளங்குமரியாக இருக்கும்போது கோயிற் திருவிழா மார்க்க ஆசைப்பட்டாள். அதற்காகப் படையெடுக்கும் இளசுகளின் விதவிதமான ஆடையணிகளைப் பார்த்து தன்னிடம் அப்படி இல்லையே என்று ஆதங்கப்பட்டாள்.வெட்கப் பட்டாள். இதை அவதானித்த சின்னம்மா புத்தாடைகளையும் நகைகளையும் அணிவித்து,ஒரு தாயைப்போல் விழாவுக்குஅழைத்துச் செல்வது மனதை நெகிழச் செய்கிறது.

கந்தையா மாஸ்டர் இன்னுமொரு குறிப்பிடத்தக்க கதைமாந்தர்.அவர் தேர்தலில் நின்றபோது அவரது மாணவர்கள் அவருக்காக உழைக்க முன்வருகின்றனர். இடதுசாரிச் சிந்தை கொண்ட அவர் முன்வைக்கும் கருத்துக்கள் சாதாரண சனங்களைக் கவர்ந்த போதிலும், சாதிய ஆதரவு இருந்தபோதிலும் ஜனநாயகத்தின் ஓட்டைகள் அவருக்குத் தோல்வியையே பரிசாக்கியது. அப்படித்தான் நடக்கும் என்பதை அவர் அறியாதவர் அல்ல.

கந்தையா மாஸ்டரின் மாணவன்தான் சிவராசா. தம்பிஐயாவின் கடையில் பொறுப்பாளனாக இருந்தான். அதற்காக தான் நினைத்தபடி அவனை ஆட்டிப்படைக்க முடியவில்லை.

கமலத்தின் மகன் குளத்தில் விழுந்தபோது அவனைக் காப்பாற்றி வைத்திய சாலையில் சேர்த்து உதவுகின்றான் சிவராசா.இது தற்செலான நிகழ்வுதான். என்றாலும் இதனூடாக வாணியின்மீது அவனுக்கு காதல் ஏற்படுகிறது.அது சாத்தியமாகும் கட்டத்தில் தம்பிஐயா மேற்கொண்ட சதி முயற்சியால் வாணியை வேறொரு சாரார் பெண் பார்க்க வருகின்றனர்.இதை சிவராசா அறிந்து மனம் நோகிறான்.இக்கட்டத்தில் தவறிய ஒரு பெண்ணை அவனுக்கு திருமணம் செய்து வைக்கின்றனர்.

முன்னேறக்கூடிய ஒரு திறமையான வாலிபனின் வாழ்க்கை இப்படியாக அமைந்துவிட்டது.பரிதாபத்திற்குரிய பாத்திரமாக அவன் அமைகிறான்.

மேற்படி குறிப்பிடத்தக்க பாத்திரங்களுடன்கருணானந்தா, கணபதி, ராணி,ஆரியப்பதிரன,வேலாயுதம், வள்ளிப்பிள்ளை,சைமன், தெய்வானை,கனகு,வேணுகோ பாலன்,பராசக்தி,இரத்தின சபாபதி போன்றோரையும் நாவலிலே காணலாம்.எத்தகைய பாத்திரங்களாயினும் அவர்கள் தத்தம் மனோபாவத்திற்கும் தேவைக்கும் ஏற்றவிதமாக இயங்குவதற்கான பின்புலம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக நாவலொன்றை வாசித்துச் செல்லும்போது வாசகர் மனதிலே பல்வேறு தாக்கங்களும் உணர்வுகளும் ஏற்படுவது தவிர்க்க இயலாததே.இங்கு கதாபாத்திரங்களின் இறுதி நிலைப்பாடு எதிர்பார்கப் படுவதுபோல் அமைகிறதா என்று அவதானிப்பது வழக்கம். பிரதான பாத்திரங்களாக தம்பிஐயாவும் கமலமுமே அமைகின்றனர்.

அன்று வழமைபோல விடியும் வேளை. அறையிலிருந்து வெளிப்பட்ட கமலம் கிட்டினர் வளவு எல்லையில் உள்ள தனது சமையலறைக்குச் சென்றாள்.ஆரம்ப தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டாள்.அப்போது அங்கு வந்து புகுந்தான் தம்பிஐயா.

" எதற்காக வந்தநீ?" - என்று கேட்டாள்.

" நீ மட்டும் இணங்கினால் உன்னை எப்படியெல்லாம் பார்ப பேன்தெரியுமா?"- தனது மோக விருப்பைக் கக்கினான்.

" போடா வெளியே" - அதிரடிப் பதில்தான் கிட்டியது.

" நீ விரம்பினாலும் விரும்பாட்டாலும் உன்ன நான் அடைந்து தீருவன்" - வெறியுடன் நெருங்கினான்.

அவளது கையிலிருந்த மண்ணெண்ணெய்ப் போத்தல் அவனை நோக்கி வீசப்படுகிறது.அவனது சட்டை,வேட்டி எல்லாம் தோய்ந்து விடுகிறது.

அவன் இன்னொருபடி முன்னோக்க முனைந்தான். அவனைத் தடுப்பதற்காக குனிந்தெடுத்த நெருப்புக் கொள்ளியை வேறொரு பக்கமாகத்தான் வீசினாள். பக்கென்று அவனைத் தீ பற்றிக் கொண்டது.அவன் உருண்டு புரண்டு கத்தினான்.ஓலை மறைப்பும் கூடவே எரிந்து தம்பி ஐயா சாம்பலாகி விடுகிறான். ஊரும் கூடிவிடுகிறது.

கிட்டினர் வளவு கிணற்று மறைப்பிலும் நிலத்திலும் நெருப்பு மல்லிகைக் கொடி படர்ந்திருப்பது அவ்வப்போது சொல்லப்படுகிறது.நெருப்பு மல்லிகை கமலத்தின் குறியீடுதான் என்பது இறுதியில் உறுதியாகிவிடுகிறது.

தம்மிஐயா இறுதிக் கட்டத்தில் தவறுகளை உணர்ந்து திருந்தபவனாகவும், கமலத்தின் உழைப்பும் சீரிய பண்புகளும் அவளுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கும் என்பதுவும் பொதுவான எதிர்பார்ப்பாக எவருக்கும் இருந்திருக்கும்.இந்நிலையில் தம்பிஐயாவின் முடிவு சற்றே நெருடலாகவே உள்ளது.

ஒவ்வொரு கதாமாந்தருக்குள்ளும் ஒவ்வொரு கதை. எல்லாம் பின்னிப் பிணைந்தே நெருப்பு மல்லிகை.

ஒரு பிரதேசத்தையும் ஒரு காலகட்டத்தையும் சிறப்பாக வெளிப்படுத்தும் வகையில் கதாமாந்தர்களை நடமாட வைத்ததில் செம்பியன் செல்வன் வெற்றிபெற்றள்ளார்.

# ஈழத்தின் தலைசிறந்த சிறுகதை சிற்பி!! தமிழின் முற்போக்கு இலக்கிய முன்னோடி!!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அத்தியடியிலும், நீராவியிடியிலும் என் இலக்கிய ஆசான் செம்பியன் செல்வனுடன் அளவளாவிய தருணங்கள் ஆயிரம். ஈழத்தின் பன்முக ஆளுமை கொண்ட எழுத்துக்கலைஞன் செம்பியன் செல்வன் எனது நான்காவது கவிதை தொகுதியான 1989 இல் வெளியான ‘‘உறக்கந்தேடும் உலகிற்காய்’’ முன்னுரையையும் எழுதியுள்ளார்.

நாவல், சிறுகதை, நாடகம், உருவகம், குறுங்கதை, திரைப்படம், சஞ்சிகை என தமிழ் இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தனது ஆளுமையினைப் பதித்தவர் செம்பியன் செல்வன். ஈழத்தின் பன்முக ஆளுமை கொண்ட எழுத்துக்கலைஞன் செம்பியன் செல்வன் ஆவார். இராஜகோபால் என்ற இயற்பெயருடைய செம்பியன் செல்வன் (ஜனவரி 1, 1943 - மே 20, 2005) ஈழத்தின் குறிப்பிடத்தக்க புகழ்பெற்ற எழுத்தாளர்.

**பல்கலைக்கழக மறுமலர்ச்சி:**

செம்பியன் செல்வன் இளம் வயதிலேயே சிறந்த வாசிப்பாளனாக இருந்தார். அத்துடன் பல்வேறு இலக்கிய சஞ்சிகைகள் பெற்று நிறைந்த வாசிப்பாளனானார். செம்பியன்



செல்வன் 1960 ஆம் ஆண்டுகளில் பேராதனை பல்கலைக்கழகக் கழகத்துக்கு அனுமதி பெற்று புவியியல் சிறப்புக்கலைப் பட்டதாரியானார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட இலக்கிய மறுமலர்ச்சியால் உருவாக்கப்பட்டவர்களில் செம்பியன் முக்கிய மானவர். இந்தப் பல்கலைக்கழகச் சூழலில் ஆற்றல்மிக்க எழுத்தாளர் கூட்டம் செம்பியன் செல்வனின் நண்பர்களாகவும் இருந்துள்ளனர்.

ஈழத்தமிழ் இலக்கிய உலகின் புத்தெழுச்சிக் காலமாகத் திகழ்ந்த 1960களுக்குப் பிந்திய காலத்தில் ஒரு முக்கியமான படைப்பாளியாகத் திகழ்ந்தவர் செம்பியன் செல்வன். சிறுகதை, குறுங்கதை, உருவகக் கதை, நாவல், இதழியல், அரங்கியல், ஆய்வு, உரைச்சித்திரம் எனப் பன்முக ஆளுமை கொண்ட படைப்பாளியாகவும் இலக்கியச் செயற்பாட்டாளராகவும் திகழ்ந்தவர் இவர்.

பட்டப் படிப்பிறக்காக 1960களில் பேராதனை பல்கலைக்கழகத்துக்குள் இவருடன், செங்கை ஆழியான், துருவன், அங்கையன் கைலாசநாதன், செ. கதிர்காமநாதன், செ. யோகநாதன், கலாபரமேஸ்வரன், நவசோதி, குந்தவை, ஆகியோர் இணைந்து பல்கலை வெளியீடு என்னும் அமைப்பை உருவாக்கி ஆண்டுக்கொரு சிறுகதைத் தொகுதியை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள், யுகம், என்னும் நான்கு தொகுதிகளையும் வெளியிட்டனர். இவர்கள் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் ஒன்பது சிறுகதைகளைத் தாங்கிய ‘காலத்தின் குரல்கள்’ எனும் தொகுப்பு மார்ச் 1961 ஆம் ஆண்டு

வெளிவந்தது. இதில் 'புதிய பரம்பரையின் துருவ நட்சத்திரம்' என்னும் அவரது சிறுகதை பிரசுரமாகியது. 1962 ஜனவரியில் பன்னிரண்டு சிறுகதைகள் தாங்கிய 'கதைப்பூங்கா' என்னும் தொகுப்பு வெளிவந்தது. இதில் 'பாதிமலர்' எனும் அவ ரது சிறுகதை பிரசுரமாகியது. மேலும் 1963ஆம் ஆண்டு ஜனவரியில் பத்து சிறு கதைகளைத் தாங்கி வெளிவந்த 'விண்ணும் மண்ணும் செம்பியன் செல்வனால் தொகுக்கப்பட்டது.

### ஈழநாடு வளர்த்த சிறுகதை சிற்பி :

அறுபதுகளில் ஒரு சிறுகதைப் படைப்பாளியாகவே எழுத்துப்பிரவேசம் செய்த இவருடைய பன்முக இலக்கியச் செயற்பாடுகளில் முக்கியத்துவம் பெறுவது இவரது சிறுகதைகளே என்பது இலக்கிய உலகின் திடமான கணிப்பாகும்.

செம்பியன் செல்வன் ஈழத்துப் படைப்பாளிகளைப் பற்றிய 'ஈழத்துச் சிறுகதை மணிகள்' என்னும் நூலினை எழுதியுள்ளார். இவரது 'சர்ப்பவியூகம்' சிறுகதைத்தொகுதி இலங்கை சாஹித்யவிருது பெற்றது. கலைக்கழகம் நடத்திய நாடகப்போட்டியில் தொடர்ந்து 4 வருடங்கள் முதல் பரிசு பெற்றவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகை தனது வெள்ளிவிழா பொருட்டு நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதை பரிசினைப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஈழநாடு பத்திரிகை தனது பத்தாண்டு நிறைவினையொட்டி நடத்திய சிறுகதைப் போட்டியிலும், கலைச்செல்வி சிறுகதைப் போட்டியிலும் முதற் பரிசு பெற்றுள்ள செம்பியன் செல்வனின் 'சர்ப்பவியூகம்' சிறுகதைத் தொகுதி 2003ஆம் ஆண்டுக்கான அரசசாகித்திய விருதினைப் பெற்றுள்ளது. 'அமைதியின் இறகுகள் இவருடைய இன்னொரு சிறுகதை நூல்.

குறுங்கதைகள், உருவகக் கதைகள் ஆகியவற்றிலும் திறமை காட்டியவர் செம்பியன் செல்வன். இவரின் 'குறுங்கதைகள் நூறு' என்னும் தொகுதி வெளிவந்திருக்கிறது. உருவகக் கதைகள் தொகுக்கப்பட்ட நிலையில் போர்க்காலச்சூழலால் அழித்து போயுள்ளது என்பதும் உண்மையே.

### நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு :

செம்பியன் செல்வன் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு காத்திரமானது. இதற்கு இவரின் நாடக பிரதியாக்கங்களுக்கு கிடைத்த பரிசில்கள் கட்டியம் கூறும். 1966.1967 ஆம் ஆண்டுகளில் இலங்கை கலைக்கழக நாடக எழுத்துப் பிரதிப் படங்களில் 'இந்திரஜித்', 'இருளில் எழும் பெருமூச்சுக்கள்' இரண்டாம். முதலாம் பரிசுகளைப் பெற்றன. 1975, 1976 ஆம் ஆண்டுகளில் இலங்கைக் கலாசாரப் பேரவையின் நாடக எழுத்துப் பிரதிப் படங்களில் 'சின்ன மீன்கள்', 'எரியும் பிரச்சினைகள் முதற்பரிசுகளைப் பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

செம்பியன் செல்வனின் 'மூன்று முழு நிலவுகள்' என்னும் நாடக நூல் 1967 ஆம் ஆண்டு வெளிவந்தது. செம்பியனின் மூன்று முழு நிலவுகள் நாடகம் மகத்தான வெற்றி பெற்றதுடன், மேடைக்கும், வாசினைக்கும் ஒப்பவே உயிரூட்டும் உரைநடையும், நாடக மறை கவர்ச்சியும் கொண்ட நல்ல நாடகம் என்று பலராலும் பாராட்டை பெற்றது.

ஈழநாடு தனது 10வது ஆண்டு நிறைவையொட்டி நடத்திய இலக்கியப் போட்டியில் செம்பியன் செல்வனின் 'விடிய இன்று நேரமிருக்கு' என்னும் ஓரங்க நாடகம் முதலில் இடம்பெற்றது. இந்த நாடகத்தில் யாழ்ப்பாணத்துச் சமூகம் ஒன்றினை நன்கு படம் பித்துக்காட்டுகிறார். ஏழைக் குடும்பமொன்றின் ஆசா பாசங்களையும், அவலங்களையும் இந்த நாடகம் சித்தரிக்கிறது. ஈழநாடு பரிசு பெற்ற நான்கு நாடக பிரதிகளும் 'விடிய இன்று நேரமிருக்கு...' எனும் புத்தகமாக ஜனவரி 1971ஆம் ஆண்டு ஈழநாடு வெளியீடாக வந்தது.

### செம்பியன் செல்வன் படைப்புகள் :

சர்ப்பவியூகம் - சிறுகதைத்தொகுதி
அமைதியின் இறகுகள் (சிறுகதைகள்)
குறுங்கதைகள் நூறு (குறுங்கதைகள்)
கானகத்தின் கானம் - நாவல்
நெருப்பு மல்லிகை (நாவல்)
விடியலைத் தேடும் வெண்புறாக்கள் (நாவல்)
மூன்று முழு நிலவுகள் (நாடகம்)
ஈழத்துச் சிறுகதை மணிகள் (விமர்சனம்)
நாணலின் கீதை (தத்துவம்)

### மண் வாசனை வீசிடும் நாவலாசிரியர் :

செம்பியன் செல்வனின் 'நெருப்பு மல்லிகை' என்ற நாவலும் மிக உன்னத படைப்பாகும். இந்த நாவல் அதிசிறந்த பிரதேசப் பரிசு நாவல் ஆகும். வீரகேசரியின் 73 ஆவது பிரசுரமாக நவம்பர் 1981 ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்த நாவலின் கருவூலத்தைப் பற்றி அவர் குறிப்புரையில் 'பிரதேச நாவல்களில் கிராமியம் சார்ந்தவை ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நெறியில் இயங்கும் தன்மைய தனித்துவ மானவை.

'நெருப்பு மல்லிகை' நாவல் வீரகேசரி பிரதேச நாவல் போட்டியில், 81 நாவல்களிடையே கலாநிதி பொன். பூலோகசிங்கம், திரு.இ.இரத்தி னம். திரு. மு.பொன்னம்பலம் ஆகியோரால் ஏகமனதாக

முதலாவதாகத் தெரியவருகிறது. அதிசிறந்த பிரதேசப் பரிசு நாவல் என இரட்டை முதல் பரிசு பெற்றது இந்த நாவல்.

போர்க்கால சூழலில் விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' எனும் நாவலை செம்பியன் செல்வன் ஈழமுரசில் தொடராக எழுதிவந்தார். இது 300 பக்கங்கள் கொண்ட நூலாக அச்சாகியிருந்தது. 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக் காரணமாக 'விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' நாவலின் அச்சான பிரதிகள் அழிந்து போயின.

'நிழல்கள்' 1963 ஆம் ஆண்டுகளில் சுதந்திரனில் செங்கை ஆழியானும், செம்பியன் செல்வனும் ஒருவர் மாறி ஒருவராக எழுதிய தொடர்தான் 'நிழல்கள்'. இந்த இருவரும் இணைந்து எழுதிய 'நிழல்கள்' யாழ்ப்பாண சமூகத்தின் முதிரா இளைஞர்களின் மனப் போராட்டங்களைச் சுவையாகச் சித்தரிக்கும் நாவல், செங்கை ஆழியான் எழுதிய அத்தியாயங்கள் சுவைப்படக் கதையைச் சொல்லி நகர்த்துவனவாக அமையும். செம்பியன் செல்வனின் அத்தியாயங்கள் கருத்துக்களைச் சொரிந்து நாவலின் இறுக்கத்தினைப் பேணியுள்ளன. மேலும் செம்பியன் செல்வன் 'நேரங்கள்' 'கர்ப்பக்கிரகம்'ஆகிய நாவல்களையும் படைத்துள்ளார்.

### வரலாறு படைத்த இதழாசிரியர்:

செம்பியன் செல்வன் இதழியியல் துறையிலும் ஈடுபட்டு, அதில் வெற்றியும் கண்டுள்ளார். 1964 - 1970 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 'விவேகி' சஞ்சிகையின் இணை ஆசிரியராக இருந்துள்ளார்.

1966லிருந்த வெளிவரத்தொடங்கிய விவேகி குறுகிய காலத்தில் ஆற்றியுள்ள பணிகள் வரலாற்றுமுக்கியத்துவம் கொண்டவை. விவேகி மற்றும் அமிர்த கங்கை ஆகியவவை இவருடைய ஆசிரியத்துவத்தில் வெளிவந்து வரலாறு படைத்த இதழ்கள். ஈழத்தமிழ் சிறுகதை மணிகள் இவர் பதிப்பித்த நமது சிறுகதை முன்னோடிகள் பற்றிய வரலாற்று ஆய்வு நூலாகும்.

புவியியல் சிறப்புப்பட்டதாரியான இவர் விவேகி சஞ்சிகையின் இணையாசிரியராக இருந்தவர். விவேகி 1970களில் இலங்கையில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இது தரமான இலக்கியபடைப்புக்களை வெளியிட்டது.

மேலும் ஈழமுரசு தினசரியின் மாதாந்த இலக்கியச் சஞ்சிகையாக 'அமிர்த கங்கை' 1986 ஆம் ஆண்டு வெளிவந்தது. 'அமிர்தகங்கை 12 இதழ்களே வெளிவந்தது.




ஆனால் இந்த இலக்கிய சஞ்சிகை இன்றும் இலக்கிய உலகில் பேசப்படுகின்ற தரமுடையதாக இருக்கிறது.

இந்தச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர் செம்பியன் செல்வன். இங்கு இவரது பணி ஒரு இலக்கிய சஞ்சிகை எப்படித் தரமுடையதாக வெளியிட வேண்டும் என்பதை இதழியல் உலகுக்கு எடுத்துக்காட்டாய் இருந்தமையே ஆகும்.

அமிர்த கங்கை இதழ் யாழ்பாணத்தில் இருந்து 80 களின் நடுப்பகுதியில் வெளிவந்தது. அமிர்த கங்கை ஆசிரியராக செம்பிய செல்வன் விளங்கினார். சிறுகதை, கவிதை, கட்டுரை, செங்கை ஆழியான் இந்த தொடர் நாவல், வாசகர் கடிதங்கள், நகைசுவை துணுக்குகள் இதில் வெளியாகின.

### வாடைக்காற்று திரைப்படம்:

வீரகேசரி வெளியீடான செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' நாவலை மூலக் கதையாகக் கொண்டு, அவரது அனுமதியுடன் செம்பியன் செல்வன் திரைக் கதை உரையாடல் எழுத்துப் பிரதியை தயாரித்தார். இந்த எழுத்துப் பிரதியை பின்னர் திரைப்படமாக தயாரித்தனர்.

செங்கை ஆழியான் எழுதிய வாடைக் காற்று திரைப்படமான பொழுது, அதற்கான திரைக்கதை, வசனங்களை எழுதிய செம்பியன் செல்வன் இலங்கை அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் ஈழத்திரைப்பட வரலாற்றிலேயே முதன்முறையாக A தரமுடையதாகத் தெரிந்து ரூபா 1.84,000 மான்யம் வழங்கியது. இவர் தொடர்ந்தும் ஈழத்திரைப்படக் குறும்படங்களிலும், அவை தொடர்பான வழிகாட்டல் விரிவுரைகளிலும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளார்.

ஈழத்து நவீன இலக்கிய உலகின் ஈடிணையற்ற இலக்கியவாதியாகத் திகழ்ந்த நாட்டுப் பற்றாளர் செம்பியன் செல்வன் மே 20, 2005இல் காலமானார். ஈழத்தின் இன்றைய படைப்பாளர்களுள் செம்பியன் செல்வன் மிகவும் வெற்றிகரமான காத்திரமான இலக்கிய முத்திரையை பதித்துள்ளார் என்பது உண்மையே.

❍

கட்டுரை



# ஈழத்துச் சிறுகதை உலகில் செம்பியன் செல்வன்

என்.லாவண்யா (இலங்கை)

1960 /1970 காலகட்டத்தில் சிறுகதையாசிரியர்களாக அறிமுகமாகித் தங்களைத் தரமான படைப்பாளிகளாக இனங்காட்டியவர்களில் செம்பியன் செல்வன் குறிப்பிடத்தக்கவர். கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியத் துறையில் தமது ஆளுமையின் சுவடுகளை ஆழமாகப் பதித்து நிற்கும் முதல் வரிசைப் படைப்பாளி இவராவார். செம்பியன் செல்வன் பல்வேறு இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வந்தாலும் இவரது சிறுகதைத் துறை முதன்மையானது. பேராசிரியர் கைலாசபதி "பல்வேறு ஆக்க முயற்சிகளில் ஈடுபடுபவர் என்றும், சிறுகதை எழுத்தாளர் என்ற பட்டியலில் அவரைப் பலரும் அறிவர் என்றும், ஏறத்தாழ இருபது வருடமாகச் சிறுகதை எழுதி வருகின்றார் என்றும், அவரது சிறுகதைகளில் நடையின் தனித்துவத்தை ஆங்காங்கே காணக்கூடியதாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். இவரது சிறுகதை நூல்களாக 'அமைதியின்இறகுகள்', 'சர்ப்பவியூகம்' ஆகியன வெளிவந்துள்ளன.

இதில் 'அமைதியின் இறகுகள்' யாழ் இலக்கிய வட்டத்தின் வெளியீடாக 01.12.1966 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இவர் படைத்த பல சிறுகதைகள் பரிசு பெற்ற கதைகளாகும். இதில் 'இதயக்குமுறல்', 'நிலம் யாருக்காகக் காலடியில் கிடக்கிறது', 'உப்பங்களி', 'பூவும் கனியும்', 'மாயாவதியின் கனவு' போன்ற கதைகளைக் குறிப்பிடலாம். அத்துடன் இவரது 'சர்ப்பவியூகம்' யாழ் இலக்கிய வட்டம் வெளியீடாக 02.07.2002 ஆம் ஆண்டில் வெளிவந்தது. ஈழநாடு தனது பத்தாண்டு நிறைவினையொட்டி நடாத்திய சிறுகதைப் போட்டியிலும், கலைச்செல்வி சிறுகதைப் போட்டியிலும் முதல் பரிசு பெற்றுள்ள இச்சிறுகதைத் தொகுதி 2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், இலங்கை அரச சாகித்திய விருதினைப் பெற்றுள்ளது.

அந்தவகையில் இவருடைய சிறுகதைப் படைப்புகள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்துக் கிராமிய மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டதாகப் படைக்கப்பட்டுள்ளன. ஈழத்துச் சிறுகதைகளில் போர்ச்சூழல் பற்றிய நிகழ்வுகளைத் தனது சிறுகதைகளில் இவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அக்காலத்துச் சமுதாயத்தில் நிலவிய தொழிலாளர் சமூகத்தினரை அடிமைப்படுத்தி உழைப்பைச் சுரண்டுகின்ற அதிகார வர்க்கம் குறித்த சிறுகதைகளையும், அதிகாரத்தால் பொதுமக்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் அதிகாரிகளின் செயல்கள் குறித்த சிறுகதைகளையும் செம்பியன் செல்வன் படைத்துள்ளார். அத்துடன் வறுமை, குடும்ப உணர்வு போன்றன பற்றியும் இவரின் சிறுகதைகள் அமைந்துள்ளன. இவரது சிறுகதைகள் குடும்பம் சார்ந்ததாக அமைந்தாலும் வேறுபட்ட கோணங்களில் அமைந்திருப்பதைக் காண முடிகின்றது. அதாவது செம்பியன் செல்வன் தாய்மைப் பாசத்திற்கு முக்கியம் கொடுத்து தாய்மையின் மன உணர்வைக் குறிப்பதாகச் சிறுகதைகளை எழுதியுள்ளார். இவருடைய சிறுகதைகள் பெருமளவு பெண்களின் உளவியல் குறித்துப் பேசுவதாகக் காணப்படுகின்றன. செம்பியன் செல்வனின் 'சாக்கடை நீர் தெறிக்காதவர்கள்', 'கருங்கற் பூமியும் நெருஞ்சிக்காமமும்', 'குங்குமப்பூ' போன்ற சிறுகதைகள் பெண்களின் உள்ளத்து வேதனைகள், ஏக்கங்கள் போன்றவற்றைச் சித்தரிப்பதாக அமைந்துள்ளன. மேலும் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் சக மனிதன் மீது அல்லாமல் பிராணிகள் மீது மனிதன் காட்டும் மனிதாபிமானம் அல்லது கரிசனை குறித்துப் பேசுவதாகச் செம்பியன் செல்வனுடைய சிறுகதைகள் பல காணப்படுகின்றன. மேலும் ஏழ்மை குறித்து எழுதிய சிறுகதைகள் மூலம் பல்வேறுபட்ட தன்மைகளை உணர்த்த முன்வருகின்றார். ஏழ்மை குறித்த கதைகளில் கதாசிரியர் மிகவும் இலகு தமிழைக் கையாண்டிருப்பதுடன் தனது கருத்தைச் சிறந்த முறையில் வெளிக்காட்டியிருப்பதையும் காணலாம்.

அத்துடன் குடும்ப உணவு பற்றிய சிறுகதைகளிலே ஆண் - பெண் மன இயல்புகளும், தாய்மையின் பாசப் போராட்டமும் பிரதிபலிக்கப்படுகின்றன. இவற்றில் வருகின்ற பெண் பாத்திரங்கள் மனதை விட்டு அகலாத வகையிலும், ஏதோவொரு மெய்ப்பாட்டு உணர்வினை வாசகனிடையே ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளன. மேலும் யுவதிகளின் முறைகேடான செயல்களையும், தாய்மையின் உள்ளத்து இயல்புகளையும் எடுத்துக்காட்டுகின்ற போது தனது கருத்தைச் சிறந்த முறையில் வெளிக்காட்டியிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. அந்தவகையில் இவரது சிறுகதைகள் அனைத்தும் தனித்தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றன.

சிறுகதைகள் மக்களிடையே மனதில் நின்று நிலைப்பதற்குக் காரணமாக இருப்பது உத்திமுறைகளாகும். உத்திகள் படைப்பாளியினுடைய தனித்தன்மையைக் காட்டுவதாக அமைகின்றன. அதுமட்டுமல்லாது ஒரு படைப்பாளியை மற்றொரு படைப்பாளியிடமிருந்து தனித்து இனங்காட்டுவதற்கு உத்திமுறைகள் பயன்படுகின்றன. இவ்வுத்திகள் மூலம் செய்திகளை இலகுவாக உணரச் செய்ய முடியும். அந்தவகையில் செம்பியன் செல்வன் தன்னுடைய சிறுகதைகளில் பல்வேறு உத்திமுறைகளைக் கையாண்டுள்ளார். இதுவே செம்பியன் செல்வன் இலக்கிய உலகில் இன்றும் அழியாத் தடம் பதித்து நிற்கக் காரணமாகின்றன. நடை என்பது ஆசிரியரின் தனிச் சொத்து என்று கருதினாலும் ஆசிரியர் அவர் வாழ்ந்த காலத்தின் செல்வாக்குக்கு உட்பட்டிருப்பதை மறுக்க இயலாது. காலத்தின் சிந்தனைகள், எண்ணங்கள், அவற்றை வெளியிடும் பேச்சு மொழி, எழுத்து மொழி இவ்வளவையும் ஜீரணித்துக் கொண்டுதான் படைப்பாளரும் தம்முடைய சொந்த நடையில் படைப்பை வெளியிடுகின்றனர். எனவே நடைக்கு ஆசிரியர் மட்டும் காரணமாவதில்லை. அவர் வாழும் காலமும் காரணமாகிறது.

அந்தவகையில் செம்பியின் செல்வனுடைய சர்ப்பவியூகம், அமைதியின் இறகுகள் ஆகிய இரு சிறுகதைத் தொகுப்புகளும் இலகு மொழிநடையிலேயே அமைந்துள்ளன. இவருடைய மொழிக் கையாளுகை தமிழ் மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. மேலும் இவரது மொழிநடையில் அணிக் கையாளுகை, விமர்சனக் கருத்து, சொல்லாட்சி, கருத்து வர்ணனை போன்ற அம்சங்கள் காணப்படுகின்றன. மொழிநடையில் அணிகளையும் பழமொழிகளையும் கையாண்டுள்ள விதம் சிறப்பிற்குரியதாகும். நல்ல நடையானது படிப்பவரைக் கடைசிவரை சலிப்பூட்டாமல் தன்னோடு இழுத்துச் செல்ல வேண்டும். அதேபோன்று செம்பியன் செல்வனுடைய உணர்ச்சியும், சொல்வேகமும் நிறைந்த நடையைக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளில் காணலாம்.

“இனித் தாமதிக்கக்கூடாது. நின்ற நிலையிலேயே கண்டு ஈன்று விட்டால்...கன்று அந்த ஈரம் வற்றிய வறண்ட பூமியில் விழுந்து... கூழாகி... குழம்பாகி... உருச்சிதைந்த தசைத் துணுக்குகளாக... அவளது தாய்மை உணர்வுகள் சித்திரவதைக்காளாகின்றன.”

மேலைநாட்டவரிடமிருந்து பெறப்பட்ட நனவோடை உத்திமுறையானது மௌனி, லா. ச. ரா ஆகியோரைத் தொடர்ந்து ஈழத்தில் செம்பியன் செல்வதால் பின்பற்றப்பட்டது. எடுத்துக்காட்டாக: ‘பழங்கட்டில்’ என்ற செம்பியன் செல்வனுடைய சிறுகதை மனைவி, மகளைப் பறிகொடுத்த வயோதிபர் தன்னுடைய ஊரிற்கு ஆராய்ச்சிக்கு வந்த இளைஞரிடம் தனது கடந்த காலம் பற்றிக் கூறுகின்றார். சிறுகதை உத்திகளில் பாத்திர வார்ப்பு மற்றும் பாத்திர வர்ணனை என்பது முக்கியமானதாகும். செம்பியன் செல்வனுடைய சிறுகதைகளில் வருகின்ற பெண் பாத்திரங்கள் மனதில் ஏதோவோர் உணர்வை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. உதாரணமாக: இதயக்குமுறலில் அக்காவாக வரும் குழந்தையின் தாய் என்னும் பாத்திரம் மனதை விட்டகலாத பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளது.

பாத்திர வர்ணனை பற்றி நோக்கின் செம்பியன் செல்வனுடைய பாத்திர வர்ணனை வேறுபட்டதாக அமைந்துள்ளது. அதாவது ஒவ்வொரு வேறுபட்ட சமூகத்தில் வாழுகின்ற தனி மனிதனுடைய பலம், பலவீனம், பெண்களின் உணர்வுகள் என்பவற்றிற்கு முக்கியம் கொடுக்கும் வகையிலே பாத்திரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ‘கன்னிக்கால்’ கதையில் வரும் பல்கலைக்கழக மாணவி, ‘இதயக்குமுறலில்’ வரும் குழந்தையின் தாய், ‘காண்டீபம்’ கதையில் வரும் காண்டீபன், ‘காலமை’ என்பதில் வருகின்ற ஜெகன் போன்ற எடுத்துக்காட்டுகள் பாத்திர வர்ணனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

சிறுகதைகளிற்குப் பொருத்தமான தலைப்பு இன்றியமையாததாகும். இதைப் பொறுத்தே வாசகர்களின் ஈர்ப்பு அமைகின்றது. அந்தவகையில் செம்பியன் செல்வனின் சிறுகதைகள் கதையின் சாரத்தைப் படிமம் மூலம் சுட்டும் தலைப்புக்களாகக் காணப்படுகின்றன. ‘கால்நடைகள்’, ‘வீடு திரும்புதல்’, ‘நிலம் வீடு வாசல்’, ‘நீரும் நிலமும்’, ‘குங்குமப்பூ’, ‘இதயக்குமுறல்’ போன்ற சிறுகதைத் தலைப்புகள் ஏதோ ஒரு வகையில் கதையின் சாரத்தை வெளிப்படுத்துகின்றன. ஆனால் அவை மிக வெளிப்படையாகவும் அமையவில்லை. அது வாசகனின் கற்பனைக்குத் தடையாக அமையும். அந்தவகையில் செம்பியன் செல்வன் முக்கியம் பெறுகின்றார்.

அந்த வகையில் செம்பியன் செல்வனுடைய சிறுகதைப் படைப்புகள் அனைத்தும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடியதாகவும், பாமர மக்களாலும் விளங்கிக் கொள்ளும் வகையிலான மொழி நடை கொண்டதாகவும் காணப்படுகிறது. மேலும் சமுதாயத்தில் நிகழ்கின்ற பலதரப்பட்ட நிகழ்வுகள், பிரச்சினைகளைப் பிரதிபலிக்கின்ற விம்பங்களாகவும் சிறுகதைகள் அமைந்துள்ளதுடன் ஆண் - பெண் மன உணர்வுகளை சித்தரிப்பதோடு, தாய்மைக்கு முக்கியம் கொடுக்கும் தன்மையையும் இவருடைய சிறுகதைகளில் காணக்கூடியதாக உள்ளது.

ஈழத்தில் 1960/1970 காலகட்டத்தில் சிறுகதையாசிரியர்களாக அறிமுகமாகி இலக்கிய உலகில் பிரவேசித்த செம்பியன் செல்வன் தனது சிறுகதை முயற்சியாலும், தனது ஆளுமையாலும் இன்றுவரை ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்குப் பல்வகையிலும் வளம் சேர்த்து வருகின்ற ஒரு எழுத்தாளராகவும் இவருடைய சிறுகதைகள் தனித்தன்மை கொண்டுள்ளதை இனங்காண முடிகின்றது.

# விண் தொடும் வாமனம்

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

"இராஜகோபால்"" என்றால் ""அவர் யார்?" என்று கேட்பவர்கள் "செம்பியன்செல்வன்" என்றதும் "கலை, இலக்கியப் பரப்புகளில் அவர் நிமிர்ந்து ஒளிர்ந்து நிற்காத துறை எதுவும் இல்லையே" என உறுதிபடக் கூறுவார்கள். நாவல், சிறகதை, குறுங்கதை, கவிதை, நாடகம், திரைப்படம், சஞ்சிகை ஆகிய துறைகளில் செம்பியன் செல்வன் தன் திறமையால் உச்சமான இடமொன்றை எட்டியவர். அதுமட்டுமன்றி பல இலக்கிய கர்த்தாக்களை உருவாக்கியவர். "ஞானம்" சஞ்சிகையில் இற்றைவரை ஆண்டுதோறும் நடத்தும் சிறுகதைப் போட்டிமூலம் தன் மறைவின் பின்னரும் இப்பணியினை அவர் தொடர்கிறார். இப்போட்டி வாயிலாக அறிமுகமான பலர் இன்று உலகறியும் எழுத்தாளர்களாக மிளிர்கின்றனர்.

இவரது சகல ஆக்கங்களையும் விரும்பி வாசிக்கும் இரசிகையாக நானிருந்தபோதிலும் எனது நாட்டம் அவரது குறுங்கதைகளின்பால் அதிகமாக இருந்தது.1986இல் செம்பியன் "குறுங்கதை நூறு" எனும் நூலாக தனது குறுங்கதைகளை தொகுத்து வெளியிட்ட பின்னர் அத்தொகுப்பை என்னுடன் வைத்திருக்கும் பைத்தியம் எனக்கிருந்தது. அதற்கு ஒரு காரணம் உள்ளது. வீடு" பணியகம் என மாறி மாறி ஏதோ வேலைகள் இருந்தவண்ணம் இருக்கும் வாழ்க்கை என்னுடையதாக இருந்தது. வாசிப்பதற்கு நூல்களுக்கு பஞ்சமில்லை என்றாலும் நேரத்தை தேடிப் பிடிக்கவேண்டிய நிலை. பயணம் செய்யும் நேரம் வீணாகாது பயன்படுத்தவேண்டும் என்று அறிவு கூறும். பெரும்பாலான பயணம் நின்றவாறுதான். அதிரஷ்டம் எப்போதாவது கிட்டினால் இருக்கும் வசதி கிட்டும். அந்த வேளையில் வாசிக்க கைப்பையில் ஏதாவது இருக்கவேண்டும். அதை வாசித்து முடிக்க முன் பயணம் நிறவெய்திவிட்டால் மிகுதியை வாசிக்கும்வரை அது



மூளையைக் குடைந்துகொண்டிருக்கும். இப்போது புரிகிறதா நான் ஏன் குறுங்கதைப் பிரியையாக மாறினேன் என்று.

கதை கூறும் வழக்கம் ஆதி காலம் தொடக்கம் இருந்துவருகிறது. அதன் உருவம், சொல்லும் முறை முதலானவற்றில் வேறுபாடுகள் காலத்திற்குக் காலம் ஏற்பட்டன. கேட்ட கதையை எழுதி வைத்து படிப்பதற்கு வசதிகளற்ற காலத்தில் இலகுவில் மனதில் பதியவைக்கக்கூடிய பாடல்களாக அவற்றைக் கூறினர். இவ்வாறே அச்சில் பதித்த காலத்தில் வசனநடையில் எழுத ஆரம்பித்தனர். காலத்தின் அருமை கருதி, சுருங்க எழுதும் முறையையும் பலர் கையாண்டனர். பாக்கள் பாடிய காலத்திலும் குறட்பா போன்ற வடிவங்களிலும் எழுதியுள்ளனரல்லவா. அதையொத்ததே குறுங்கதைகளும்

சிறிய வடிவமைப்பைக் கொண்ட கதைகளை கடுகுக் கதைகள், குட்டிக் கதைகள், சின்னொட்டிக் கதைகள், குறுங்கதைகள் என வெவ்வேறு பெயர்களில் வெளியிட்டாலும் அவை ஒரே வகையானவையே. குட்டிக் கதைகள் என சிறுவர் கதைகளையும் குறிப்பிடுவதையும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும். உருவக்கதைகளும் குறுகிய வடிவிலேயே அமைகின்றன.

செம்பியன் செல்வன் குறுங்கதையை "வாமன அவதாரம்" எனக் கூறியுள்ளது மிகவும் பொருத்தமானது. விஸ்வரூபத்துக்குள்ள அனைத்து மகத்துவங்களும் வாமன உருவுக்கும் இருக்கின்றன.. இருக்கவேண்டும். கதை சில வரிகளில், சில சமயம் ஒரு வசனத்தில், ஏன் ஓரிரு எழுத்துகளில்கூட எழுதப்பட்டிருக்கலாம். எப்படியிருப்பினும் கதையை வாசிக்கும்போது மனதிற்கு நிறைவு தரவேண்டும். தொட்டனைத்தூறும் மணற்கேணியாக மீளச் சிந்திக்கும் போதெல்லாம் புதியபுதிய இரசனை ஊற்றுகள் பீறிட்டுப் பெருக்கெடுக்கவேண்டும். இவ்வாறு எழுதும் திறன் எல்லோருக்கும் சித்திப்பதில்லை.

"குறுங்கதை நூறு" தொகுப்பிலுள்ள அனைத்து கதைகளுமே அமர்ர செம்பியன் செல்வனின் எழுத்துவன்மைக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. இறுதிக் கதை தவிர்ந்த ஏனையவை மிகவும் சிறியவை. தனது சிறிய கதைகளுள் ஆழமான கருத்துகளை இவர் சுவைபட அழகுற வெளிப்படுத்தியுள்ளார்.

"பலரும் கவனிக்கத் தவறிய அற்பமென ஒதுக்கப்பட்ட சமுதாய முரண்முனைகள் நம்முள் எழுப்பும் குறுகுறுப்புகள் குறுங்க்தைகளாகின்றன."என அவரே தனது கதைகள் உருப்பெற்றது எவ்வாறெனவிளக்கியுள்ளார்.

உதாரணமாக "மகத்தான தொழில்" என்ற தலைப்பில் செம்பியன் எழுதிய கதையைப் பார்ப்போம்.

"ஒரு ஜனநாயக நாட்டின் பிரதான தொழில் என்ன?" என ஆசிரியர் வினாவினார்.

"முதலாளிகள் நடத்தும் பொதுசனத் தேர்தல்." எனப் படீரென பதில் வந்தது.

இவ்வளவுந்தான் கதை. 1986ஆம் ஆண்டிற்கு முன் எழுதப்பட்டது. இதை வாசிக்கும்போது எம்மை ஆழமாகச் சிந்திக்க வைக்கிறது. அரசியலில் காணப்படும் முரண்முனை உள்ளத்தைக் குத்தி உதிரம் கசிய வைக்கிறது. அவற்றுடன் இன்றைய நாட்டு அரசியலைச் சாடி இப்பொழுதுதான் எழுதப்பட்ட புத்தம் புதிய கதையாகத் தோன்றுகிறது. இந்த நூலிலுள்ள நூறு கதைகளுடன் இது வெளிவந்த பின்னர் அவர் படைத்த கதைகளும் ஒன்று தவறாமல் இத்தகைய சிறப்புகள் கொண்டனவாக திகழ்வது இராஜகோபாலின் அற்புத இலக்கிய ஆற்றலினாலாகும். ஒரு நீண்ட கதையை பல நயங்களோடிணைத்து எழுதுவது போன்று குறுகிய கதையொன்றை எழுதுவது கடினம். அத் திறமை செம்பியன் செல்வனிடம் இயல்பாக அமைந்து வாசக நெஞ்சங்களை ஈர்த்தெடுத்து வைத்திருக்கிறது.

என் இரசனைக்கு விருந்து படைத்த மற்றொரு கதை பற்றியும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த கதைதான் அது. "பழைய புராணக் கதைதானே!" என்பீர்கள். செம்பியனின் கரம் புராணத்திற்கும் புதுமை பூச வல்லதன்றோ? கதை இப்படி அமைகிறது. வைகையின் பெருக்கை, அழிக்க வந்த வெள்ளத்தை ஆக்கத்திற்கு பயன்படுத்துவோம் என தொழிலாளர் வர்க்கம் ஒன்று திரள்கிறது. உழைப்பின் கீதம் பரமனின் காதுகளிலும் விழுகிறது.விழுந்த்தம் மண்வெட்டியுடன் அவரும் பூமிக்கு இறங்கி வருகிறார்.உழைப்பின் பின் கிடைத்த ஓய்வு தபசினை விட சிறந்த உணர்கிறார். மகிழ்ந்து பாடி ஆடுகிறார். தொழிலாளியின் ஆனந்தம் பாண்டியன் கண்களை மறைக்க கைப்பிரம்பு சுழன்றது. உலகின் தொழிலியக்கம் ஒரு கணம் தம்பித்தது ஒவ்வொரு தொழிலாளியும் தனக்கு விழுந்த அடியாக குரல் கொடுத்தான்.


"முதல் அடி" எனும் அக்கதை இவ்வாறுதான் செல்கிறது. "பிட்டுக்கு மண் சுமந்த கதை" எனச் சொன்னால் எனக்கு திருவிளையாடல் புராணம் நினைவுக்கு வருவதில்லை. "முதல் அடி"தான் தலை நிமிர்த்தி நிற்கும். தத்துவார்த்தமான கதை. சகல தரப்பினருக்கும். எனது சொற்கள் வெற்றுச் சொற்கள். செம்பியன் செல்வனின் ஆக்கத்தை வாசியுங்கள். எந்த வகை சார்ந்ததாயினும் வாசித்துப் பாருங்கள். சொற்களென்ன எழுத்து ஒவ்வொன்றிலுமே சுவை ஊறும்.

"விரைந்தோடிக்கொண்டிருக்கும் எங்கள் வாழ்க்கையில் வாசிக்க நேரம் எங்கே?" என்கிறீர்களா? குறுங்கதை இருக்கிறதே.

ஆன்மீகம் /தத்துவம்

# முட்கள் ஓடியும் ஓசைகள்

செம்பியன் செல்வன்



கடந்தவனே!

உன்னைத் தேடுவதிலேயே என் காலங்கள் கடந்துவிட்டன.உன்னைத் தேடிப்பெறுவதா?நீ நாடி அடைவதா?

நான் ஈதொன்றையும் அறியேன்.வகை பிரிக்கவும் தெரிந்திலேன்.எது,எப்படி-இருந்தாலும்

உன்னை அடைவதே -உன் தரிசனம் பெறுவதே என் இலக்காயிற்று..

ஆயினும்,

என் இலக்குகள் தவறிக்கொண்டேயிருக்கின்றன.

தவறிய இலக்குகள் எதை எதையோ காயப்படுத்தி...என் நெஞ்சம் இரத்தக் களரியாகின்றது.

இரத்தம் சொட்டும் நெஞ்சுடன்,நீ எங்கெல்லாம் இருப்பதாகக் கூறினார்களோ அங்கெல்லாம் ஓடோடிச் சென்றேன்.உன் நினைப்பின் வேகத்தில் என் பயணம், பாதை இரண்டினதும் தொல்லைகள்..சுமைகள்..இழப்புகள் எதையுமே தெரியவில்லை.

ஆனால் என் உடல் நலம்-

ஆத்ம சிறகுகளை உதிர்த்த சகோரப்பட்சியாய்

வீர நகங்களை இழந்த வரிப்புலியாய்

தந்தம் இழந்த வாரணமாய்,துடிதுடித்த போதும்

உன் நிழல் தேடி அடைக்கலம் நாடி ஓடிய பதைபதைப்பில் -என் உள்ளம்

வாடைக்காற்றின் பசுந்தளிராய் நடுக்கமுறுகின்றது.

உன் தரிசனம் கானா நிலையில் வாடலாயிற்று.

இல்லை பழுத்து சருகாகலாம்.அது உதிரும் ஓசையாவது உன் திருச் செவியில் கேட்கலாகும். ஆனால்,

தளிர் வாடி உதிர்ந்தால்...ஓசை கூட எழாதே.....

தளிரிதயம் வதங்கி உதிரும் முன் தரிசன இலட்சிய தாகத்தில் தவிக்கின்றது.அதனால் - உன்னைத் தேடும் வேடிக்கை காட்டுத்தியாகின்றது.

பயணம்,பதைபதைப்பு, நடை... மீண்டும் பய..ண..ம்.

ஆ! என்ன ஏமாற்றம்.கானலைகள் கண்டுமுன் நீராட்டுகின்றன.

ஆச்சரியமான ஏமாற்றம் உற்பவித்த மனச்சோர்வில் ரௌத்திரம் பொங்குகின்றது.

-ருத்திர பூமியில் உன் நெற்றிக்கண்ணென உன் இருப்பிடத்தை நன்கறிந்தவர்கள் என நான் எண்ணியவர் காட்டிய இருப்பிடங்கள் -

வவ்வால் எச்சம் நிறைந்த இருட்குகைகள்.

பாழடைந்த மாளிகைகள் இருட்டின் அரசுகள்... பாம்புப்புற்றுகள்...

கலவினோத்தானே!

நீ இருக்குமிடங்கள் இப்படியா இருக்கும்?

அறியாமையான இருட்டா நிலவும்?

அங்கு, தூய்மை அல்லவா அரசோச்சும்.

படிகத்தின் ஒலியென

தெளிந்த நீரோடையென

காலை மலரின் விகசிப்பென

பனித்துளியென

பளீரிடாதா?

எங்கெல்லாம் தூய்மையின் தரிப்பிடங்கள் தென்படக்கூடுமோ அங்கெல்லாம் ஓடோடிச் சென்றேன். ஆனால்,

தூய்மைகள்....அசுத்தமாகி.. அலங்கோலமாயிருந்தன.

புனிதங்களில் அசுத்தக்கறை படிந்து களங்கப்பட்டுக் காண்பேன்.என் கடமை இரண்டாயிற்று.

தூய்மையைத் தேடுவேனா? உன்னைத் தேடுவேனா?

தூய்மையும்,நீயும்.

தூய்மை எங்கே? தூய்மை எது?....எப்படி?....எங்கே?... என் நெஞ்சம் வினாக்கொளுக்கிகளால்,மந்தைக்குத் தழை பறிக்கும் இடையனின் வளைதடியாயல்லாது,மதநீர் சொரியும் மத்தகத்தையடக்கும் அங்குசமாய் வலியெடுத்தன.

தூய்மை- உடலா, உள்ளமா, உலகா..உலகின் சடப்பொருளா....உயிர்ப்பொருளா.

அணுவா... அண்டமா...எதிலிருக்கிறது?

-என் நெஞ்சப் பிசைதலில், எதுவோ சொட்டுகிறது. எங்கிருந்தோ..எதுவோ...எதோ..என் மனதில் கூவுகிறது.

'உள்ளமே கோயில்..நெஞ்சமே கர்ப்பக்கிருகம்... ஆத்மாவே தீபச்சுடர்'

என் மனதில் காலை ஒளி பரவுகிறது.

தேவனே!

என் நெஞ்சத்தை உனக்கு எப்படி ஆலயமாக்குவேன்?

என் நெஞ்சம் தூய்மையானதா என்பதனையே அறியேனே.ஆனாலும்,

ஹம்சத்துளிகா மஞ்சமென எனக்காக என் இதயத்தை அமைக்க ஆசையால் அவாவுகிறேன்.

நெஞ்சத்தை தூய்மைப்படுத்த எடுத்த துடைப்பமே குப்பைகளாக உதிர்கின்றன.

குப்பையாக குப்பைவாரே மாறிவிடுகின்றதே.

இறையே! இது என்ன சோதனை?துடைப்பத்தை வீசி எறிந்துவிட்டு,

மனவைராக்கிய வாரினால் அள்ளுகிறேன்.

என்ன கொடுமை?

குப்பை மேட்டின் கோழிக்கால்களில் சிதறும் குப்பை கூளங்களாக...

என் மனக்கஞ்சல்கள் புறப்படுகின்றன

இவ்வளவு கஞ்சல்களை வைத்துக் கொண்டா,தூய்மையை நாடி ஓடினேன்?நோய் பரப்பும் கிருமிகளைக் கையில் வைத்துக் கொண்டா,நோயாளியைச் சுகம் விசாரிக்கச் சென்றேன்.இவ்வளவு அழுக்குகள் எப்படி என்னில் சேர்ந்தன?

வியப்புத் தாளவேயில்லை. விம்முகிறேன்.

அதிருப்த்தியும் ஏமாற்றமும் நிறைக்கின்றன.

மனம் வைராக்கியம் கொள்கிறது.

மனவாரினால் - குப்பையை அள்ள அள்ள.. சகதியில் கால் வைத்தவன் கதையாகி..

குப்பை குறைவதற்குப் பதிலாக...மன ஆழமே விகாரமாக மாறுகின்றது.புண்ணிருந்த குழியாகி ஆழம் ஆழமாக...

இறையே!

இந்த ஆழத்தைக் காணக்காண எனக்குப் பயம் மேலிடுகிறது.என்னைக் காப்பாற்று...

என் கதறலிலும்,என் மன ஆழமே அதிகரிக்கிறது.

இறையே!

உனக்குச் சிம்மாசனம் அமைக்க முயன்ற நான்... பொறியாசனமாக அமைகின்றேன்?

தேவா!

நெஞ்சப்பொறியும் கோவிலாமே?

என் வினாவினால் உனக்குச் சிரிப்பு வருகிறதா?

உன்னைச் சிரிக்கவைக்க திருப்தியுடன் நான் திரும்புகையில்

'இப்போதும் வென்றவன் நீயே' என வாய் முணுமுணுக்கிறது.

**நன்றி: நாவலின் கீதை**

❍

பெயர்:

இராஜகோபால் .ஆ

புனை பெயர்:

செம்பியன் செல்வன், ராஜகோ

பிறந்த இடம் :

திருநெல்வேலி

பிறந்த திகதி:

01/01/1943

வாழ்ந்த இடம்:

அத்தியடி

புதிய தெரு, யாழ்ப்பாணம்

தொழில்:

ஆசிரியர், விரிவுரையாளர்,

அதிபர், கோட்டக் கல்வி வலய அதிகாரி

கல்வித்தகைமை:

புவியியல் (சிறப்புக் கலைப் படடதாரி)

கல்வி கற்ற கல்வி நிறுவனங்கள்:

யாழ்/ இந்து தமிழ் ஆரம்பப்பாடசாலை

யாழ்/ இந்தக் கல்லூரி

பல்கலைக்கழம்(பேராதனை)

ஆர்வம்:

சிறுகதை, நாவல், குறுங்கதை உருவகக்கதை,கட்டுரை ,

விமர்சனம்,ஆன்மீகம் ஆய்வு, இசை, நாடகம், சினிமா,

பத்தி எழுத்து,குறும்படம்,பதிப்பு, இதழியல்

இதழாசிரியர்:

விவேகி (இணை ஆசிரியர்)

புவியியல், (இணை ஆசிரியர்)

நுண்ணறிவு(இணை ஆசிரியர்)

கலைஞானம்(ஆசிரியர்) (1982-1983)

இலக்கியம் (இணையாசிரியர்)

அமிர்தகங்கை (ஆசிரியர்)

படைப்புகள் வெளிவந்த ஊடகங்கள்:

செங்கதிர், காலத்தின் குரல்கள், கதைப்பூங்கா, கலைச்செல்வி ,

விண்ணும் மண்ணும்,கலைப்பூங்கா, ஈழநாடு, குங்குமம், தமிழின்பம்,அமுதம்,

கதம்பம், மல்லிகை ,வீரகேசரி ,வெளிச்சம், அமிர்த கங்கை, ஈழமுரசு,

தினகரன், சுதந்திரன், நான்,நமது ஈழநாடு,புலரி, ஈழநாடு, தெரிதல்,மாணிக்கம், சிரித்திரன்

பரிசுகள்/விருதுகள்:

இலங்கை கலைக் கழக நாடக பிரதிப்போட்டி (1966,1967)

இலங்கை கலாச்சார பேரவை நாடகப்பிரதிப் போட்டி(1975,1976)

ஈழநாடு 10 ஆவது ஆண்டு நிறைவுப் போட்டி- -(விடிய இன்னும் நேரமிருக்கு)

வீரகேசரி பிரதேச நாவல் போட்டியில் இரட்டை முதல் பரிசு (நெருப்பு மல்லிகை- 1981 )

கலைச்செல்வி சிறுகதைப்போட்டி -முதற் பரிசு – (இதயக்குமுறல் -1962)

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் -சிறுகதைப்போட்டி- மூன்றாம் பரிசு- (உணர்ச்சிக்கு அப்பால்-1963)

இலங்கை வானொலி- சிறுகதைப்போட்டி- (நிலம் யாருக்காக காலடியில் கிடக்கிறது?-1965)

வீரகேசரி சிறுகதை போட்டி- மூன்றாம் பரிசு(-உப்பங்கழி -1966)

ஈழநாடு 10 ஆவது ஆண்டு சிறுகதைப்போட்டி- (பூவும் கனியும்-1968)

நமது ஈழநாடு கனகசெந்திநாதன் கதா விருது-(மாயாவதியின் கனவு -2004-)

இலங்கை சாகித்திய மண்டல பரிசு -சிறுகதைத் தொகுதி(சர்ப்ப வியூகம்-2003 )

கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றம் -விருது-1963

யாழ்.கத்தோலிக்க காலை இலக்கிய வடடம் -இலக்கியவித்தகர்-2003

நாடகங்கள்:

இந்திரஜித் (1966)

இருளில் எழும் பெருமூச்சுகள்(1967)

சின்ன மீன்கள் (1975)

எரியும் பிரச்சினைகள் (1976)

விடிய இன்னும் நேரமிருக்கு

நூல்கள்:

சிறுகதைத்தொகுதி:

அமைதியின் இறகுகள் (1966)

சர்ப்பவியூகம் – (2002)

குறுங்கதைகள் நூறு (குறுங்கதைகள்)(1986)

தொகுப்பாசிரியர்:

ஈழத் தமிழ்ச் சிறுகதை மணிகள்(1973)

விண்ணும் மண்ணும்(சிறுகதைகள்)(1963)

சம்பந்தன் சிறுகதைகள் (செங்கை ஆழியானுடன்)(1998)

நாவல்கள்:

நிழல்கள் (சுதந்திரன்) செங்கை ஆழியானுடன்)(1963)

நெருப்பு மல்லிகை(1981)

நேரங்கள் (அச்சில்)

கர்ப்பக்கிரகம் (அச்சில் )

விடியலைத் தேடும் வெண்புறாக்கள் (தொடர்கதை)( அச்சில்)

கானகத்தின் கானம் (1989)

நாடகம்:

மூன்று முழு நிலவுகள் (1967)

விடிய இன்னும் நேரமிருக்கு(1971)

ஆன்மிகம்/ தத்துவம் :

நாணலின் கீதை (1982)

பொது:

ஐக்கிய அமெரிக்காவின் புவியியல்(1979)

உலகக்குடியேற்றங்கள் உருவான கதை(1982)


பௌதிக சூழல் காலநிலையியல் (செங்கை ஆழியானுடன்) (1984)

மரணம்: 20/05/2005

முகவரி:

அத்தியடி
புதிய தெரு, யாழ்ப்பாணம்.

# செம்பியன் செல்வன் ஆசிரியராக இருந்து வெளியிட்ட இதழ்:







# முந்தைய இதழ்கள்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022


சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்